# புகையில் கருகிய பூ



திக்குவல்லை கமால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையில் கருகிய பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள போதும், இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துகளைப் பிரதிபலிக்கவில்லை.

# புகையில் கருகிய பூ

–ஒலி நாடகங்கள் –

**உரிமை**

–திக்குவல்லை கமால்–

**முதற்பதிப்பு**

–ஆகஸ்ட்டு 2001–

இலங்கை தேசிய நூலகம்– வெளியீட்டிலுள்ள பட்டியற் தரவு.

கமால், திக்குவல்லை
புகையில் கருகிய பூ / திக்குவல்லை கமால்
பண்டாரகம; ஆசிரியர், 2001. பக்கம் (viii) 128
ச.மீ :21
ISBN 955-95926-5-3 விலை: ரூ 150/=
i.894.8112 டிடிசி ii.தலைப்பு
1.நாடகம்: தமிழ்

ISBN 955-95926-5-3
PUKAYIL KARUKIYA POO
(Rodio Dramas)

Copy Right- Dikwella Kamal

First Edition- August 2001

Pages- viii-128

Layout & Cover Desing- Nilam Publications
87 Viyasar road, Thonikkal, Vavuniya.

Cover Art- Siththanthan.

Printd By- Q.G.Graphics
110-1/4, Maliban Street, Colombo-11

Price- Rs150/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையில் கருகிய பூ

திக்குவல்லை கமால்

பரீதா பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| * | கோடையும் வரம்புகளை உடைக்கும் (சிறுகதைகள்) | 1984 |
| * | குருட்டு வெளிச்சம் (சிறுகதைகள்) | 1993 |
| * | ஒளி பரவுகிறது (நாவல்) | 1995 |
| * | விடுதலை (சிறுகதைகள்) | 1996 |
| * | விடைபிழைத்த கணக்கு (சிறுகதைகள்) | 1996 |
| * | புதியபாதை (சிறுகதைகள்) | 1997 |
| * | நச்சு மரமும் நறுமலர்களும் (நாவல்) | 1998 |
| * | வரண்டுபோன மேகங்கள் (சிறுகதைகள்) | 1999 |
| * | பாதை தொரியாத பயணம் (நாவல்) | 2000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

எழுத்தாளரும் பத்திரிகையாளருமான
காலஞ்சென்ற
**எச்.எம்.பீ.முஹிதீன்**
அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வப்போது இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய எட்டு நாடக்ங் களின் தொகுப்பு இது.

ஒலி நாடகங்களுக்குரிய சிறப்பம்சங்களை அனுசரித்து இந் நாடகங்கள் எழுதப்பட்டுள்ளன.

சமூக நாடகங்களுக்கென்று தனியானதொரு மொழி நடை "முஸ்லீம் சேவை"யில் நீண்டகாலமாகப் பேணப்பட்டு வருகிறது. வானொலி நாடகக்கலைஞர்கள் கொழும்பு வட்டாரத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதும் இதற்கொரு காரணமாகலாம்.

பிரதியாக்க எழுத்தாளர்கள் எங்கிருந்து எழுதினாலும் இதனை அனுசரித்தே எழுத வேண்டிய நிலை. ஒரு சில பரீட்சார்த்த முயற்சிகளை நான் குறிப்பிடவில்லை.

எனது சிறுகதை, நாவல் போன்றவற்றில் இடம்பெறும் பிரதேச மொழி நடையை இதனோடு போட்டுக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. மேலும்,

இந்நூலாக்கத்தில் ஒத்துழைத்த திக்குவல்லை எழுத்தாளர் சங்கத் தலைவர், கவிஞர் யோனகபுர ஹம்ஸா, ஓவியர் முல்லைத்தீவு கே.எல்.எம்.றனீஸ், சந்திரபோஸ் சுதாகர், சித்தாந்தன், அச்சாளர் சகோதரர் இன்ஹாமுல் ஹஸன், ஆகியோருக்கு என் நன்றிகள்.

இலக்கிய தாகமே இதயதாகம்

**191-B**
**அட்டுலுகம,**
**பண்டாரகம,**
**இலங்கை.**

**நட்புடன்**
*திக்குவல்லை கமால்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதவுகள்


| | |
|---|---|
| 01. அமரகாவியம். | 001 |
| 02. ஒரு புதிய ஜீவன் | 027 |
| 03. மரியாதை | 042 |
| 04. புகையில் கருகிய பூ | 056 |
| 05. தன்மானம் | 071 |
| 06. வானம்பாடி | 084 |
| 07. சத்தியம் | 101 |
| 08. நேற்றுவரை... | 115 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரகாவியம்

கவிதை நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்:**

**விழாமண்டபம்**

**பாத்திரங்கள்:**

**கவிஞர். அஸீனா.**

(கலகலப்பு... படிப்படியாக அமைதி)

கவிஞ: தோழா! உம்தோள்விம்மத் துணிந்தோடி வாருங்கள்.
ஏழா புறமிருந்தும் எழுந்தோடி வாருங்கள்
வாழாமல் நாமிங்கே வளைந்திருக்கப் பிறக்கவில்லை.
வாழாமல் சாவோரை வாழவைக்கப் பிறப்பெடுத்தோம்.
பிச்சைக் கலையாமல் பசிக்குணவு கிட்டும் நாள்.
பச்சை நிலம்கொத்திப் பயிர்விதைக்க கிட்டும் நாள்
குச்சில் வீடேனும் குடியிருக்கக் கிடைக்கும் நாள்
நிச்சயம் எமக்காக நாம் படைக்கும் நன்னாளாம்.
(கலகலப்பு.....கைதட்டல்)

அஸீ: (தனக்குள்)
என்ன அற்புதம்! எவ்வளவு கம்பீரம்!
எண்ணம் அவர் பக்கம் என்னை ஈர்க்கிறதே...
நிச்சயம் இவரோடு நெருங்கிக்கதைத்திடணும்.
அச்சம் எதற்கு அரங்கு கலையட்டும்!

கவிஞ- (மீண்டும் அமைதி)
போதனையால் கொழுத்தோரை புரட்டும் நாள் அந்நாள் -தான்.
சாதனையால் இவ்வுலகம் சுடரும் நாள் அந்நாள் தான்.
ஏழைகள் உழைப்பாளர் எல்லார் முகங்களிலும்
வாழ்க்கையின் நம்பிக்கை வண்ணமுறச் சுடரும் நாள்.
எல்லோரும் இந்நாளைக் கொண்டாட எழுந்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இந்நாளைக் கொண்டாட இதோ எழுந்தோம்
(கலகலப்பு... கைதட்டல்... அமைதி)

அஸீ: (தயங்கியபடி)
கவிஞர் அவர்களே! கொஞ்சம் கதைக்கலாகுமா?

கவிஞ: (சிரிப்புடன்)
கதைக்கக் கூடவா அனுமதி தேவை?
எதையும் கதைக்கலாம் எவரும் கதைக்கலாம்.

அஸீ: தங்கள் நல்ல மனதுக்கு தாராளமாய் நன்றி.
உங்கள் கவிதைகள் நான் ஏராளம் படித்துள்ளேன்.

கவிஞ: ரசனைக்குத்தக்க விருந்தாய் அமைந்தனவோ?

அஸீ: ஆமாம்...
அத்தனையும் முத்துக்கள்... தித்திக்கும் தேன்துளிகள்

கவிஞ: நல்ல சந்திப்பு தங்களைப் பற்றியும்...

அஸீ: சொல்ல வேண்டுமோ? சொல்லத்தான் நினைக்கிறேன்.
இந்தக் கல்லூரி உயர்வகுப்பு மாணவி நான்
சொந்த ஊர்கூட இதுவேதான்: போதாதா?

கவிஞ: அப்பா எங்குள்ளார்? என்ன தொழில் செய்கின்றார்?

அஸீ: இப்போதே நீங்கள் ஏன் அதையெல்லாம் கேட்கின்றீர்?

கவிஞ: எப்போது சந்தர்ப்பம் இதைவிட்டால்... அதனால்தான்.

அஸீ: (சிரிப்பு)
அப்பா பெரும்புள்ளி.. வயல்தோப்பு ஏராளம்
செப்ப முடியுமோ... கொள்முதல் கடைகள் கார்

கவிஞ: அப்பப்பா (பெருமூச்சு)

அஸீ: பக்கத்தில்தான் எங்கள் வீடும் இருக்கிறது.
தக்க தருணமது தருமழைப்பை ஏற்றிடுங்கள்.

கவிஞ: மிக்க நன்றி பிறிதோர் சமயம் நான்

அஸீ: இக்கணமே வரவேண்டும்... இனியெங்கே இப்பக்கம்?

கவிஞ: நிச்சயம் வருவேன் நான்... நண்பர்கள் அதோ என்னை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீ: அழைக்கின்றார் சரிபோங்கள்
அஞ்சல் வரைந்திடுவேன்.
கவிஞ: (திரும்பி)
கவலை வேண்டாம் கண்டவுடன் பதிலிடுவேன்.
(தனக்குள்)
ஆயிரம் ரசிகைகளை அன்றாடம் காணுகிறேன்.
இப்படியோர் ரசிகையினை என்றுமே கண்டதில்லை.
பாயிரங்கள் பாடுதற்கு புலமைதரும் பேரழகு
பண்புகள் பணிவெல்லாம் எனையேதோ செய்கிறதே!

**காட்சி - 2**

**இடம்:**

**மஹ்மூத் முதலாளியின் வீடு.**

**பாத்திரங்கள்:**

**மஹ்மூத். அஸீனா.**

மஹ்மூ: (யோசனையுடன்)இரவும் வளர்கிறது..அஸீனா வரவில்லை...
வரவர அவள் போக்கில் மாற்றம் தெரிகிறது...
ம்... கல்லூரிப் படிப்பென்றும் கலைவிழா காட்சியென்றும்
சொல்லித் திரிகின்றாள்... சொன்னால்தான் கேட்பாளா?
செல்லப் பிள்ளையாய் வளர்ந்துவிட்ட செல்வமவள்
(நேர இடைவெளி... கதவு தட்டல்)
மஹ்மூ: ஆ... அஸீனாவா என்ன இது இவ்வளவு நேரம்?
அஸீ: அப்பா... ஏழுமணிக்குத்தான் எல்லாம் முடிந்ததங்கு
தோழிகள் நாங்கள் கூடித்தான்சென்றிருந்தோம்.
மஹ்மூ: அப்படியா இன்றங்கே என்னதான் விசேடமோ?
அஸீ: வட்டாரக் கலைவிழாதான் வந்திருந்தார் மந்திரியும்.
மஹ்மூ: ஆ... கட்டாயம் நான்கூட தெரிந்திருந்தால் வந்திருப்பேன்.
அஸீ: போட்டிகள். பரிசளிப்பு. நாட்டார் நிகழ்ச்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பாட்டுக் கச்சேரி. நாட்டிய நாடகங்கள்..
முன்னொருநாள் எம்மூரில் கவியரங்கேற்றிய...

மஹ்மூ: ஏனிந்த மௌனம்? அத்தனையும் சொல்மகளே

அஸீ: முன்னொருநாள் எம்மூரில் கவியரங்கேற்றிய...
(தயக்கம்....)
முன்னணிக் கவிஞர் காலிதும் வந்திருந்தார்.

மஹ்மூ: அப்படியா..... ம்.... (தனக்குள்)
எதையோ மனதுக்குள் இருத்திக்குழம்புகிறாள்.
அதுதான் இவளின் அவதிக்குக் காரணமோ?

அஸீ: (திரும்பி)
உள்ளே போய் உடுப்புக்களை மாற்றி வருகிறேன்.

மஹ்மூ: ஆ..நல்லது மேசையிலோர் மடலுமிருக்கிறது.
(பெருமூச்சு)

அஸீ: முத்தான எழுத்துக்கள் முறுவல் புரிகிறதே
சத்தான கருத்துக்கள் சரமாய்ச் சொரிகிறதே.
பத்தாம் கடிதமிது பாவலர் காலித் என்
சொத்தாகும் நாளும் சீக்கிரம் மலராதோ... ஆ

## காட்சி - 3

**இடம்:**

**மஹ்மூத் முதலாளியின் வீடு**

**பாத்திரங்கள்:**

**மஹ்மூத். அஸீனா**

மஹ்மூ: அஸீனா... அஸீனா...

அஸீ: வாருங்கள் அப்பா.

மஹ்மூ: கொள்முதல் செய்வதற்காய் கொழும்பு போய்வந்தேன்.

அஸீ: நல்ல களைப்பிருக்கும்: இதோ தேநீர் கொண்டுவந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹ்ரூழு: இருக்கட்டும் அருந்துகிறேன். இன்னோர் சிறு விடயம்
சரிபார்க்க வேண்டுமம்மா கொள்முதல் கணக்குகளை
அஸீ: (இதமாக)
அரைமணி நேரத்தில் வருகின்றேன். போதாதா?
மஹ்ரூழு: பொறுப்பான காரியங்கள் இருக்கிறதா அதற்கிடையில்
அஸீ: வானொலியில் கவிஞர் காலிதின் தேனொழுகும்....
மஹ்ரூழு: (கோபமாக)
நிறுத்து! நெடுகிலும் உன் கூத்தைப்பார்த்திருக்க முடியாது.
அஸீ: (பயந்து)
ஏனப்பா என்மீது எரிந்து விழுகின்றீர்?

மஹ்ரூழு: (கோபமாக)
எரிந்துவிழவில்லை... எரித்து விடுவேன்.
அஸீ: (அழுகையோடு)
ஏனப்பா அதற்கெல்லாம் நான்செய்த தவறென்ன?
மஹ்ரூழு: ம்... கல்லூரிப் படிப்பென்றும் கலைவிழா காட்சியென்றும்
கள்ளத் தனமாகக் கதைத்துத் திரிந்ததெலாம்
நல்ல வேலைகளோ! நாளொரு நெடுங்கடிதம்
எல்லாம் நான் அடுக்கடுக்காய் அறிந்தே வைத்துள்ளேன்.
அஸீ: ஆ... நீங்கள் அதையா சொல்கிறீர்கள்?
மஹ்ரூழு: ஆமாம்
அதைத்தான் சொல்கிறேன். அவனைத்தான் சொல்கிறேன்.
ம்... பிச்சைக்காரக் கவிஞன் காலிதைத்தான்
குச்சில் வீடொன்றாம் அவனின் குடியிருப்பு
கொச்சைத் தனமாய் ஏதோ கிறுக்குவதால்
உச்சந்தலையில் உனக்கா குளிர்ச்சி?
அஸீ: அப்பா...
எல்லை அடியுங்கள் எனக்கு உதையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பதட்டமாக)
அன்னார் மீது அபாண்டம் சுமத்தாதீர்கள்.
உங்கள் பணத்தின் முன் பிச்சைக்காரன்தான்.
உலக இலக்கியத்தின் ஒப்பில்லாச் செல்வமவர்.

மஹ்ரூழ: (இரைந்து)
நிறுத்து உன் நீள் நாக்கை. இலையேல்
அறுத்து விடுவேன் அறிந்துகொள்.

அஸீ: (அழுகை... நேர இடைவெளி... தனக்குள்)
தீப்பிழம்பாகச் சுவாலை விடுகின்றார்.
அப்பா இதற்கு எப்போதும் சம்மதியார்
என்றன் தலைவிதி இதுதானா இறைவா
என்னவழி இனி எல்லாமே சூனியமா?

மஹ்ரூழ: அஸீனா...
இன்றோடு உந்தன் படிப்பு முடிந்தது... ஆமா

அஸீ: அப்பா...
எதற்காக என்னை ஏங்கவைக்கின்றீர்?

மஹ்ரூழ: உந்தன் விருப்புக்கு ஆட்விட்டதனால்
வந்த வினை இதென இப்போது புரிகிறது.
எந்தன் விருப்புக்கு ஏற்ற முறையினிலே
எல்லாம் இனி நடக்கும்! அடுத்த வாரமே...

அஸீ: (அழுகையோடு)
சொல்லுங்கள் எல்லாம் சொல்லித்தொலையுங்கள்.

மஹ்ரூழ: (நிதானமாக)
அடுத்த வாரமே உனக்குக் கல்யாணம்
தொடுத்து முடித்திட்டேன் எல்லா ஏற்பாடும்.

அஸீ: (பேரழுகை)
அப்பா...

மஹ்ரூழ: கூப்பாடு வேண்டாம். காரியம் இனி நடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 4**

**இடம்:**

கவிஞரின் வீடு

**பாத்திரங்கள்:**

**கவிஞர், முர்ஷிதா.**

கவிஞர்: (கவலையுடன்)
மூன்று மாதமாய் மூச்சே எனக்கில்லை
வான நிலாவென வந்தென் வாழ்விலே
தேன் சொரிந்தவள் செய்தி அறிகிலேன்.
நான் வரைந்திடும் நிருபம் கண்டவள்
ஏன் பதில்மடல் வரையவில்லையோ
(பெருமூச்சு)
நண்பர்கள் பலர் சொன்ன தகவலில்
உண்மை உள்ளதோ இல்லையோ அதை
இன்று பார்க்கிறேன் இறுதி நாள் இது.
இன்றுமில்லையேல்... (கவலையுடன்)
உண்மையில் அவள் மாற்றான் மனைவிதான்.
(நேரஇடைவெளி... மணியொலி)
ஆ... தபாற்காரன் தருவானா அவள்கடிதம்
(நேர இடைவெளி)
இன்றும் அவள் கடிதம் எனக்கு வரவில்லை.
(வெறியுடன்)
என்ன அநியாயம் எல்லாம் தலைகீழ்தான்
(வியப்புடன்)
ஆ... யார் கடிதம் இது? என்றோ பார்த்த எழுத்து.
ஓ... ஊர்பேர் எதுவும் தெரியவில்லையே!
(மடல் பிரித்தல்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பழைய ஞாபகத்தோடு)
அடடா... முன்னாள் ரசிகை முர்ஷிதா ஆமாம்.
அன்று முதலே அற்புத ரசனை.
என்றன் எழுத்துக்கள் எல்லாம் படித்து
இன்பத் தமிழில் தன் கருத்துரைப்பவள்
என்ன இன்று எழுதியிருக்கிறாள்...

முர்ஷி: 'அமரகாவியம்' எனும் உங்கள் கவிதை நூல்
தமிழ் உலகக் கவிதைப் போட்டிக்கு
எமது நாட்டின் இனிய படைப்பாக
சமர்ப்பணமாகிய செய்தி அறிந்தேன்.
இனிய சிருஷ்டி எங்கும் அதன் மணம்
கமழ்ந்து பரவ எந்தன் வாழ்த்துக்கள்.

கவிஞ: முகம்தெரியா ரசிகை முகஸ்துதி சற்றுமில்லை.
அகம் நிறைய வாழ்த்துக்கள் அள்ளிப் பொழிந்துள்ளாள்.
கவலை மிகக்கொண்டு களைப்புற்று நிற்கையிலே
இவளை இன்றே போய் சந்தித்தல் ஆறுதல்தான்.

**காட்சி 5**

**இடம்:**

**மஹ்மூத் முதலாளியின் வீடு**

**பாத்திரங்கள்:**

மஜீத். அஸீனா

(கார்ச்சத்தம்... ஹோரன் ஒலி)

அஸீ: ஆ... வாருங்கள்.
ஏழு மணியிருந்தே எதிர்பார்த்திருக்கிறேன்.
வேலை முடிந்ததும் விரைந்தே வரலாமே.

மஜீத்: ஓ.. உண்மைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் கடையொன்றால் சீக்கிரமாய் வரலாந்தான்.
இன்னும் வேலைகள் ஏராளம்... இருந்தாலும்
என்னை வழிபார்த்து எல்லாம் மறந்தபடி
கண்கள் சோர்ந்திருக்கும் காட்சிதனை நானுணர்வேன்.

அஸீ: ம்.. ஒன்பது மணிக்குத்தான் எப்படியோ வந்துவிட்டு
என்னென்ன கதைகளை அவிழ்த்து விடுகிறீர்?
உண்மையைச் சொல்லுங்கள். இடையில் எங்கெங்கோ
நின்று நேரத்தை நகர்த்தி இருக்கின்றீர்.

மஜீத்: உண்மையைச் சொல்கிறேன். இடையில் நேரத்தை
அன்பே! உனக்காய்த்தான் நகர்த்தலானேன் நான்.
புத்தம்புது மனைவி பிரியமுடனிருக்கையிலே
வெற்றுக் கையோடு வீட்டுக்கு வரலாமோ?
நாலு சாமான்கள்...

அஸீ: (செல்லமாக)
சாமான்கள் எதையும் நான் வழிபார்த்திருப்பதில்லை.
வேளைக்கு உங்களைத்தான் வழிபார்த்திருப்பேன்.

மஜீத்: (சிரிப்புடன்)
இல்லாதோர்தானே எதையும் எதிர்பார்ப்பர்
செல்வம் செறிந்துள்ள செருக்கில்தான்...

அஸீ: (பொய்க்கோபம்)
போங்கள் உங்களுக்கு எல்லாமே வேடிக்கை.
நாங்கள் உங்களைப்போல் செல்வத்தில் செழிக்கவில்லை.

மஜீத்: அடடா.. பொய்க்கோபம் போட்டென்னைப் பயமூட்டும்
-எண்ணமோ
ஐயோ! சரணடைந்தேன் என்னை மன்னிப்பீர்!

அஸீ: (சிரிப்பு)
மெய்யாகவே நீங்கள் பயந்தானே.. அதனால் தான்
பை நிறையச் சாமான்கள் சுமந்தே வருகின்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயையோ! ஆண்பிள்ளை இப்படிப் பயந்திட்டால்
வையத்தில் வனிதையர் நாம் வானில் மிதந்திடுவோம்.
(இருவரும் சிரித்தல்.. நேர இடைவெளி)

மஜீத்: ஆ.. அழகான பூப்போட்ட சாரியொன்று
விலைமிக அதிகம் சரிபாதி தரவேண்டும்.

அஸீ: அடடா.. எனக்கேற்ற நிறத்தோடு பூவேலைப் பாட்டோடு
எப்படித் தேடினீர்கள் எனக்கதனைச் சொல்லுங்கள்.

மஜீத்: எனக்கேற்ற துணைவியினை தேடத்தான் இயலுமெனில்
ஏற்றபடி சேலையினை ஏன்தேட முடியாது?

அஸீ: என்றாலும் ஒருகுறையும் இருக்கத்தான் செய்கிறது.

மஜீத்: என்னகுறை என்று சொல்ல இனியும் ஏன் தயங்கிடணும்?

அஸீ: அழகான சேலையினை எடுத்து வந்தீர்
அதற்கேற்ற அணிமணிகள் இல்லை இங்கே?

மஜீத்: அறிவேன் நான் அதனையும் தேடி நின்றால்
இரவாகும்.. வந்தபின்பு இடிதான் கேட்கும்.
மறக்காமல் நாளைக்கே வேண்டி வருவேன்.
மறந்தாலும் பிறிதொரு நாள் தேடலாமே.

அஸீா: நாளைக்கே வேண்டுமெனக் கில்லையென்றால்
நான் கோபம்..சத்தியமாய்க் கோபம்.. ஆமாம்!

மஜீத்: (சிரிப்பு)
கைப்பையில் இன்னும் பல சாமானுண்டு.
இப்போதே எடுத்தவற்றை வைத்திடுங்கள்.

அஸீ: ஓ.. நான் சொன்ன சாமான்கள் இல்லை இதிலே..

மஜீத்: ஆ... (வியப்புடன்)
என்னவென்று சொல்லுங்கள்
ஏனவற்றை நான் மறந்தேன்?

அஸீ: (இரக்கமாக) புவனன் எழுதிய
'பன்னீர்ப் பூக்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் காலிதின் 'அமரகாவியம்'...

மஜீத்: (வெறுப்போடு)
புத்தகக் கடை வழியே புகுந்து திரியும்
பழக்கமெனக் கெப்போதும் இருந்ததில்லை.
சத்தியமாய் அதனால்தான் மறந்து போனேன்.
சந்தோஷம் சகலதுமே நிறைந்திருக்க
புத்தகங்களால் பொழுதை மண்ணாக்கிடவோ!.

அஸீ: புத்தகங்களால் பொழுது மண்ணாய்ப்போமோ?
புத்தகங்களால் பொழுது பொன்னாய் மாறும்.

மஜீத்: இத்தகைய விருப்புள்ளோர் அதிலே சற்றும்
பற்றில்லா எனையடைந்து நிற்பதேனோ?
(சிரிப்போடு)
எழுத்தாளர் கவிவாணர் யாரையேனும்
கல்யாணம் செய்திருந்தால் நல்லதன்றோ?

அஸீ: (தடுமாற்றம்) ஆ... ஆ...
என்ன நீங்கள் சொன்னதிப்போ?

மஜீத்: என்ன இது தடுமாற்றம்.
எழுத்தாளர் கவிவாணர் எவரையேனும்
கல்யாணம் செய்திருந்தால் நல்லதென்றேன்.

அஸீ: அதுதானா...
கலைஞர்கள் உ ளம்மிகவும் மென்மையென்பர்.
விலை பேசி வாங்கிடவும் முடியாதென்பர்.

மஜீத்: அடடா அப்படியா?

அஸீ: (இதமாக)
கண்டபடி எதையெதையோ கதைத்துவிட்டேன்.
மன்னியுங்கள் இனிமேல் நான் உங்களது
விருப்பங்கள் புரியாது எதையும் கேட்டு
வெறுப்புக்கு ஆளாக விரும்பமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஜீத்: புத்தகங்கள் படிப்பதிலே பொழுதைப் போக்கும்
பித்ததனைக் கலைந்துவிடில் பூரணந்தான்.
அஸீ: சரிசரி
உண்பதற்கு நேரமாச்சு எழுந்திருங்கள்.

**காட்சி - 6**

**இடம்:**
முர்ஷிதாவின் வீடு.

**பாத்திரங்கள்:**
**கவிஞர். முர்ஷிதா.**

கவி: (தனக்குள்) இதுதான் அவள்வீடோ. எவரையும்
-காணவில்லை. (டக்..டக்)
முர்ஷி: ஆ..யார் நீங்கள்? யாரைத்தான் தேடுவதோ?
கவி: நான்தான்... ஆ.. நான்தான் கவிஞர் காலித்.
முர்ஷி: (மகிழ்ந்து)
அப்படியா வாருங்கள்... இப்படி அமருங்கள்.
கவி: நன்றி... நீங்கள் யாரென்று...
முர்: உங்கள் ரசிகை நான்தான் முர்ஷிதா (சிரிப்பு)
பொங்கு தமிழின் புகழ்பூத்த கவி நீங்கள்.
எங்கள் குடில்தேடி இப்படி வரலாமோ?
கவி: (சிரிப்பு)
குடிசைக்குள் தான் என்வாழ்வு பூத்தது.
குடிசைக்குள் என் கவிகள் பூத்தன.
முர்: கவிதை பாடவே தொடங்கிவிட்டீர்களோ! (திரும்பி)
சுவைக்கத் தேநீர் கொண்டு வருகிறேன்.
கவி: (தனக்குள்) ம்...
எளிமையான பெண்ணிவள் இரக்கமான குணத்தவள்
உழைத்துவாழும் ஏழ்மைக்கு இங்கனேக சாட்சிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முர்: ஆ.. பருகுங்கள் தேநீர்... பாடுங்கள் தேன்கவிதை.
கவி: அடடா.. எல்லாமே என் கவிதை ஒட்டுப்பிரதிகள் (மனதுள்)
பொல்லாத ரசிகையிவள் பொருத்தமான பாவையிவள்.
முர்: என்ன கவிஞரே எழுந்துவிட்டீர்கள்?
கவி: அன்புக்கு நன்றி... உங்கள்
முர்: அப்பாவா... அவர் வெளியே சென்றுள்ளார்.
இப்போதே அழைக்க இயலாத தொலைதூரம்.
மன்னியுங்கள் கவிஞரே.
கவி: சீக்கிரமாய் வந்தொருநாள் அவரை நான் சந்திப்பேன்.
முர: சீக்கிரமாய் வந்தவரைக் காண என்ன சங்கதியோ!
கவி: சந்தோஷமானதோர் சங்கதிதன்.

**காட்சி 7**

**இடம்:**
**மஹ்மூத் முதலாளியின் வீடு.**

**பாத்திரங்கள்:**
மஹ்மூத். **அஸீனா**. மஜீத்

மஹ்: அஸீனா... அஸீனா...
இரண்டு முறை கூப்பிட்டும் இன்னும் வரவில்லை.
அஸீ: ஆ... வருகிறேன் அப்பா... அங்கே அவரோடு...
மஹ்: அப்படியா... பின்னே என்றல்லோ நான் நினைத்தேன்.
அஸீ: அதற்கென்ன? எதற்காக அழைத்தீர்கள்.
மஹ்: கடிதம் ஒன்று காலையில் வந்தது.
அஸீ: எடுங்கள் அதனைப் படித்துக்காட்ட (பிரித்தல்)
ஆ.. காஸிம் என்பவர் எழுதியுள்ளார்.
மஹ்: ஓ... எங்கள் கடையில் சமையல் செய்பவன்.
அஸீ: சடுதியாய் மகளுக்கு கல்யாண ஏற்பாடு.
கடைக்குச் சிலநாள் கழிந்தே வருவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் பொருள் சீதனம் எதுவுமேயின்றி
மணக்கிறார் அவர் பெயர்...

(அதிர்ச்சி)

மஹ்: என்ன இடையில்...

அஸீ:- (தடுமாறி) மணக்கிறார். அவர்பெயர் கவிஞர் காலித்.

மஜீத்: (உள்ளேயிருந்து) அஸீனா...

அஸீ: வருகிறேன் அப்பா... (நேர இடை)

மஜீத்: என்ன முகத்தில் ஒருவித வாட்டம்.

அஸீ: கொஞ்ச நேரமாய் உங்களைக் காணாத வாட்டம்.

மஜீத்: அதுசரி... ஆறு மாதங்கள் இங்கு நகர்ந்தாச்சு.
ஊரில் ஒருவீடு ஒழுங்கு செய்துள்ளேன்.

அஸீ: ஆ.. வேறு என்ன... வருகின்ற வாரமே...
காரில் ஏறிக் குடித்தனம் போவோம்.

**காட்சி 8**

**இடம்:**

**மஹ்மூத் முதலாளியின் வீடு**

**பாத்திரங்கள்:**

**மஜீத். அஸீனா**

மஜீத்:- ஆ... அஸீனா... நேற்றுச் சொன்னேனே நினைவிருக்கிறதா?

அஸீ: ஆமாம்... ஏற்பாடெல்லாம் இனிதே செய்துள்ளேன்.

மஜீத்: அதுசரி
வாகனம் வந்துவிடும்... வானொலி முன் அமர்ந்திருந்தால்

அஸீ: போகலாம்... பத்தே நிமிடத்தில் தயாராவேன். (மனதுள்)
இன்னும் ஐந்தே நிமிடத்தில் ஆரம்பம்.
பண்ணார் கவிதை பாவலன் காலிதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நேர இடை... கார் ஹோரன் சத்தம்)... ஐயோ
மஜீத்: (கோபமாக) சுணக்கம் என்ன இவ்வளவு நேரம்.
அஸீ: ஐயோ... இனிக்கும் கவிதையை இனிக்கேட்க முடியாது.
கணத்தில் வருகிறேன். பொதியை ஏற்றுங்கள்.
(வாகனம் செல்லல்)
மஜீத்: (இதமாக) அஸீனா...
கடையில் பெரியதொரு கஷ்டம் நிகழ்ந்திற்று.
உடன் வேண்டும் நாளைக்கே பணம் பல்லாயிரம்.
அஸீ: அப்படியா...
அப்பாவிடம் கேட்டால் அள்ளித் தருவாரே...
மஜீத்: கெட்டிக்காரி நீ கவலை எனக்கெதற்கு?
(கார் வேகமாகச் செல்லல்)
(மனதுள்) இரண்டாம் தடவையிது இனியும் தொடருமோ
திரண்ட செல்வந்தர் என்பதுவும் மாயையோ!

**காட்சி 9**

**இடம்:**
**முர்ஷிதாவின் வீடு**

**பாத்திரங்கள்:**
**கவிஞர், முர்ஷிதா**

முர்: அடடா... திங்கள் என்னும் இலக்கிய மலரில்
உங்கள் கவிதை வெளிவந்துள்ளதே.
கவி: ஓ... மங்காச் சுடர் எனும் கவிதைதானே?
முர்: ஆமாம்.... என்றும் இல்லாக் கவித்துவம் அதிலே
கவி: எல்லாம் உன்தன் வரவால்தானோ!
முர்: என்ன கிண்டலா?
கவி: உள்ளதைச் சொல்வது கிண்டலாகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ... இனிமேல்
எல்லாம் நறுக்கி வைத்தலுன் பொறுப்பே.
பூ: நீங்கள் கூட என் பொறுப்பான பின்...
கவி: (சிரிப்பு) உன்னிடம் சொல்ல மறந்தே போனேன்.
இன்பத் திருமண நினைவாய் எமக்கு
தலைநகரினிலே வரவேற்பளிக்க
கலைவட்டத்தினர் காத்திருக்கின்றனர்.
முர்: ஆ.. நீங்கள் அதற்குத் தகுதியானவர்... நானோ
கவி: நானோ அல்ல... நாங்கள் அதற்குத் தகுதியானவர்.
முர்: ஆ... பூவுடன் சேர்ந்த நாரைப்போலவா?
கவி: இல்லை பூவுடன் புணர்ந்த மணத்தைப் போல...
முர்: நீங்கள்...
பொய்யா மொழிப்புலவர் அல்ல.
பொய்யே மொழியும் புலவர்: ஆமாம்
கவி: என்ன அப்படி?
முர்: மலரும் மணமும் மண்ணில் விழுந்து மறைந்துபோகும்
மடிந்த பின்பும் மலர்ந்திருக்கும் உங்கள் வாழ்வு.
கவி: உனக்குள் கூட அற்புதமான ஆற்றல்... ஆஹா

**காட்சி 10**

**இடம்:**
**மஜீதின் வீடு.**

**பாத்திரங்கள்:**
**மஜீத். அஸீனா.**

மஜீத்:- (போதையில்) அஸீனா... ஏய்.. அஸீனா...
அஸீ: ஆ... என்ன இது? ஏனிந்தக் கோலம்?
மஜீத்: குடித்துவிட்டு வந்துள்ளேன். அடிக்க முன்பு கொடுத்து -விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீ: (அழுதழுது) குடித்துவிட்டு வருவதுவும் அடிபட்டு
-மாள்வதுவும்...

மஜீத்: அதிகம் கதைக்காதே எடு அந்த நகைகளை...

அஸீ: அதிகம் கதைத்தென்ன...? அன்றாடம் அழுதென்ன?

மஜீத்: (வெறியுடன்) எல்லாம் இழந்துவிட்ட வேதனையில்
-இருப்பவன் நான்.

அஸீ: உள்ளதெல்லாம் தந்துவிட்டேன் இனியில்லை தருவதற்கு

மஜீத்: (எடுப்போடு)
குழந்தையின் காப்புகளைக் கொடுத்துவிடு குழறாதே.

அஸீ: பாலகனின் கைகளையும் பாழாக்கி விடுவதற்கோ?

மஜீத்: பைத்தியமே உன்னால் தான் எனக்கிந்தத் தரித்திரம்.
பொசுக்கிடுவேன் பேசாமல் கழற்றுந்தக் •காப்புகளை.

அஸீ: (அழுதபடி) ஆ... பிடியுங்கோ

**காட்சி11**

**இடம்:**

**மஜீதின் வீடு**

**பாத்திரங்கள்:**

**மஹ்மூத். அஸீனா. மஜீத்**

அஸீ: அப்பா வாருங்கள்.
அஞ்சல் ஒன்றேனும் அனுப்பாமல் திடீரென்று... (தனக்குள்)
காரையும் காணவில்லை. காரணமும் தெரியவில்லை.
ஊரிலிருந்தென்றால் அம்மாவும் வரவேண்டும்..!

மஹ்: நாட்டம் ஏதேனும் நெஞ்சிலிருந்தால் தான்
முற்கனவே அறிவித்து வரவேண்டும் மகளே!

அஸீ: (தனக்குள்) வாட்டமும் முகத்தில் விரவிக்கிடக்கிறதே.

மஹ்: நாட்டுப்புற மக்கள் நயம்படச் சொல்வார்கள்.
ஆட்டம் முடிந்தால் வாட்டம் தானாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம்...
ஆட்டம் முடிந்தது... வாட்டம் தொடர்கிறது...
அஸீ: (குழப்பமாக) ஒன்றுமே எனக்கு விளங்கவில்லையே.
இன்னும் பொறுமையை சோதிக்க வேண்டாம்.
மஹ்: என்றுமே நானும் நினைக்கவில்லைதான் அன்று இரவு
-பலத்த பேய் மழை.
கண்ணைப் பறிக்கும் மின்னல் கீற்றுக்கள்.
மண்பதை வெடிக்கும் இடிக்குமுறல்கள்
அஸீ: (பதறி) என்ன அப்பா என்ன நடந்தது?
அன்று நடந்த அழிவுதான் என்ன?
மஹ்: (கவலை) கொள்ளைக் கோஷ்டி ஒன்று கடையின்
உள்ளே புகுந்து உள்ளதையெல்லாம்
அள்ளிக்கொண்டு அகன்று சென்றனர்.
வெள்ளம் வடிந்த வெளியைப் போல...
அஸீ: (குழம்பி) என்ன துன்பம்... ஏனிது ஆண்டவா
இன்னுமா வேதனை எல்லாப் புறமும்...!
மஹ்: (பெருமூச்சு) மெல்ல இரண்டு மாதம் நகர்ந்தது.
கொள்முதல் கடன்கள் தேடிவந்தன...
இல்லாமைக்காய்ப் பொறுக்கச் சொன்னேன்.
உள்ளதைச் சொல்லியும் ஏற்கவா போகிறார்?
இல்லை... வேறெவ் வழியுமே இல்லை.
உள்ளதே ஒன்று. வீடே அதனை
அடகு வைத்தே கடனை அடைத்தேன்.
மஜீத்: (அசட்டுச் சிரிப்பு... போதையுடன் வரல்)
தகவல் அனுப்பித்தந்தையை அழைத்ததோ? தகர்த்து விடுவேன...
அஸீ: (பயந்தபடி) இல்லை. அப்பா வருவதை நானே அறியேன்.
மஹ்: ஆ... கூப்பாடெதற்கு? கூறுவதைக் கேளுங்கள்.
மஜீத்: ஓ... கேட்டகாலம் கடந்துவிட்டது. கூட்டமாய்ச் சேர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கூற வந்ததோ!

மஹ்: எதுவுமே அறியேன். என்நிலை சொல்லி
இதயச்சுமையை இறக்கவே வந்தேன்.

மஜீத்: ம்... எதைச் சொன்னாலும் ஏற்கமாட்டேன்.

மஹ்: எதையும் சொல்ல நான் வரவுமில்லையே!

மஜீத்: வந்த பின்புதான் இந்த மாற்றமோ?

அஸீ: புரியாமல் இப்படி...

மஜீத்: (கோபமாக)
புரியாமல் ஒன்றும் புலம்பவில்லை.
புரிந்துகொண்டுதான் பேசவந்தேன்.
பரிந்துபேச வந்துவிட்டாயா?
அறிந்து கொள்ளாமல் உனைக் கைப்பிடித்து
இருந்ததெல்லாம் தொலைந்து போச்சு.
மாமா... அதிகம் கதைக்க அவசியமில்லை.
(திரும்பி) புதல்வியை விரும்பின் அழைத்துச் செல்லலாம்.
(நேர இடைவெளி)

அஸீ: அப்பா... இன்பமயமாய் வாழ்வை அமைத்து
அன்புமயமாய் வாழ்வாரென்றீர்.
(அழுகை) துன்பக் கடலில் துடிக்கின்றேன் நான்.
தொல்லை கோடி... தோல்வி.. வேதனை..
இன்று நரகமாய் எந்தன் வாழ்வை
ஆழ்த்திவிட்டார்... ஐயோ அப்பா

மஹ்: (வேதனை) அன்பு மகளே! அழாதே! அழாதே!
எல்லாம் அந்தக் கடவுளின் சோதனை!
முன்பிதை அறியேன். முற்றிலும் நல்ல
பண்பும் பணமும் பொதிந்திருந்தவர்தான்.

அஸீ: (கோபம்) போதை கொள்வதே இன்றவர் பழக்கம்.
பாதை வழியே பறக்குது பண்பு.
வீதியோரம் விழுந்து கிடந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் கொணர்ந்து சேர்த்துவிடுதல்.
பாதையோர வாலிபர்க்கெல்லாம்
பொழுது போக்காய்மாறிப்போச்சு.

மஹ்: கடவுளே! நிலைமை இப்படியாச்சா?
காதில் கழுத்தில் இருந்ததையெல்லாம்
கழற்றிச் சென்று தலை கிறுகிறுத்து
மோத வருவார். முகத்தைப் பார்த்தால்
வேதனை... வம்பு... அடியுதை... சண்டை.

மஹ்: என்ன மகளே இத்தனை இன்னலா?
உண்ண உணவும் இல்லா நிலையா?

அஸீ: ம்... அநியாயத்தின் அடைக்கலமானேன்
இனியுமிருந்தால் உயிருடன் சாவுதான்.

மஹ்: எதற்கும் சிலநாள் இன்னும் பொறுப்போம்
குதர்க்கம் தொடர்ந்தால் காண்போம் புதுவழி.

**காட்சி 12**

**இடம்:**

**மஹ்மூத் முதலாளியின் வீடு**

**பாத்திரங்கள்:**

**மஹ்மூத். அஸீனா**

அஸீ: (மனதுள்)
மூன்று மாதம் முழுதாய் நகர்ந்தாச்சு
ஈன்ற மகளைப் பார்க்க வரவில்லை.

மஹ்: அஸீமா... கொஞ்சம் அருந்த நீர் கொண்டு வா.
(குரலில் தளர்வு.... இருமல்)

அஸீ: வருகிறேன்... ஆ... இதோ.

மஹ்: மூத்த மகளுக்கு உண்ணக் கொடுத்தாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸீ: நேற்றைய சோறுதான் நானும் புசித்தேன்.
மஹ்: மகளே! நீயும் துரும்பாய் மெலிந்தாய்.
அஸீ: சகலதும் சர்வவல்லவன் சோதனை.
(தூரத்தே வானொலிக் குரல்)
ஆ...ஆ... அந்தக் குரலேதான்....
பொறுங்கள் அப்பா கொஞ்சம் பொறுங்கள்.
மஹ்: கூறுமகளே என்ன பதற்றம்? (நேரஇடை)
கவி: (வானொலியில்)
அன்பினால் இணைந்து யாரும் உலகினில் வாழவேண்டும்
எனும் மறை மொழிக்கிணங்க இப்புவி மீதில் வாழ்ந்தால்
துன்பங்கள் கோடிகோடி தொடருமோ உணர்ந்து பாரீர்
இன்பங்கள் தானே இங்கு என்றுமே நிலைத்து வாழும்
வேற்றுமை பேதம் நூறு வாதங்கள் வம்பு இன்னும்
தூற்றலும் போட்டி சண்டை தாங்கிய வாழ்வு இன்று
ஒற்றுமை அன்பு கொள்ளார் இதயங்கள் பூர்த்தியில்லை
பொற்புறு புனிதர்வாழ்வு பொன்னுரை மறக்கலாமா?
அஸீ: (வந்தபடி)
பக்கத்து வீட்டு வானொலியில்....
மஹ்: மிக்கபுகழ் கவிஞர் காலிதின் கவிதையோ?
துக்கந்தான் நான் பெரிய தவறு செய்துவிட்டேன்.
அஸீ: (விம்மல்)

**காட்சி 13**

**இடம்:**

முர்ஷிதாவின் வீடு

**பாத்திரங்கள்:**

கவிஞர், முர்ஷிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முர்:- (செல்லமாக)
செல்ல மகனே சிரிப்பு ஏதடா (மழலையின் சிரிப்பு)
கள்ளன் கண்களை உருட்டிப்பார்க்கிறான்.
சொல்ல ஏதோ துடியாய்த் துடிக்கிறான்.
பொல்லாதவனாய்ப் பொங்கி அழுவான்.
(மீண்டும் சிரிப்பு)
செல்ல மகனே ஏதடா சிரிப்பு?

கவி:- (வந்தபடி) முர்ஷிதா...

முர்:- என்ன சங்கதி?

கவி:- ஆ... கவியரங்கிற்கு கார் வந்துள்ளது.
அவசரமாய் நான் திரும்பிவிடுவேன்.

முர்:- என்னிடம் சொன்னது போதும் உங்கள்
அன்பு மகனிடம் சொல்லிப் போங்கள்.

கவி:- (செல்லமாக)அடடா...ஏதடா சிரிப்பு...யாருடன்சிரிப்பு?.. ம்
அம்மாவைப் போல் வாயாடியாக வளர்ந்து விடாதே

முர்:- அப்பாவைப்போல் கவிதை பாடவும் கற்று விடாதே
(இருவரும் சிரித்தல்)

**காட்சி 14**

**இடம்:**
**மஹ்மூத் முதலாளியின் வீடு**

**பாத்திரங்கள்:**
**மஹ்மூத். அஸீனா**

மஹ்:- என் இதயக் கொழுந்தே கொஞ்சம் அருகேவா.
உன்னைக் காண்கையிலே இதயமெல்லாம் நோகிறது.
உன் இளமை வாழ்வு இப்படியாய்ப் போனதற்காய்
என்னை மன்னிப்பாய் என்னருமை மகளே!

அஸீ:- ஏன் அப்பா எதையெதையோ சொல்லிப் புலம்புகிறீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நினைப்பது போல் எல்லாமும் நடந்திடுமா?
எப்போதோ நடந்திட்ட எதையெதையோ மறந்திடுங்கள்.
இப்போது எத்தவறும் இங்கே நடக்கலையே!

மஹ்:- இப்போது எத்தவறும் நடக்காத துண்மைதான்.
எப்போதோ நடைபெற்ற தப்பின் பிரதிபலன்
இப்போதுதானே கண்ணெதிரே தெரிகிறது.

அஸீ:- அப்படியா அதற்கிப்போ என்னசெய்ய?
இப்படியா இதைவிடவும் பெருந்துயரில்
எத்தனையோ மாந்தர்களின் இன்னலெண்ணி
நித்தமுமே மனம்பொறுத்துக் கொள்ளவேண்டும்!

மஹ்:- உந்தன் வாழ்வு இப்படியாய்ப் போனதெல்லாம்
எந்தன் தவறு.. அதை நான் முழுமனதாய்
இந்த வேளையில் ஏற்காதிருந்திடுதல்
சிந்தையைக் குழப்பிச் சிதைத்து விடுகிறது.

அஸீ:- (வியப்புடன்)
ஆ... சிந்தையைக் குழப்பித் தடுமாற்றும் அளவுக்கு...
நொந்து மனம் வெதும்பித் துடிக்கும் அளவுக்கு...

மஹ்:- இருக்கிறது மகளே! ஏராளம் இருக்கிறது.
பிறரின் சொற்கேட்டுப் புரியாமல் நடந்திட்டேன்.
பெரிதாக உதவுவதாய்ப் புத்திமதி சொன்னவர்கள்
பரிதாப நிலைகண்டு பார்ப்பதற்கும் இன்றில்லை.

அஸீ:- (கோபமாக)
பிறரின் சொற்கேட்டா பாதகத்தைச் செய்தீர்கள்?

மஹ்:- பதறாதே மகளே! பகர்கின்றேன் அத்தனையும்.

அஸீ:- ஆத்திரப்படவில்லை... அமைதியாய்ச் சொல்லுங்கள்.

மஹ்:- எங்கிருந்தோ வந்தவனின் ஏமாற்றுப் பேச்சுக்கு
உங்கள் மகள் மனதைப் பறிகொடுத்து விட்டாளாம்.
மரியாதைக் குறைவின்றி மானமுடன் வாழ்ந்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருகாகமதிப்பிழந்து சறுக்கிவிட விடலாமோ!.

அஸீ: அப்படியா? செம்மல்கள் வேறென்ன செப்பினார்கள்?

மஹ்: பாட்டெழுதி ஊரெல்லாம் பாடித்திரிபவனாம்.
வீட்டிலும் வாழ்வதற்கு வழியற்ற நிலைதானாம்.
பெயர் கொஞ்சம் பேப்பரிலே பிரபலந்தான்; அதற்காக
உயிர் போன்ற உத்தமியை ஒப்படைத்து விடலாமோ?

அஸீ: ம்..ம்.. வேறென்ன விளம்புங்கள்.

மஹ்: பணம் தேட மனிதர்கள் படும்பாடு தெரியாதோ?
பணம் தேடிக்குவித்திட்டு.... பிள்ளையின் வாழ்வுதனை
எங்கிருந்தோ வந்தமுக வரியில்லா மனிதனிடம்
சங்கையில்லா முறையினிலே சேர்ந்திடுதல் சரியாமோ?
பண்புடையோர், பணமுடையோர், பரம்பரைப்
-பெருமையுள்ளோர்
இன்றுங்கள் வீடுவர எத்தனையோ பேருள்ளார்.
இப்படியாய்... ஒன்றல்ல இரண்டல்ல சொன்னார்கள்
அப்பாடா உறவினரும் ஒத்தூதி நின்றார்கள்.

அஸீ:- (கோபமாக) பண்புள்ள பணமுள்ள பரம்பரைப்
-பெருமையுள்ள
அன்புள்ள உங்களது மருமகனார் இன்றெங்கே?
பொன் பொருளைக் குவித்தீர்கள் பணம் வேண்டின்
-கொடுத்தீர்கள்.
இன்றந்தப் பெருமகனின் நிழல்கூட இங்கில்லை
சொன்னவர்கள்... சொல்லித்தம் சாதனையைப்
-புரிந்தவர்கள்.
உண்மை உருவத்தை இனியுணர்ந்து என்ன பயன்?
பொறாமைப் பொங்குதலை பொறுக்க முடியாமல்
உராய்த்த நெருப்பினிலே உருவிழந்த சாம்பல் நான்.

மஹ்:- அழாதே... அழுதென்ன பயன் மகளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(விம்மல்...அழுகை....நேரஇடை)
தேடிய பணமென்ன.... சேர்ந்த பொருளென்ன
ஓடும் உலகத்தில் எல்லாமே அழிந்து விடும்
நேற்று வரையினிலே சிந்தித்துப்பார்த்த பின்பு
ஆற்றல்கள் மட்டுமே அழியாத தென்றுணர்ந்தேன்

அஸீ:- (இரக்கமாக) இப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்?

மஹ்:- ஆற்றல்கள் ஒரு நாளும் அழியாது என்றேன்.

அஸீ:- (மனதுள்) ஆற்றல்கள் ஒரு நாளும் அழியாதென்றால்....

மஹ்:- (கவலை) இன்றைய செய்தித்தாள் படித்தபின்பு தான்
என் மனம் திறந்து சுமைகள் இறக்கினேன்.
(இருமல்)

அஸீ:- சுடுநீர் இருக்கிறது... சொற்பம் பருகுங்கள்.

மஹ்:- இருமல் சற்றே உரத்து வருகிறது.. ஆ....சரிசரி

அஸீ:- பத்திரிகையில் இன்று என்னப்பா விசேடம்?

மஹ்:- முதற்பக்கச் செய்தியை சற்றே பார்மகளே!
(பத்திரிகை புரட்டல்.... அமைதி)
எனக்கும் கேட்க உரத்துப் படி மகளே!

அஸீ:- தமிழ் உலக கவிதைப் போட்டியிலே அமரகீதம்
கவிஞர் காலித்துக்கு
முதலாம் பரிசாய் முப்பது லட்சம்.... ஆ....
(அதிர்ச்சி... தடுமாற்றம்)

மஹ்:- (தளர்ந்த குரலில்)
இடையில் நிறுத்தாமல் தொடர்ந்து படிமகளே!

அஸீ:- இந்த நாட்டுக்கு இப்பெருமை சேர்த்ததற்காய்
அரச மரியாதை அவர்குடும்பம் பெறுகிறது.
(பேரழுகை) அப்பா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புதிய ஜீவன்

*பாலஸ்தீன பின்னணி நாடகம்:*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாத்திரங்கள்**

**தலைவர். அப்துல்ஹகீம்**

**இடம்**

**பயிற்சி முகாம்**

அணை: (எதிரொலி) அல்லாஹு" அக்பர்.... அல்லாஹு" அக்பர்....

தலை: அஸ்ஸலாமு அலைக்கும். என்னருமைச் சகோதரர்களே! இலட்சிய வெறியை இதயத்தில் சுமந்து கொண்டு. அதற்காக உங்களை என்றென்றும் தயார் படுத்திக்கொண்டிருக்கும் இளம் வீரர்களே!

இன்று உங்களையெல்லாம் ஒரேயடியாகச் சந்தித்துப் பேசுவதில் எனக்கு என்றுமில்லாத மகிழ்ச்சி. ஒரு தாய் அல்லது தகப்பன் தனது குழந்தைகள் ஒரு வெற்றிக் கட்டத்தை அல்லது முன்னேற்றப்படியை எய்தும் பொழுது எப்படிக்களிப்படைவார்களோ... அத்தகையதொரு உணர்வுக்கு நானும் ஆளாகிறேன்.

அணை: அல்லாஹு" அக்பர் (எதிரொலி)

தலை: என்னருமை வீரர்களே... எங்களுடைய மூதாதையர்கள் வாழ்ந்து மடிந்த பரம்பரைப் பூமியிலிருந்து. அந்தத் தாய்த் திருநாடாம் பாலஸ்தீனத்திலிருந்து. எப்பொழுது நாங்கள் விரட்டியடிக்கப்பட்டோமோ.அகதிகளாக மாற்றப் பட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோ. கொடுமைக்கும் இம்சைக்கும் ஆளாக்கப்பட்டோமோ. அன்று முதல் அந்தத் தாய்த் திருநாட்டை மீட்டெடுப்பதற் காக எல்லா வழிகளிலும் எங்களைத் தயார்படுத்தி வருகி றோம். இன்ஷா அல்லாஹ் எங்கள் சத்தியப் போராட்டம் உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் படும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

அனை: (எதிரொலி) அல்லாஹு" அக்பர்

தலை: அந்தப் பயணத் தொடரில் இன்று நாங்கள் ஓரடி முன்னோக்கி வைத்துள்ளதாகவே நான் கருதுகிறேன். கடந்த இரண்டு வருடங்களாக அவ்வப்போது உங்களில் ஒருவனாக உண்டு... உறங்கி....உங்களுக்குத் தேவையான பயிற்சிகளை கற்றுத் தந்திருக்கிறேன். காடுகளிலும் புதர்க ளிலும் குன்றுகளிலும் குழிகளிலும் ஒளிந்து மறைந்து எப்படியெப்படி எதிரிகளைத்தாக்குவது என்று என்னால் இயன்ற வரை எடுத்துக்காட்டியிருக்கிறேன். நவீன ஆயுதங் களை தோள்களிலே சுமந்து போராடும் வீரர்களாகவல்ல. சாதாரணமாக எமக்குக் கிடைக்கக்கூடிய பொருட்களையே ஆயுதங்களாகப் பாவித்து. அதிரடிகளை நிகழ்த்துவதற்கு இப்பொழுது நீங்கள் நன்றாக தேறியிருக்கிறீர்கள். ஆயுத வலிமையை விட உங்களது மனவலிமையும். அல்லாஹ் வின் மீது கொண்டுள்ள அசையாத நம்பிக்கையுமே உங்களை நிச்சயம் வெற்றி வீரர்களாக மாற்றும்.

அனை: அல்லாஹு" அக்பர்(எதிரொலி)

தலை: உங்களைப் போன்றே வெவ்வேறு குழுக்களை வெவ்வேறு பகுதிகளில் நான் கண்காணித்து பயிற்சி வழங்கிவந்தேன். அத்தனை பேருக்குமே எனது பயிற்சி முடிவடைகிறது. இனி இதே பயிற்சியை வழங்க புதிய குழுவினர் எனக்கு ஒப்படைக்கப்படவிருக்கிறார்கள். பாலஸ்தீனத் தாய்மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் வயிற்றில் பிறந்த பாலகர்கள் தங்களது வரலாற்றையும். தற்போதைய நிலையையும் உணரும் போது அவர்களும் தாயகத்துக்காக. இரத்தம் சிந்த துணிந்து விடுவார்கள். இதனால் தான்பாலஸ்தீன விடுதலைகக்காப் போராட அணியணியாகப் படையெடுக்கிறார்கள்.இது நாம் பெருமைப்படத்தக்க விடயமே.

இத்துடன் உங்களது பயிற்சி பூரணமடைந்து விடவில்லை. என்னுடைய கடமையை திருப்தியாக நிறைவேற்றியமைக்காக நான் பூரிப்படைகிறேன். அடுத்த கட்டப்பயிற்சிக்காக புதியதொரு தலைவர் இன்னும் இரண்டு நாட்களில் வருகை தருவார். இரண்டு நாள் பூரணத்துவ ஓய்வோடு அடுத்த கட்டத்தை எதிர்பார்த்திருங்கள். நாங்கள் வெறியர்களல்ல... நாங்கள் ஆக்கிரமிப்பாளர்களுமல்ல. நாங்கள் சமாதானப் பிரியர்கள். நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்பட்டவர்கள். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் பரம்பரையாக வாழ்ந்த பாலஸ்தீன மண்ணிலே அதே உரிமையோடும் ஒற்றுமையோடும் நாம் வாழ வேண்டும். இதுவே எமது கோஷம். இளம் வீரர்களே! இதை நீங்கள் என்றென்றும் மனதில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். நிச்சயமாக வெகு விரைவில் பாலஸ்தீன பூமியில் நாங்கள் உரிமையோடு வாழத்தான் போகிறோம்.

அனை: அல்லாஹு அக்பர் (எதிரொலி -கூட்டம் கலைந்த கலகலப்பு)

அப்து: தலைவர் அவர்களே! தங்களது சேவைக்கு தனிப் பட்ட முறையில் எனது பாராட்டு. (கலகலப்பு).

தலை: அப்துல் தங்களது பாராட்டுக்கு நன்றி. (கலகலப்பு)

அப்து: தலைவர் அவர்களே!ஒரு விடயத்துக்காக நீங்கள் எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதி தரவேண்டும்.

தலை: அப்படி என்ன விஷயம்.

அப்து: நான் ஒரு முறை கிராமத்துக்கு போய் வரவேண்டும்.

தலை: ஓ.... இரண்டு நாள் விடுமுறை இருக்கிறதல்லவா? அதற்குள் போய்வரலாமா?

அப்து: நிச்சயமாக.

தலை: புதிய தலைவர் குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேர்ந்து விடுவார்.அவர் மிகவும் கண்டிப்பானவர். எதையும் உரிய நேரத்தில் செய்யும் பேர்வழி. நீங்கள் வரத் தவறினால் அவர் எடுக்கும் முடிவு தான் என் முடிவும்.

அப்: அப்படி நான் சுணங்குவதற்கெதுவுமேயில்லை தலைவரே.. எல்லாச் சுகங்களையும் இலட்சியத்துக்காக அர்ப்பணித் துள்ளவர்களல்லவா நாங்கள்.

தலை: ம்.... அப்படியென்ன அவசரம்?

அப்: ஒன்றுமில்லை ஐந்தே வயதில் ஒரேயொரு மகன். அவனை பார்த்துவிட்டு வரவேண்டும். ம்.... உங்களையும் என்னை யும் போல அவனும் ஒரு வீரனாக வளர வேண்டாமா?

தலை: உண்மை தானே... இடையிடையே போய்ப் பார்த்தால் தானே அவனது பிஞ்சு மனதிலே கொஞ்சம் கொஞ்சமாக வீர உணர்வை ஊட்டலாம்.

அப்: இல்லை தலைவரே.அதை நான் செய்யத்தேவையில்லை என்னை விடத் திறமையாகச் செய்யக்கூடிய ஒருவரின் கையில் தான் இப்போது அவன் இருக்கிறான். பாலை மட்டுமல்ல. பாலோடு சேர்த்து பாலஸ்தீன உணர்வையும் அவளது தாய் ஊட்டி வளர்த்திருக்கிறாள்.

தலை: அடடா.... அப்படியா? மகனை மட்டுமல்ல மகனோடு சேர்த்து மனைவியையும் அல்லவா பார்க்க விரும்புகிறீர் கள் போலிருக்கிறது! (இருவரும் சிரித்தல்)அப்துல் ஹகீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மௌனமாக இருக்கிறீர்கள்? எவ்வளவு தொலைவில் தங்களது இருப்பிடம்.?

அப்: அதிகமில்லை தலைவரே! பத்து கிலோ மீற்றர் தான். குறுக்கு நடைவழியாய்ப் போய்விடலாம். காடும் மேடும் நடையும் எமக்கொரு பொருட்டா என்ன?

தலை: சரி. இரண்டு நாட்களுக்குள் எப்படியும் திரும்பி விடுங்கள் சரிதானே...?

அப்: நன்றி தலைவரே.

**காட்சி- 2**

**இடம்:**

**அப்துல் ஹகீமின் குடிசை**

**பாத்திரங்கள்:**

**அப்துல்ஹகீம். தலைவர். ரைஹானா. அஜ்மல்கான். ஒலிபெருக்கி குரல்.**

(இரவின் ஒலிக்குறிப்புகள்...... அதான் ஒலி)

அப்: அப்பாடா... ஒருவாறு வந்து சேர்ந்திட்டன்.... எவ்வளவு சிரமம் யாஅல்லாஹ்... கால்கள் என்ன மாதிரி வலிக்கின் றன. இதையெல்லாம் பார்க்க முடியுமா?... ம் (பெருமூச்சு) இன்று நள்ளிரவிலேயே புறப்பட்டுவிடவேண்டுமே.. எதற்காக நான் இவ்வளவு சிரமப்பட்டுக்கொண்டு வந்தேன். பக்கத்தே இருந்து கொஞ்சு மொழிகளையும் செல்லக் கூத்துக்களை யும் பார்த்து ரசிக்க வாய்ப்பா இருக்கிறது! (செருமல்) இந்த நேரத்தில் அவன்... படுத்துவிட்டானோ... உம்மாவுக்கு குர்ஆன் ஓதிக்காட்டிக்கொண்டிருப்பானோ? ம்.... இதென்ன கதவு அடைத்துக் கிடக்கிறது... ம்... உள்ளே வெளிச்சம் தெரிகிறது. ரைஹானா...... (பலமாக) ரைஹானா.....

ரைஹா: (வியப்புடன்) ஆ... மச்சானா..வாங்க வாங்க.... எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதங்களுக்குப் பிறகு.... வந்து அதிக நேரமாகி விட்டதா? உள்ளே தொழுது கொண்டல்லவா இருந்தேன்.

அப்: (இதமாக) இல்லை ரைஹானா... இப்பொழுது தான் வந்தேன்.

ரைஹா: அப்படி அமருங்கள்.... களைப்பாக இருக்குமே குடிப்ப தற்கு ஏதாவது கொண்டு வருகிறேன்.

அப்: ஓ... அதுவும் நல்லது தான்....ம்

ரைஹா: இந்தாங்க குடியுங்கள் (கோப்பைச் சத்தம்)

அப்: ஆ... அல்ஹம்துல்லா... (செருமல்) என்ன இவன் தூங்கி விட்டானா (உள்ளே சென்ற படி) அஜ்மல்கான்... உள்ளே யும் காணவில்லையே (பதட்டமாக) அஜ்மல்கான்...

ரைஹா: வாருங்கள் சொல்கிறேன்.

அப்: ம்... இந்த நேரத்தில் வெளியே அனுப்புவதா? உள்ளதே ஒன்று.. சீக்கிரம் போய்க்கூட்டிட்டு வாருங்கள்.. (வியப்போடு) ரைஹானா என்ன இது மரம் போல...

ரைஹா: (விம்மல்) மகன்... உங்கள்... மகன்...

அப்: எதற்காக அழுகிறீங்க.... முதலில் விஷயத்தைச் சொல்லு ங்கள் ரைஹானா.

ரைஹா: (அழுதபடியே) சொல்கிறேன்... சொல்கிறேன்...

**-முன் நினைவுக் காட்சி-**

அஜ்: உம்மா நான் மத்ரஸாவுக்கு போகப் போகிறேன்.

ரைஹா: நல்லது மகனே சாப்பிட்டீங்களா?

அஜ்: சாப்பிட்டேன் உம்மா... எனக்கு ஒரு முறை பாடம் சொல்லித் தந்தால் என்ன.

ரைஹா: சரி... குர்ஆன் ஓதி முடித்த பிறகு என்ன செய்யப் போறீங்க மகனே...

அஜ்: நானா..நானும் வாப்பாவைப் போல ஒரு வீரனாகுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மா... டும் டும் என்று சுடுவேன்.

ரைஹா: என் கண்ணல்ல... என் வயிற்றுப் பிறவி ஒரு வீரனாக வந்தால் அதைவிட எனக்கு வேறென்ன மகிழ்ச்சி இருக்கிறது!

அஜ்: உம்மா எனக்குப் பாடம் சொல்லித் தாங்க.

ரைஹா: என்ன பாடம் மகனே.

அஜ்: ஸுரதுல் இஹ்லாஸ் உம்மா...

ரைஹா: சரி சொல்லுங்க பிஸ்மில்லா....

அஜ்: பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

ரைஹா: குல்ஹு"வல்லாஹு" அஹத்

அஜ்: குல்ஹு"வல்லாஹு" அஹத்

ரைஹா: அல்லா ஹு"ஸ் ஸமத்

அஜ்: அல்லா ஹு"ஸ் ஸமத்

ரைஹா: சரி பாடம் வந்திட்டுதா அஜ்மல்

அஜ்: நன்றாகப் பாடம் உம்மா.

ரைஹா: சரி ஓதிக்காட்டுங்க

அஜ்: (ஓதிக்காட்டல்) சரி தானா உம்மா

ரைஹா: கவனமாகப்போங்க... ஓதிமுடித்ததும்சுணங்காம வாங்க.

அஜ்: நான் சுணங்காம வருவேனம்மா... எனக்கு வாப்பாவும் அப்படித் தான்சொல்லித் தந்திருக்கிறார்... நான் போய் வருகிறேன் உம்மா.

ரைஹா: அல்லாஹ்...

(மதரஸா சிறார்களின் கலகலப்பு. ஓதல் ஒலிகள் அஜ்மல் கானின் தெளிவான குரல். தூரத்தே விமான இரைச்சல். இடையிடையே ஓதல் ஒலி... நெருக்கமாக விமான இரைச்சல். மாறி மாறி சிறிது நேரம் இதே நிலை.. குண்டுகள் போடப்படல்..... அல்லோல கல்லோலமான கூக்குரல்... அழுகை... ஒப்பாரிச்சத்தம்... தனியாக அஜ்மல்கானின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் ஒலித்து அடங்கி விடுதல்..... சோக வாத்தியம்)

**-நினைவு காட்சி நிறைவு-**

ரைஹா: இது தான் உங்கள் மகனின் கதை. (அழுதபடி) உங்களதும் எனதும் கனவுகள்...கற்பனைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவன் போய்விட்டான். (ஆவேசமாக) அந்த வெறியர்களின் மிலேச்சத்தனமான குண்டுகளுக்கு உங்கள் மகன் மட்டுமல்ல.. எத்தனையெத்தனை பச்சிளம் பாலகர்கள் பலியாகி விட்டார்கள். இவர்களின் ஈனச் செயலை இனியும் நாங்கள் பார்த்துக்கொண்டு இருப்பதா? (அமைதி... அப்துல்லாவின் அழுகை) மச்சான் நீங்கள் அழவேண்டாம்... சின்னப் பிள்ளை போல எதற்காக அழுகிறீர்கள்! இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்து முடிந்த கதையல்லவா இது. எத்தனை வருடங்களாக அப்படி எத்தனை இழப்புகள் எங்களுக்கு.

அப்: ரை...ரைஹானா(பேசமுடியாமல் அழல்)

ரைஹா: மச்சான்... சோகம் உங்கள் வீரநெஞ்சையும் கசியச் செய்யும் தான்....ஆனால் எங்களைப் போன்றவர்களுக்கு எதையும் தாங்கும் இதயம் வேண்டுமல்லவா? எங்களுடைய இலட்சியம் வீரம் பொருந்தியது. அந்தப் பாதையில் நாங்கள் எதிர்நோக்க வேண்டியிருப்பது ஒன்றல்ல... இரண்டல்ல.... ஏராளம். அழவேண்டாம் (அழுகை ஒலி) நீங்கள் அழவேண்டாம்..ஆண்கள் அழுவது அழகில்லையே (அமைதி... ரைஹானா அழல்)

அப்:- (கம்மிய குரலில்) ரைஹானா..... என்ன இது எனக்கு அழ வேண்டாமென்று சொல்லிவிட்டு..... நீங்களே.

ரைஹா:- (அழுதழுதே) என் வயிற்றில் பிறந்த ஒரேயொரு ஜீவன்... நினைக்கும் போதே இதயத்தை யாரோ கசக்கிப்பிழிவது போலிருக்கிறது.... நானொரு பாவி.... பாலஸ்தீனத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகப் போராட இந்த மண்ணில் ஒரு ஜீவனையாவது உலவவிடாத ஒரு தாய் உண்மையிலேயே பாவிதானே...

அப்: ரைஹானா.. இப்படியெல்லாம்...

ரைஹா: திட்டமிட்டுச் சின்னஞ்சிறார்களையும் அழித்தொழிக்கிறார்கள் என்றால்.... மனிதாபிமான மென்பது கடுகளவு கூட இல்லாதவர்களாயிற்றே. என் ஒரேயொரு குழந்தையின் உயிரைச்சுவைத்து ஏப்பம் விட்ட அந்தக் கொடியவர்களின் ஈனச்செயல் என் தாய்மைக்கே விடப்பட்ட சவாலாகத் தான் எனக்குப் படுகிறது.

அப்: ரைஹானா..சும்மா மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வேண்டாம். இவர்களின் மிலேச்சத்தனம் உலகப்பிரசித்த மானது. மனிதர்களிடமல்லவா மனிதாபிமானத்தை எதிர் பார்க்க முடியும்! நாடின்றி உலகின் நாலாபக்கத்திலும் சிதறிக் கிடந்தவர்கள் யூதர்கள். அங்கெல்லாம் இம்ஷிக்கப் பட்டவர்கள். இந்த நிலையில் தான் பாலஸ்தீனத்தின் ஒருபகுதி 1948ல் இஸ்ரேல் நாடாக உருவாகியது. அன்று முதலே பிரச்சனையும் ஆரம்பமாகி விட்டது. எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அப்பொழுது நான் சின்னஞ் சிறுவன்....

**முன் நினைவுக் காட்சி-**

(பரபரப்பான பேச்சுக் குரல்கள்)

ஒ.பெ: (தூரத்தில்) ஓடுங்கள்.... ம்... ஓடுங்கள்....ம்... விரைவாக ஓடுங்கள்.(மீண்டும் பரபரப்பான பேச்சுக்குரல்கள்.. வாகனங் களின் உறுமல்)

ஒ.பெ: (சற்று நெருக்கமாக) ஹும்... விரைவாக ஓடிவிடுங்கள்... இல்லாவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா?... உயிர்மேல் ஆசையிருந்தால் ஓடுங்கள். (மீண்டும் பரபரப்பு... வாகன உறுமல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒ.பெ: (மிக அருகில்) ஓடுங்கள்.... எங்களோடு அடம்பிடித்த டேர்யாஸின் கிராமத்து விவசாயிகளுக்கு என்ன நடந்தது தெரியுமா? ம்... உயிர்களையே இழக்க நேர்ந்தது..... எங்களுடைய பொறுமையை இதற்கு மேலும் சோதிக்க வேண்டாம். (பேச்சுக்குரல்... பரபரப்பு... படிப்படியாகக் குறைதல்)

ஒ.பெ: (மெல்ல) அதோ தூரத்தே போய்க் கொண்டிருக்கிறார்கள். இனி அடுத்த பிராந்தியத்துக்குப் போவோம் (வாகனங்கள் உறுமி செல்லல்)

**-நினைவுக் காட்சி நிறைவு-**

அப்: அவர்களில் ஒருவனாக....சின்னஞ் சிறுவனாக அழுதவாறே நானும் வெளியேறினேன். அந்தக் கசப்பான அனுபவத் தோடு என்மனதிலும் வைராக்கிய வீரம் வளர்ந்து விட்டது ரைஹானா.

ரைஹ: (மெல்லிய சிரிப்பொலி) நீங்கள் வீரர் தான் என்பதில் என்னதான் சந்தேகம். அவர்களைப் போல் வெறியர்களாக மாறாமலிருந்தால் சரி.

அப்: உண்மைதான் ரைஹானா... ஆயுதமேந்திப் போராடுவதல்ல வீரம். எமது இலட்சியத்துக்கு பிசகு ஏற்படாமல் நடந்து கொள்வது தான் வீரம். எனக்கு இப்பொழுதும் தலை வரின் உரை ஞாபகத்திலிருக்கிறது.

தலை: (எதிரொலியாக) நாங்கள் வெறியர்கள் அல்ல...நாங்கள் ஆக்கிரமிப்பாளர்களுமல்ல.. நாங்கள் சமாதானப் பிரியர் கள். நீதிக்கும் நேர்மைக்கும் மனிதாபிமானத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் யூதர்களும் பரம்பரையாக வாழ்ந்த பாலஸ்தீன மண்ணில் அவர்கள் அதே உரிமையோடு வாழ வேண்டும். இதுவே எமது கோஷம்... குறிக்கோள்... இளம் வீரர்களே இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் என்றென்றும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அப்: ஹும்... இதற்கு மேல் நான் தாமதிக்க முடியாது. இப் பொழுதே புறப்பட்டால் தான் வேளைக்குப் போய்ச்சேர லாம்.

ரைஹா: ஏன் எழுந்து விட்டீர்கள்?அமருங்கள் என்ன அவசரம்.

அப்: இல்லை ரைஹானா.... நான் இப்பொழுதே போகவேண்டும். என்னை நீங்கள் ஒருகணம் தாமதப்படுத்தினாலும், எங்கள் இலட்சியப் பயணத்தை நீங்கள் தாமதப்படுத்துவதற்குச் சமனாகும்.. புரிகிறதா?

ரைஹா: (சிரிப்பு) இவ்வளவு காலமும் அனாவசியமாக நான் உங்களை நான் தாமதப்படுத்தியது கிடையாதே!

அப்: குற்றம் சுமத்தவில்லை ரைஹானா..நாளை புதிய பயிற்சிப் பிரிவுக்கு பிரவேசிப்பவன் நான். புதிய தலைவர் கண்டிப் பானவரென்று அறிகிறேன். அதனால் முன்கூட்டியே போய் விடுவது நல்லதில்லையா?

ரைஹா: இல்லை....(சிணுங்கி)மகனை இழந்த சோகத்தை தாங்க முடியாமல் தான் இவ்வளவு அவசரமாக....

அப்: உண்மை அதுவல்ல... ரைஹானா் இந்தச் சந்தர்ப்ப சூழல் உங்களை அப்படிச் சிந்திக்க வைக்கிறது.... அஜ்மல்கான் இருந்தாலும் புறப்படும் எண்ணத்தோடு தான் வந்தேன்.

ரைஹா: (இங்கிதமாக) எது எப்படியிருந்தாலும் ஒரேயொரு வேண்டு கோள்.

அப்: (எதிர்பார்ப்போடு) அதென்ன...

ரைஹா: ஏற்றுக் கொள்வதென்றால் தான் சொல்வேன்.

அப்: முடியுமென்றால் ஏற்காமல் இருப்பேனா?

ரைஹா: முடியாததை வேண்டிக் கொள்வேனா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்: மனைவியின் வேண்டுகோளையெல்லாம் கணவன் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியதியில்லையே!

ரைஹா: அப்படியென்றால் மனைவியின் வேண்டுகோள்களை யெல்லாம் கணவன் நிராகரிக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறதா?

அப்: (சிரித்தல்) இப்படிப்பேசிப் பேசியே என்னைத் தோல்வி யடைச் செய்துவிடுவீர்கள் போலிருக்கிறதே. சரி சரி சொல்லுங்களேன்.

ரைஹா: சொல்லட்டுமா?

அப்: ம்...

ரைஹா: இன்று நீங்கள் தங்கிவிட்டுத் தான் போகவேண்டும். இது தான் என் ஒரே வேண்டுகோள்.

அப்: ம்... இன்று நள்ளிரவோடு நான் இங்கிருந்து வெளியேற வேண்டும். இது தான் என் முடிவு.

ரைஹா: ஒரு மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பது கணவனின் கடமை.

அப்: ஆ... அப்படியா? ஒரு கணவனின் இலட்சியத்திற்கு குறுக்கே நிற்காதிருப்பது மனைவியின் கடமை.

ரைஹா: அப்படியென்ன உங்களது புதுமையான இலட்சியம்! உங்களது இலட்சியமும் எனது இலட்சியமும் ஒன்றே யொன்றுதான். எனது வேண்டுகோள் எங்களது இலட்சிய த்திற்கு துணை நிற்பது தான்.

அப்: (கொஞ்சம் பலமாக) நீ என்ன சொல்கிறாய்? இது எப்படி த்துணை நிற்க முடியும்! இன்று நான் நின்றால் புதிய பயிற்சிப் பிரிவுக்கு என்னால் சேரமுடியாமல் போகலாம். மீண்டும் அதில் சேரகாத்திருக்க வேண்டியும் நேரலாம். இது எனக்கு தனிப்பட்ட நட்டம் மாத்திர மல்ல. எமது இலட்சியத்துக்கு ஏற்படுமிழப்புமாகும். (இரவின் ஓசைகள்

மணிக்கூட்டு ஒலி) அதோ பதினொரு மணியும் அடித்து விட்டது. இனி என்னால் தாமதிக்க முடியாது.

ரைஹா: (அழுதபடி) நானொருதாய்.... பாலஸ்தீனத்தாய்...பாலஸ் தீன மண்ணில் பிறந்த ஒருதாய் பாவியாக மரணித்து விடக் கூடாது. என்னை ஆத்மசாந்தியோடு மௌத்தாக விடுங்கள்.... நானொரு தாய்... பாலஸ்தீனத் தாய்....

அப்: (இரங்கி) ரைஹானா... ரைஹானா.... உங்களுக்கு என்ன நடந்து விட்டது. சும்மா வாய்க்கு வந்தபடியெல்லாம் பிதற்றுவதா?

ரைஹா: இல்லை... இல்லை...நான் பிதற்றவில்லை.அதற்கு நான் பைத்தியக்காரியல்ல.... நானொரு பாலஸ்தீனத் தாய். அப்படிப்பட்டவள் இந்த மண்ணுக்கு குறைந்த பட்சப் பணியையாவது செய்யாமல் மரணிக்கக் கூடாது.

அப்: யாஅல்லாஹ் நான் என்ன முடிவை எடுப்பது?

ரைஹா: இதிலென்ன பிரச்சனை? நீங்கள் ஒரு போர் வீரன். அல்லாஹ் காப்பாற்ற வேண்டும். நீங்கள் வீரமரணமடைந்தால்... இந்த மண்ணில் உங்கள் பெயர் சொல்லவாவது (அழுகை).

அப்: (நினைத்தல்) மனைவி சொல்வதும் ஒருவகையில் சரியாகத் தான்படுகிறது. அவளொரு பாலஸ்தீனத் தாய். எனக்காக இந்தத் தாயகத்துக்காக அவள் செய்துள்ள தியாகங்கள் எத்தனை!இந்த நேரத்தில் அவளுக்கு மனச் சாந்தியளிப்பது என் கடமையல்லவா?

ரைஹா: என்ன யோசிக்கிறீங்க.... இப்படி யோசிக்க என்ன இருக்கு மச்சான்?

அப்: (அன்போடு) ரைஹானா... (பெருமூச்சு) நான் போக வில்லை. இரண்டாம் கட்டப் பயிற்சிப் பிரிவில் சேர முடியாமற் போனாலும் பரவாயில்லை. உங்கள் வேண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்: பார்த்தீங்களா.... பக்கென்று வீசிய காற்றுக்கு குப்பி விளக்கும் அணைந்துவிட்டது.

ரைஹா: மச்...சா...ன் (அன்பாக)

(நேரஇடை....... பச்சிளம் குழந்தையொன்றின் அழுகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாதை

வரலாற்று நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளை ஏற்றுக்கொள்கிறேன்.... இனிமகிழ்ச்சி தானே....

ரைஹா: (மெல்லிய சிரிப்பு) மச்...சான் (சிரிப்பு) யா அல்லாஹ் என் மனப் பிரலாபத்தை... பிரார்த்தனையை அங்கீகரிப் பாயாக.

அப்: (இதமாக) ரைஹானா...

ரைஹா: ம்....

**இடம்:**

**அரண்மனை**

**பாத்திரங்கள்:**

**மன்னர் ஹாரூன் அல்ரசீத். ஜாவித். மஹ்மூத்.**

(அரண்மனை ஆரவாரங்கள்..... அமைதி)

மன்: (அழைப்பு) ஜாவித்...... ஜாவித்...

ஜாவி: இதோ வந்துவிட்டேன் மன்னரே.

மன்: (கம்பீரமாக) ம்... நேரமும் நெருங்கியது. வாக்களித்தவரை த்தான் இன்னும் காணவில்லையே!

ஜாவி: அந்த மஹ்மூத் வாத்தியாரையா சொல்கிறீர்கள். ஒன்பது மணிக்கு முன் வருவதாகத்தான் சொன்னவர். நிச்சயம் வந்துவிடுவார். அதுசரி மன்னரே!..... இத்தனை சொத்து சுகங்களும் உங்களைச் சுற்றிக் குவிந்திருக்கும் போது.... படிப்பு படிப்பென்று எதற்காகத் துடிக்கிறீர்கள்?

மன்: உண்மை தான். பொருத்தமான கேள்வி தான். இத்தனை சொத்துக்களும் என் இருகுழந்தைகளுக்கும் தான் சேரும். ஆனால் ஒரு தந்தை தன் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய சொத்து என்ன தெரியுமா?

ஜாவி: (சிரிப்பு) கல்வியைத் தானே குறிப்பிடுகிறீர்கள்!

மன்: ஆமாம் கல்வி தான் மிகப்பெரிய சொத்து.... மிகப்பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வம். அதனால் தான் மிகத் திறமையான ஆசிரியர் களைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

ஜாவி: அதோ... அவர் வந்து கொண்டிருக்கிறார்.மன்னரே...

மன்: ஆ... அப்படியா (காலடியோசை) ஆ.. வாருங்கள் வாத்தி யாரே வாருங்கள்.... அப்படி அமருங்கள்.

மஹ்: நன்றி. என்னை அழைத்த நோக்கம் ஏதென்றறியலாமா மன்னரே!

மன்: உங்களது திறமையை நானும் பயன்படுத்திக் கொள்வ தற்காகத் தான்.

மஹ்: அப்படியென்றால்...

மன்: என்னுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் உங்களால் கல்வி கற்றுக் கொடுக்க முடியுமாவென்று....

மஹ்: நிச்சயமாக முடியும்...எத்தனையோ பிள்ளைகள் என்னிடம் கல்வி கற்கிறார்கள்... அவர்களோடு உங்களது பிள்ளை களையும் சேர்த்துக் கொள்வது தானே....

மன்: இங்கே எல்லாவிதமான வசதிகளும் உண்டு. குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்கிநாளாந்தம் வந்தீர்களென்றால்.....

மஹ்: மன்னிக்க வேண்டும் மன்னரே!

மன்: என்ன சொல்கிறீர்கள்?

மஹ்: எங்கும் சென்று கல்வி கற்பிக்கும் வழக்கம் என்னிட மில்லை.... அதனால் என் வீட்டுக்கே வந்து.....

ஜாவி: இவர்கள் மன்னரின் பிள்ளைகளாயிற்றே...

மஹ்: கல்வியின் முன்னால் மன்னர் பிள்ளைகளென்றும் மண் குடிசைப் பிள்ளைகளென்றும் வித்தியாசம் பார்க்க முடி யுமா?

மன்: அதனை நானும் ஒப்புக்கொள்கிறேன். கல்வியை சிரமப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுத் தான் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ளவேண்டும். அதனால் உங்கள் வீட்டுக்கு என் பிள்ளைகளை அனுப்பு வதில் எனக்கெந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. நாளை முதல் அனுப்புகிறேன்.

மஹ்: நல்லது மன்னரே..... விடை தாருங்கள்.

**காட்சி-2**

**இடம்:**

**ஜாவிதின் வீடு**

**பாத்திரங்கள்:**

காலித், ஸைனப்

ஸை: இங்க பாருங்க.... நம்ம மன்னர் ஹாரூன்அல் ரசீதின்ற பிள்ளைகள் இருவரும் அடுத்த வீட்டு மஹ்மூதிடம் படிக்க வாறாங்களாமே!

ஜாவி: ஆமா... உண்மை தான்..... இரண்டு கிழமைக்குப் பிறகு தான் உங்களுக்குத் தெரிந்திருக்கே..... ம்....

ஸை: (கோபத்தோடு) நீங்களாவது சொல்ல வேண்டாமா? மாளிகையில வேல பார்க்கிறீங்க... ஊர் மக்களின்ற வாயாலதான் என்ற காதில விழுந்தது.

ஜாவி: அந்தளவுக்கு இதுஒருமுக்கியமான விஷயமில்லையே...

ஸை: உங்களுக்கு முக்கியமான விஷயமில்லயென்றாலும்... அவங்க பெண்டாட்டி இருக்காவே..அவளுக்கு இது பெரிய விஷயந்தான். இப்பொழுதெல்லாம் அவளது வாயும் வார்த்தைகளும் ரொம்பநீளமாயிருக்கு பாருங்க.

ஜாவி: அப்படியா..... என்ன சொல்றா?

ஸை: மன்னனின் பிள்ளைகளே நம்ம வீடு தேடி வந்து தானே படிக்கிறாங்க.... ம்.... அப்படி இல்லயா சொல்றா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவி: இதில ஒரு தவறுமில்லையே.... உண்மையைத் தானே சொல்றா.

ஸை: எனக்குத் தெரியும் நீங்க அப்படித்தான் சொல்லுவீங்க.... எங்க கணவன் மாளிகையில வேல....அப்படிச் சொல்லித் தான் இவ்வளவு நாளும் நான் பெருமைப் பட்டுக்கொண்டி ருந்தன்.

ஜாவி: அதுக்கென்ன.... இனியும் அப்படிச் சொல்லலாம் தானே.... இங்க..... இங்க பாருங்க.... இந்தப் பொறாமையிலயும் பொச்சரிப்பிலயும் ஒரு விதமானஅர்த்தமுமில்ல ஸைனப்.... மஹ்மூத் வாத்தியாரின்ட திறமையை மன்னரே ஒப்புக் கொண்டிருக்கிறார்..... விஷயம் அப்படியிருக்க....

ஸை: (கோபமாக) எப்படியிருந்ததாலும் நீங்களும் ஒரு வார்த்த சொல்லியிருக்கலாம்...

ஜாவி: பிள்ளைகள இவங்க வீட்டுக்குஅனுப்ப வேண்டாமென்றா?

ஸை: இல்ல... வாத்தியார அங்க...

ஜாவி: அதைத்தானே வாத்தியாரே மன்னரிட்டச் சொல்லி விட்டாரே.

ஸை: (வியந்து) மன்னர் ஒத்துக் கொண்டாரா?

ஜாவி: வேறென்ன... கல்வியைத் தேடிச் சென்று பெற்றால் தான் அதன் பெறுமதி விளங்குமென்றும் மன்னர் சொல்லி விட்டார்.

ஸை: (சலிப்போடு) என்ன இருந்தாலும் வாத்தியார் பெண்டாட்டி யின்ற பெருமையை என்னால சகிக்கவே முடியல்ல.... ம்.....

ஜாவி: (தனக்குள்) ம்....இவ்வளவு காலமும் மன்னரின்ட தொடர்பு இந்தப் பகுதியிலஎனக்கு மாத்திரந்தான் இருந்தது.... ம்.... இப்ப அடுத்த வீட்டாருக்கும் ஏற்பட்டிருக்கு... ஆ.... சரிசரி எதுக்கும் ஒரு கைபாப்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 3**

**இடம்:**

**அரண்மனை**

**பாத்திரங்கள்:**

**மன்னர். காவித். அமீன். மாஹூன்**

மன்: (தனக்குள்)..ம்... ஆறுமணி.... இன்னும் பிள்ளைகள் வர வில்லையே! ஆ... வண்டியை உரிய நேரத்தில் அனுப்பி வைத்தேனே.....ம்....ஒரு வேளை வாத்தியார் வீட்டில் தான் சுணக்கமோ? (அழைத்தல் ஜாவித்.... ஜாவித்)

ஜாவி: என்ன மன்னரே....உங்கள் முகத்தில் ஏதோ கலக்கம்...!

மன்: பிள்ளைகள் இருவரும்....

ஜாவி: (வியப்போடு) இன்னும் வரவில்லையா?... இடையில் சுணங்குவதற்கும் காரணமில்லை. வண்டிக்காரனும் கடமை தவறாதவன்.

மன்: ஒரு வேளை வாத்தியார் வீட்டில்...

ஜாவி: ஆமாம் அப்படித்தானிருக்கும். உண்மையைச் சொல்வதற் காக என்னை மன்னிக்க வேண்டும். மஹ்மூத் வாத்தியார் சற்றே இலக்காரம் பிடித்தவர் தான்.

மன்: வீணாகக் குற்றம் சுமத்த வேண்டாம் ஜாவித். ....எதற்கும் போய்ப் பார்த்தால் என்ன?

ஜாவி: (திரும்பி) நல்லது பார்த்து வருகிறேன் (தனக்குள்) இது தான் சந்தர்ப்பம்....இதைத் தவற விடக்கூடாது. பிள்ளைகள் சின்னவர்களாயிற்றே! (குதிரை வரும் சத்தம்) என்ன இவ்வளவு தாமதம்?.... ம்... வாப்பா மிகவும் கோபத்தோடு இருக்கிறார்.

அமீ: (பதறி) நாங்கள் தான் வண்டிக்காரனை தாமதப் படுத்தி விட்டோம்.

மாமூ: இடைவழியில் அருமையான....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாவி: ம்... ஹும்.... அதையெல்லாம் சொல்லி வாப்பாவின் கோபத்தைக் கிளறிவிடப் போகிறீர்களா?

இரு: அப்படியென்றால் நாங்கள் தப்புவதெப்படி?

ஜாவி: (அன்பாக) சரி இப்படிச் சொல்லுங்கள்...வாத்தியார் தான் வீணாகத் தாமதப்படுத்தினாரென்று சொல்லுங்கள்.... என்ன சரிதானே?

மாமூ: சரி அப்படியே சொல்கிறோம்..... எப்படியாவது தப்ப வேண்டுமே. (இருவரும் மாளிகையினுள் செல்லல்)

ஜாவி: மன்னரே!நான் புறப்படத் தயாராகையில் இருவரும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

மன்: (கோபத்தோடு) ஏன் இருவரும் இவ்வளவு தாமதம்?

இருவ: (மௌனம்)

மன்: ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்... ம்.... உங்கள் மீது தான் தவறு போலும்!

அமீ: (தனக்குள்) உயிர் போனாலும் பொய் சொல்லக் கூடா தென்று தான் வாத்தியார் சொல்லி இருக்கிறார்...ஜாவித் மாமா சொல்லித்தந்த பொய்யைச் சொல்லித்தப்புவதை விட...

மன்: (கோபமாக) ஏன் இன்னும் மௌனம்?

அமீ: (தயங்கி)வழியில் ஒரு வித்தைக்காரன். நாங்களும் பார் த்துக் கொண்டிருந்ததால்...

மாமூ: இனிமேல் இப்படியெல்லாம் செய்யமாட்டோம் வாப்பா.

ஜாவி: (தனக்குள்) ம்.... போச்சு போச்சு.... சே...

மன்: சரிசரி முதல் குற்றம்... இனிமேல் தண்டனை தான்.

**காட்சி 4**

**இடம்:**

**அரண்மனை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாத்திரங்கள்:**

**மன்னர், மஹ்மூத்**

மஹ்: மன்னர் அவர்களே!

மன்: வாருங்கள் வாத்தியாரே வாருங்கள்.

மஹ்: பிள்ளைகள் தந்த மடல் கிடைத்தது.

மன்: ஆ... அப்படியா... பிள்ளைகளின் கல்வி நிலை எப்படி யிருக்கிறது வாத்தியாரே!

மஹ்: (சிரிப்பு) என்னிடம் கேட்டா தெரியவேண்டும்! அவர்களைப் பார்த்தால் புரிந்திருக்குமே.

மன்: புரியாமல் என்ன.... மேலும் முன்னேற்ற உங்கள் ஆலோ சனைப்படி ஆவன செய்யலாமே!

மஹ்: நல்லது மன்னரே! மன்னராக இருந்தாலும் குழந்தைகளின் கல்வியில் இவ்வளவு அக்கறை கொள்ளும் ஒரு பெற்றா ரென்ற வகையில்உங்களை நான் பெரிதும் மதிக்கிறேன்.

மன்: என்னுடைய பிள்ளைகள் மாத்திரமல்ல இந்த ராஜ்யத் தின் ஒவ்வொரு பிரஜையும் கல்வியில் சிறந்தவர்களாக விளங்க வேண்டுமென்பதே எனது ஆசை.

மஹ்: கல்வியையும் கற்றவர்களையும் மதிக்காத...

மன்: அதாவது செல்வத்தையும் செல்வந்தர்களையும் மதிக் கின்ற சமுதாயத்தைச் சொல்கிறீர்கள்

மஹ்: (சிரிப்புடன்) ஆமாம்... செல்வத்தைத் துதிக்கின்ற சமுதாய ங்களும் சாம்ராஜ்யங்களும் அந்தச் செல்வத்தை அடைவ தற்காகவே போட்டா போட்டியிட்டு சின்னா பின்னப் பட்டுப் போயுள்ளதை வரலாறு காட்டுகிறது மன்னரே!

மன்: உண்மை முற்றிலும் உண்மை. குறுக்கு வழியில் பணம் பண்ணுவது தான் ஒவ்வொருவரதும் நோக்காக இருந்தால்.... பின்னே எப்படியிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹா: குறுக்குவழியில் பணம் பண்ணுவதல்ல இன்று உருவாகி வரும் பிரச்சனை.

மன்: அப்படியென்றால்...

மஹா: அப்படிப்பட்டவர்களின் பின்னால் திரண்டு நிற்கும் ஒவ்வொரு கூட்டந்தான் இன்றுள்ள பிரச்சனை. செல்வம் படைத்தவன் தான் எதையும் சொல்லத் தகுந்தவன்... அவன் தான் சமுதாயத்தின் தலைவன்... இந்த மனோ பாவத்தை இவர்கள் வளர்த்து விடுகிறார்கள்.

மன்: உங்களைப் போன்ற அறிஞர்கள் தான் இதையெல்லாம் கலைய முன் வரவேண்டும்.

மஹா: (சிரிப்பு) இது சின்ன விஷயமா என்ன? பெரும் போராட்டம்... அதேவேளை போராடிப் போராடி எதைச் சாதிக்கி றோமோ அது தான் உண்மையான வெற்றியும் கூட.

மன்: இதற்காக நீங்கள் மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கை களுக்கும் எனது பூரண ஒத்துழைப்புண்டு வாத்தியாரே...

மஹா: (சிரிப்பு) இனியென்ன மன்னரே! நீங்களே முன்வந்தால்... நாங்களென்ன பின்வாங்கவா போகிறோம்.

மன்: அடடாநேரம் போனதே தெரியவில்லை. சரி இந்தாங்க இது உங்களுக்குத் தான்.

மஹா: (வியந்து)ஆ... இதென்ன இவ்வளவு பெரிய தொகை?

மன்: ம்... இந்த மாதத்துக்குரிய சம்பளம்... அவ்வளவுதான்.

மஹா: ம்...போதும் இதில் ஒரு பங்கு எனக்கு போதும். மற்றதைப் பிடியுங்கள் மன்னரே!

மன்: (வியந்து) என்ன இது?

மஹா: ஒன்றுமில்லை.... எனக்குரிய வேதனத்தை மாத்திரந்தான் பெற்றேன். அதற்கு மேல் கல்வியை வியாபாரமாக்கி பணம் குவிக்க நான் விரும்பவில்லை மன்னரே.

மன்: (தனக்குள்)... அற்புதமான மனிதராக இருக்கிறாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 5**

**இடம்:**

ஜாவிதின் வீடு

**பாத்திரங்கள்:**

ஜாவித், ஸைனப்

ஸை: பாருங்க... வாத்தியாரிண்ட மனைவி தங்கமால் போட்டிருக்கா...இவ்வளவு காலமும் எப்படி இருந்தான்னு எங்களுக்குத் தெரியாதான்னு கேக்கிறன்.

ஜாவி: தெரியாமலென்ன.... ம்.... எல்லாரும் எப்பொழுதும் ஒரே மாதிரியா இருக்காங்க?

ஸை: மன்னரின்ற தொடர்பு ஏற்பட்ட பிறகு ஆக்கள பிடிக்க முடியாமலிருக்கு. ம்.. நீங்களுந்தான் இருக்கிறீங்க.. ஐயோ நான் என்னத்தத்தான் கண்டன்.

ஜாவி: இங்கபாரு.... அரண்மனையில் நானொரு சிற்றூழியன்... அவ்வளவுதானே!

ஸை: ம்... வாத்தியார் மட்டும் என்னவாம்! பெரிய மந்திரியாகவா இருக்கிறார்?

ஜாவி: இருந்தாலும் கல்விய கண்ணா மதிக்கிறவர் நம் மன்னர். அதனால அள்ளியள்ளிக் கொடுக்கிறார் போலிருக்கு.

ஸை: கல்வியாம கல்வி. எப்படியோமன்னர தன்ர வலையில போட்டுவிட்டார் வாத்தியார்... யாருமே மதிக்காமக் கிடந்த பிறவி... ம்... இப்ப என்னென்றா...

ஜாவி: கற்றவங்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பென்று சொல்லியிருக்காங்களில்லையா...

ஸை: என்ன இருந்தாலும் மன்னrட பிள்ளைகள அவங்க நடத்துகின்ற முறையிருக்கே பார்க்கவே அசிங்கமாயிருக்கு.

ஜாவி: அப்படீன்னா...?

ஸை: (மெதுவாக) மன்னர் மாத்திரம் அறிந்திட்டாரென்னா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடக்குமென்னு தெரியாது. ஆமா அவ்வளவு மோசம்.

ஜாவி: (தாழ்ந்தகுரலில்) என்னவிஷயமென்று சொல்லுங்களன் ஸைனப்.

ஸை: அடுத்த வீட்டுக்காரிதானே.... ம்.. கவனிக்காமலா இருப்பன் (சிரிப்பு).

ஜாவி: ஆமா எனக்குத் தெரியாதா உங்கள்?

ஸை: (அழுத்தமாக) தன்ற காலில அணியிற சப்பாத்துக்களைக் கூட மன்னரின் பிள்ளைகளுக்குச் சொல்லித்தானே....

ஜாவி: (ஆச்சரியமாக) ஆ.... உண்மையாகவா... அரண்மனையில பிள்ளைகளின் வேலைகளுக்காக எத்தனையோ சேவகர் களை வைத்திருக்கும் போது..இங்கே அவர்கள் சப்பாத்துக் காவுகிறார்கள்.... மன்னர் மாத்திரம் அறிந்தாரென்றால்....

ஸை: (அலட்சியமாக) அறிந்தால் தானே....

ஜாவி: அறிய வைக்க வேண்டும். (தனக்குள்) ம்..... இது தான் சந்தர்ப்பம்.... வாத்தியாரின் கொட்டத்தை அடக்க....

ஸை: (கவலையுடன்) என் கண்மணிகளால் அதனைக் கண்டத்தி லிருந்து எனக்கு வேதனை தாங்கமுடியல்ல

**காட்சி 6**

**இடம்:**

**அரண்மனை**

**பாத்திரங்கள்:**

**மன்னர், ஜாவித், மஹ்மூத், அமீன், மாமூன்**

ஜாவி: (வேதனை) மன்னரே என்னை மன்னிக்க வேண்டும். இதனை உங்களிடம் முறையிடாமலிருக்க என் மனம் ஒப்பவில்லை.

மன்: அப்படி என்ன விஷயம் ஜாவித்? ஏன் இந்தப் பதட்டம்?

ஜாவி: சின்ன விஷயம் தான். ஆனால் அது உங்களையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமதிக்கும் விஷயம்!

மன்: (கோபம்) என்னை அவமதிக்கும் விஷயமா? எனது பிரசைகள் அந்தளவுக்கு நடந்து கொள்ள.... நான் ஏதும்...

ஜாவ்: இல்லையில்லை. நீங்கள் நினைக்கும்படியாக உங்கள் ஆட்சியிலோ அதிகாரத்திலோ ஏதும் குற்றம் குறைகள் ஏற்படவில்லை.

மன்: அப்படியென்றால்...

ஜாவ்: மஹ்மூத் வாத்தியாரின் மரியாதை கெட்ட நடத்தையைத் தான் குறிப்பிடுகிறேன்.

மன்: (வியந்து)ம்...நம்பமுடியவில்லையே...சரி சொல்லுங்கள்.

ஜாவ்: உங்கள் குழந்தைகளான மாமூனையும் அமீனையும் படிப்பதற்காகத் தானே அங்கே அனுப்புகிறீர்கள்.. ஆனால் அவர்களங்கே சப்பாத்து சுமக்கக் கூடிய அளவுக்கு...

மன்: (ஆச்சரியம்) உண்மையாகவா... வாத்தியார் அப்படிப்பட்ட போர்வழியல்லவே!

ஜாவ்: கண்டவர்கள் கதைக்கிறார்கள் மன்னரே! அதை உங்களிடம் சொல்லி வைக்க வேண்டியது என் கடமை... எதற்கும்....

மன்: தீர விசாரித்தறிவது தான் நல்லது. (அழைப்பு) அமீன்... மாமூன்... இருவரும் இங்கே வாருங்கள்.

(நேர இடைவெளி)

இருவ: ஏன் வாப்பா கூப்பிட்டீங்க.

மன்: ஒரு விஷயம் அறியவேணும்....உண்மையைச் சொல்ல வேண்டும். சரி தானே....

மாமூ: உயிர் போனாலும் உண்மையை சொல்லுமாறு தான் வாத்தியாரும் சொல்லித் தந்திருக்கிறார்.

அமீ: ஆமாம் வாப்பா.... என்ன விஷயம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்: (இதமாக)வாத்தியார் வீட்டில எடுபிடி வேலைகளெல்லாம் செய்றீங்களாமே... சப்பாத்துக்களக் கூட....

மாமூ: அடடா... இது தான் நடந்த கதை....

**முன் நினைவுக் காட்சி**

**(வாத்தியார் வீடு)**

அமீ: என்ன வாத்தியார் இன்னக்கி எங்கோ புறப்படுறீங்க போலிருக்கே....

மஹர்: வெளியூரில ஒரு விருந்துக்கு அழைப்பு அங்கு தான் போகவுள்ளேன்.

அமீ: (தனக்குள்) ம்.... அவருடைய சப்பாத்துக்கள கொண்டு வந்து கொடுத்தால் என் மீது ரொம்பவும் இரக்கம் காட்டுவாரே....

மாமூ: (தனக்குள்) தம்பி உள்ளே போகிறான்.... இந்த சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தி நாலும் வாத்தியாரின் அன்பைப் பெற்றுக் கொள்ள வேணும்.

அமீ: (கடுகடுப்பாக) நான் தான் சப்பாத்துக்கள கொடுக்கப் போறன்... அதற்குள்ள நீயும்...

மாமூ: இல்ல நான் தான் கொண்டு போய்க் கொடுக்கணும் (இருவரும் இழுபறிப்படல்)

மஹர்: (அதட்டலாக) என்ன என்ன இது ரெண்டு பேரும் சண்ட பிடிக்கிறீங்க?

அமீ: உங்கட சாப்பாத்துக்கள நான்தான் கொண்டு வரப் பார்த்தன். அதுக்குள்ள இவனும்...

மாமூ: அதெப்படி முடியும்! நான்தான்

மஹர்: வேண்டாம் வேண்டாம் நானே எடுத்துக்கொள்றன். நீங்க இப்படியெல்லாம் செய்றத நானே விரும்பல்ல பாருங்க.

அமீ: உங்களுக்கு உதவி செய்யக் கூடிய வாய்ப்பு எப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்குமென்னு எதிர்பார்த்துக் கொண்டே இருந்தன் வாத்தியார்.

மாழு: நானும் தான் வாத்தியார்.

மஹ: சரிசரி நானே சொல்றன். ஆளுக்கொரு சப்பாத்து கொண்டு வாங்களன்.

**-நினைவு நிறைவு-**

மாழு: இது தான் வாப்பா நடந்த விஷயம்.

அமீ: நல்லவேளை....அதோவாத்தியாரும் வருகிறார்.. கேட்டுத் தான் பாருங்களேன்.

மஹ: என்ன மன்னரே! பிள்ளைகளோடு பெரிய சம்பாஷணை யாக இருக்கே!

இமன்: உங்களைப் பற்றி ஒரு குற்றச்சாட்டு. அதைத்தான் விசாரித்து உண்மையைத் தெரிந்துகொண்டேன்.

ஜாவி: மன்னிக்க வேண்டும். மன்னரின் பிள்ளைகளை நீங்கள் மரியாதைக் குறைவாக நடத்துவதாக ஊருக்குள் ஒரு கதைஉலாவுகிறது.அதைத்தான்நான்வந்துசொன்னேன்.

மஹ: (சிரிப்பு) எங்களது ஒவ்வொரு நடத்தையையும் குற்றக் கண்ணோடுதான் ஊர் பார்க்கிறது. இதையெல்லாம் நாம் ஏன் பொருட்படுத்த வேண்டும்?

மன: அறிவுடையோரின் பண்பே அதுதான் ஜாவித். சரி பிள்ளை கள் இருவரும் இங்கே வாங்க. இந்தாங்க... எனது விசேட பரிசு இது.

இரு: ஏன் வாப்பா இவ்வளவு பெரிய பரிசு.

மன்: வாத்தியாருக்கு போட்டி போட்டுக் கொண்டு மரியாதை செய்திருக்கிறீர்கள்.அந்த மரியாதை எங்கே இருக்கிறதோ.... அங்கு தான் சிறந்த பண்பும் பயன்மிகுந்த கல்வியும் செழிக்க முடியும். நீங்கள் வழங்கிய மரியாதைக்குத் தான் இந்தப் பரிசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையில் கருகிய பூ

*சமூக நாடகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்:**

மருத்துவமனை

**பாத்திரங்கள்:**

அஸ்மா. நஸ்ரினா. ரிஸ்வி. டாக்டர்

(கார் விரைந்து செல்லல்)

ரிஸ்: (தனக்குள்)ம்....குழந்தைக்குஎன்ன கதியோதெரியல்ல.... ம்.... மூன்று நாளைக்கு முன்னால தான் புறப்பட்டன்... அப்போதெல்லாம் என்னோட கொஞ்சி விளையாடி... டடா சொல்லி... அதற்குள்ள இப்படி எட்மிட் பண்ணக் கூடிய அளவுக்கு.... ஆ.... இந்த சந்தியால தான் திரும் பணும்... (காரை நிறுத்தல்)

அஸ்: (மெல்ல) அது... அது மகன்ற கார்தானே...

நஸ்: ஆமா செய்தி கிடச்சதும் பறந்து வந்திருக்காரில்ல.

அஸ்: குழந்தைக்கு ஒன்னென்னா அப்புறம் யாரால் தான் பொறுத்துக்க முடியும்!

நஸ்: (பயத்துடன்) மாமி... எனக்கென்ன பயமா இருக்கு..

அஸ்: (இதமாக) எதுக்கு மகள் பயப்புடணும்.

நஸ்: எனக்கு என்ன சொல்றதென்னே தெரியல்ல... எல்லாக் குற்றத்தையும் என்மேலதான் போடப்போகிறார்

ரிஸ்: (பதற்றத்தோடு) நஸ்ரினா... என்னங்க நடந்திச்சி... குழந்தைக்கு என்ன நடந்திச்சி?

அஸ்: அல்லாஹ்வுக்குத்தான் தெரியும் மகன்.

நஸ்: (கவலையுடன்) ரெண்டு நாளா ஒன்னுமே சாப்பிடல்ல.... வாய்க்கெடுக்கிறதும் அப்புறம் சத்தி போடுறதும்....

அஸ்: விளையாட்டுப்பருவந்தானே கொஞ்சம் கூட சுறுசுறுப்பில்லாம இருந்ததால டொக்டரிட்ட காட்ட வந்தம்.

ரிஸ்: டொக்டர் என்ன சொன்னாங்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸ்: உடனடியா எட்மிட் பண்ணச் சொன்னார்.

ரிஸ்: (மெல்ல) கொடுக்க வேண்டியமருந்தெல்லாம் எழுதிட்டுப் போயிருக்கிறார்...

நஸ்: அது அது டொக்டர் தானே வாறார்.( டொக்...டொக்..)

ரிஸ்: எக்ஸ்யூஸ்மி டொக்டர்.. என்ற குழந்தைக்கு...

டொக்: ஆ... உங்க குழந்தைதானா?

ரிஸ்: ஆமா டொக்டர்.

டொக்: வந்து எங்களால முடிந்த எல்லா ட்ரீட்மண்டும் கொடுத்துக் கொண்டிருக்கிறம்... கொஞ்சம் ஸீரியஸ் தான்.... ஏதோ பிரார்த்தன செய்யுங்க...

எல்: டொக்டர்...குழந்தய எப்படியாவது காப்பாத்துங்க டொக்டர்.

டொக்: ஆத்திரப்படுறதில அர்த்தமில்லையே.. நாம் கடைசி வரையில முயற்சிப்பம்....அவசரமா ஒரு ஸ்பெஷலிஸ்ட் கோல் பண்ணியிருக்கோம்...இப்ப குழந்தைய போய்ப்பார்க்கலாம்... (எல்லோரும் செல்லல்.... அமைதி... சோகராகம்)

நஸ்: என் குழந்த படுக்கிறதப் பாருங்க மாமி (அழுகை)

அஸ்: இந்தக் குழந்தைக்கு நல்ல சொகத்தக் கொடுத்திடு யா அல்லாஹ்...

ரிஸ்: (அழுது) ஐயோ இந்தப் பச்சக்கொழந்தையிட கையக் குத்தி ஸேலைன் கூட வைச்சிருக்காங்களே....

## காட்சி 2

**இடம்:**

**ரிஸ்வியின் வீடு.மருத்துவமனை**

**பாத்திரங்கள்:**

ரிஸ்வி. நஸ்ரினா. பெண் டாக்டர். அஸ்மியா

ரிஸ்: (இதமாக) நஸ்ரினா...

நஸ்: (சோகமாக)என்ற காதெல்லாம் அடைத்துப் போன மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கு... உம்மா உம்மான்ற அந்தக் குரல் இந்த மூனு நாளா என் காதில விழல்லயே.....

ரிஸ்: (பெருமூச்சு) அதென்னாலும் பரவாயில்லை...திருப்தி படக் கூடியதா உடல் நிலையில ஒருமாத்தத்தையும் காணல்ல யே....

நஸ்: என்னமாதிரி எங்களப் போட்டுசொதிக்கிறான் பாருங்க.

ரிஸ்: ம்.... எவ்வளவு கஷ்டத்தோட... எவ்வளவு பிரார்த்தனை களோடு கிடைத்த கொழுந்த... ம்... அதுக்குத்தானா இந்தச் சோதன....

நஸ்: ஆமா அதயெல்லாம் நெனச்சிப் பார்க்கிறப்போ....

**-முன் நினைவுக் காட்சி-**

(ரிஸ்வியின் விடு)

நஸ்: (இதமாக) என்னங்க.. முடிச்சிட்டீங்களா? சிகரட்ட முடிச்சிட் டீங்களான்னு கேட்டன்.

ரிஸ்: (சிரித்து) சரி என்ன சொல்லப் போறீங்க.

நஸ்: நம்ம கல்யாணம் முடிந்து எவ்வளவு காலமென்று சொல் லுங்க.

ரிஸ்: (தனக்குள்) ஒரு வருஷம்... ம்.... நவம்பர்.. டிசம்பர்... (சத்தமாக) ஒரு வருஷமும் ஒன்பது மாதமும்..

நஸ்: கிட்டத்தட்ட இரண்டு வருஷம்... சரிதானே...?

ரிஸ்: சரி அதுக்கென்ன...

நஸ்: நமக்குப் பிறகு கல்யாணம்செய்தவங்களுக்குக் கூட....

ரிஸ்: கொழுந்தைகளிருக்கு.... அதத்தானே சொல்லப்போறீங்க....

நஸ்: ஆமா

ரிஸ்: இப்படித்தான் நஸ்ரினா.....எல்லாருக்கும் ஒரே மாதிரியா.... சில பேருக்கு கொஞ்சம் முன்னப் பின்னாகும் தானே...

நஸ்: காண்றவங்களெல்லாம் புதிய செய்தி இல்லயான்னு கேக்கிறாங்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஸ்: (சிரித்து) எல்லாம்பழைய செய்திதான்னு சொல்லுங்க.

நஸ்: (அலுப்போடு)அப்படி எத்தின நாளைக்குத் தான் சொல்லு றது?

ரிஸ்: நம்மஉம்மாவுக்கும் ஐந்து வருஷத்துக்குப் பிறகு தான் கொழந்த கிடச்சிருக்கு.

நஸ்: ஏதோ எனக்கென்ன பயமா இருக்கு.

ரிஸ்: இந்தப் பொம்பிளைங்களே இப்படித்தான்... அர்த்தமில்லாத சந்தேகம்...அர்த்தமில்லாத பயம்...அர்த்தமில்லாத அவசரம்...

நஸ்: (தவித்து) ஒரு வேள நமக்கு கொழந்தப் பாக்கியமே இல்லாமப்போனா...

ரிஸ்: (சிரிப்பு) சும்மாதான் கேக்கிறன்... நம்ம குடும்பத்திலயோ.. இல்ல உங்க குடும்பத்திலயோ கொழந்த குட்டி இல்லாத வங்க யாராவது இருக்காங்களா....

நஸ்: அது சரி

ரிஸ்: அது சரீன்னா... நம்ம விஷயத்தில மாத்திரம் எப்படி பிழைக்கும்...

நஸ்: எதுக்கும் ஒருக்கா...

ரிஸ்: டொக்டர கொன்ஸல் பண்ணினா நல்லதென்னு....

நஸ்: ஆமா ஒரு லேடி விஷஜீ டொக்டர் வந்திருக்காவாம்

ரிஸ்: சரி போய்க் காட்டுவம்.

நஸ்: (மகிழ்ந்து)இப்ப தான்எனக்கு சந்தோஷம்.... கொஞ்சம் இருங்க ஒரு கூல்டிரிங்ஸ் கொண்டுவாரன்.

ரிஸ்: அந்த சிகரட் பக்கற்ற இங்கால தாங்க...

**-காட்சி மாற்றம்-**

(மருத்துவமனை)

டொடா: ஆ... வாங்க வாங்க

ரிஸ்: எப்படி டொக்டர் நம்ம விஷயம்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொ.டா: வந்து... ரிபோட்கிடச்சிருக்கு மிஸிஸ் நஸ்ரின பயந்தது போல.... அப்பிடியொன்னும் கிடையாது.... நீங்க இரண்டு பேருமே ரொம்ப ஆரோக்கியமானவங்க... எந்தக் குறையு மில்ல.... நிச்சயமா உங்களுக்கு கொழந்த கிடைக்கும்.

நஸ்: (மகிழ்ந்து) தேங்க்யூ டொக்டர்.

டொ.டா: பட்

ரிஸ்: (வியந்து) என்ன டொக்டர்.

டொ.டா: நஸ்ரினாவுக்கு சின்ன பிரச்சனையொன்னிருக்கு.. ரெண்டு மாதம் இந்த கெப்ஸியூல்ஸ ஒழுங்கா பாவிங்க.

நஸ்: நல்லது டொக்டர்...

ரிஸ்: நாங்க வர்றோம்.

டொ.டா: அடுத்த முற நல்ல செய்தியோட வாங்க.

நஸ்: (நேரஇடை) ஏதோ பிரச்சன இருக்காமே.

ரிஸ்: ஆமா அதுக்கு ஆபரேஷனா பண்ணச் சொன்னாங்க... மருந்து தந்திருக்கா...

நஸ்: (தனக்குள்) யாஅல்லாஹ்.... என் வயிற்றில் சீக்கிரமா கொழந்தப் பாக்கியத்த தந்தருள்வாயாக.

ரிஸ்: என்ன வானத்தப் பார்த்து கையேந்திக்கிட்டிக்கீங்க... ம்.... உம்மாவும் எதிர்பார்த்துக்கிட்டிருப்பா... எவ்வளவு சந்தோஷப்படுவா தெரியுமா?

**காட்சி மாற்றம்**

(ரிஸ்வியின் வீடு)

நஸ்: (குமட்டல்.... வாந்தி)

அஸ்: என்னம்மா என்ன செய்யுது?

நஸ்: ஆ..அ... (குமட்டல்)

அஸ்: ஆ... மெல்ல மெல்ல... இங்கால திரும்புங்க.... ஆ.... முதுகத் தடவிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸ்: (வருத்தத்துடன்) மாமி.... வயிற்றப் பிடுங்கிறாப் போலிருக்கே...

அஸ்: அதெல்லாம் ஒன்னுமில்ல.... இப்படியெல்லாம் வரத் தானே செய்யும்.... கொஞ்சம் உயர்ந்து படுங்க... ஆ.... இந்த தலையணைய முதுகுக்கு வைக்கிறன்.....

நஸ்: தலையும் இடிக்கிறாப்போல....

ரிஸ: (வந்தபடி) என்னம்மா நஸ்ரினாக்கு என்னவாம்?

அஸ்: (சிரிப்பு)

நஸ்: ஆ... வாயெல்லாம் ஒரு மாதிரி...

ரிஸ்: ம்... நோயாளி கஷ்டப்படுறா.... உம்மா சிரிக்கிறா...

அஸ்: சிரிக்காம என்ன செய்றது... நீ ஒரு கொழந்தைக்கு தகப்பனாகிட்டியே...

ரிஸ்: (மகிழ்ந்து) அப்படியா... உங்க வாய்க்கு சீனி போடணும்.... இவ்வளவுநாளாஏங்கியேங்கி இருந்தோம்.

அஸ்: ரிஸ்வி: இப்படி கொஞ்சம் உக்காரு (திரும்பி)நான் போய் கோப்பி போட்டிட்டு வாரன்.

நஸ்: (வேதனை) குமட்டலோட நானிருக்கிறன்... நீங்க சிகரட்ட பத்திக்கிட்டு பக்கத்திலிருந்தா... முதல்ல அத வீசுங்க...

ரிஸ்வி: ஆ... அ.. கடைசி தம்... சரிசரி வீசிட்டன்.

நஸ்ரி: (குமட்டல்) எவ்வளவு தான் வருத்தமிருந்தாலும்... எனக்கு இப்பதான் சந்தோஷம் பாருங்க...

ரிஸ்வி: இப்ப உங்க முகத்தில தாய்ம அப்படியே தெரியுது.

நஸ்ரி: ம்.... நமக்கு... என்ன கொழந்த கிடைக்கும்?

ரிஸ்வி: உங்களைப்போல ஒரு பெண் கொழந்த கிடச்சா ரொம்ப நல்லது.

நஸ்ரி: ம்... உங்களைப்போல ஒரு ஆண் கொழந்ததான் எனக்கு வேணும்.

ரிஸ்வி: சரி அல்லாஹ்ட தீர்ப்ப ஏற்றுக்கொள்வோமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்: (வந்தபடி) நஸ்ரினா இந்தாங்க... இந்தக் கோப்பியக் குடிங்க....

நஸ்ரி: வாயெல்லாம் கசக்கிது... அதுக்குள்ள கோப்பி...

ரிஸ்வி: (மெல்ல) அப்ப புளிப்பா ஏதாவது.

**காட்சி மாற்றம்**

(மருத்துவ மனை)

ரிஸ்வி: (கவலையோடு) ஐந்து மணியாயிருச்சில்ல...

அஸ்: ஆமா... ஐந்து மணிவரையில பாக்கிறதாத்தான் டொக்டர் சொன்னார்.

ரிஸ்வி: நஸ்ரினாட முகத்தில வேதனநிறைஞ்சிருக்கு பார்த்தீங்களா

அஸ்: தலைப் பிரவசமென்னா கொஞ்சம் பொறுப்புத் தான்

ரிஸ்வி: உண்மைதான்... ஆனா இந்தளவுக்கு...

அஸ்: என்ன செய்றது அல்லாஹ்தான் லேசாக்கணும்.

ரிஸ்வி: அங்க... டொக்டர்.. நேர்ஸெல்லாம் வாராங்க...

(சப்பாத்தொலிகள்)

டொக்: மிஸ்டர் ரிஸ்வி.. நேரம் கடந்திருச்சி.. ஒப்ரேஷன் தியேட்டருக்கு எடுக்கப் போறம்... பயப்பட ஒன்றுமில்ல... தைரியமா இருங்க.

ரிஸ்வி: (கம்மிய குரல்) நல்லது டொக்டர்.

அஸ்: ஏன் மகன் சின்னப் பிள்ளை மாதிரி.... இதெல்லாம் நடக்காத விஷயங்களா...

ரிஸ்வி: நஸ்ரினாவே ஒரு கொழந்த மாதிரி..

அஸ்: என்ன செய்றது ரிஸ்வி.... எல்லாம் நலவுக்குத் தான்.

ரிஸ்வி: ரெண்டு உயிரையும் அவன்தான் பாதுகாக்கணும்.

அஸ்: (தனக்குள்) தாய்க்கும் பிள்ளைக்கும் ஒரு தீங்குமில்லாமக் காப்பாத்து யாஅல்லாஹ்.... நோன்பு வைத்து ஏழைகளின்ற பசிதீர்க்கிறன் யாஅல்லாஹ்....

ரிஸ்வி: என்ன ஒரு சத்தத்தையும் காணமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்: எங்கட அவசரத்துக்கு நடந்து முடியுமா?
(குழந்தையின் அழுகுரல்)

ரிஸ்வி: (மகிழ்ந்து) கொழுந்த கிடச்சிருச்சி... கொழுந்த கிடச்சிருச்சி..

அஸ்: அப்படித்தான் தெரியுது.

ரிஸ்வி: அங்க டொக்டர் அவசரமா வந்துகிட்டிருக்கிறார்.
(சப்பாத்தொலி)

பெ.டா: மிஸ்டர் ரிஸ்வி... கொங்கிராஜுலேசன்ஸ்... ஆண் கொழுந்த கிடச்சிருக்கி.

அஸ்: எல்லாப் புகழும் அவனுக்குத் தான்.

ரிஸ்வி: (பரபரப்போடு) நாம போய்ப் பார்க்கலாமா டொக்டர்.

பெ.டா: ஏனிப்படி அவசரப்படுறீங்க... இன்னுமொரு பத்து நிமிஷம் பொறுங்களன்.

ரிஸ்வி: சரி டொக்டர்.

பெ.டா: ஆ.. கொழுந்தயப் பார்த்துட்டு என்ன வந்து சந்தீங்க.

ரிஸ்வி: நல்லது டொக்டர்...... (பெருமூச்சு) ஒபரேஷனென்டாலும் பரவால்ல.தாயும் கொழுந்தயும் சௌக்கியமெண்டால் சரி.

அஸ்: இனி போகலாமில்ல...

ரிஸ்வி: சரி வாங்கும்மா.

**காட்சி மாற்றம் நிறைவு**

(ரிஸ்வியின் வீடு)

ரிஸ்வி: எப்பிடி இதெல்லாம் நினைச்சுப்பார்க்காம இருக்க முடியும்!

நஸ்ரி: (கவலை) நெஞ்சு வெடிக்கிறாப்போல இருக்கு... அந்தக் கொழுந்த இல்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையான்னு கேக்கிறன்.

ரிஸ்வி: (அழுது) அப்படிச் சொல்லாதீங்க நஸ்ரினா அப்பிடிச் சொல்லாதீங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 3**

**இடம்**

**ரிஸ்வியின் வீடு. மருத்துவமனை.**

**பாத்திரங்கள்:**

**ரிஸ்வி. அஸ்மா. நஸ்ரினா. பெண்டாக்டர். (தொலைபேசி மணி)**

ரிஸ்வி: ஹலோ..

அஸ்: வோடிலிருந்து உம்மா பேசுறன்.

ரிஸ்வி: (பதட்டம்) உம்மாவா என்ன விஷயம்?

அஸ்: கொழுந்தயின்ற நிலம ரொம்ப மோசமா இருக்கு.

ரிஸ்வி: அப்பிடியா...

அஸ்: அவசரமா இருரண்டு பேரும் வாங்க.

ரிஸ்வி: இதோ வந்திடுறம்... (டெலிபோன் வைத்தல்)

நஸ்ரி: மாமியா பெசிறாங்க?

ரிஸ்வி: கொழந்தைக்கு ஸீரியஸாம்... ம்.... அவசரமா ரெடியாகுங்க.

நஸ்ரி: (வெறுப்போடு) என்ன ரெடியாக இருக்கு... போவம்.

ரிஸ்வி: சரி வாங்க வாங்க... ஜன்னல் கதவெல்லாம் மூடுங்க...

(கார் விரைதல்)

ரிஸ்வி: நஸ்ரினா...

நஸ்ரி: ம்...

ரிஸ்வி: என்ன மௌனமா இருக்கிறீங்க?

நஸ்ரி: கதறி அழவேணும் போலதானிருக்கு. ஆனா அழுவதற்குக் கூட கண்ணீர் இல்லயே...

ரிஸ்வி: அழுதழுதே கண்ணீர் வற்றிப் போச்சுதில்ல...

நஸ்ரி: நம்ம விதிய ஆண்டவன் ஏன் இப்பிடி எழுதிப் போட்டான்.

ரிஸ்வி: அதத் தெரிந்துகொள்ற சக்தி இருந்தா நாங்க மனிதர்களில்ல பாருங்க (கார் நிற்றல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸ்ரி: (பதறி) மாமி கொழந்நதயின்ற நிலம என்ன?

அஸ்: (கவலை) கண்ணாடிப் பெட்டிக்குள்ள வெச்சிட்டாங்க... மூச்சு வாங்கவே முடியல்ல போலிருக்கு.

ரிஸ்வி: டொக்டர் வாராரில்ல (சப்பாத்தொலி) டொக்டர்.. டொக்டர்.. என்ன இது திரும்பிக்கூடப் பார்க்காமப் போறார்.

நஸ்ரி: அப்படீன்னா...

அஸ்: டொக்டர் திரும்பி வரும்போது...

ரிஸ்வி: (அழுகை) ஐயோ... என்ற கொழந்தையின் கதி இப்படிப் போச்சே... ஐயோ என்னால தாங்க முடியல்லயே நஸ்ரினா...

நஸ்ரி: ஏன் இப்படிக் கத்துறீங்க... சனங்கள் பாக்கிறாங்க.. நடக்க இருக்கிறது நடக்குந்தானே...

ரிஸ்வி: (அழுகை) நான்.. நான் அதுக்காக அழல்ல

நஸ்ரி: அப்படீன்னா எதுக்காக.....?

ரிஸ்வி: இவ்வளவு நாளா ஒரு விஷயத்த உங்களிட்ட மறச்சசன் நஸ்ரினா.. அத நினைச்சுத் அழுறன் நஸ்ரினா...

நஸ்ரி: அதென்ன விஷயம்?

ரிஸ்வி: சொல்றன் சொல்றன்.... இதுக்குமேல மறச்சு வைக்கிறதில அர்த்தமில்ல... அர்த்தமே இல்ல நஸ்ரினா...

**முன் நினைவுக் காட்சி**

(மருத்துவமனை)

டொக்டர்: எப்பிடி மிஸ்டர் ரிஸ்வி...பேபி கிடச்சிட்டுது இனி மகிழ்ச்சி தானே...

ரிஸ்வி: அதில உங்களுக்கு நிறையப் பங்கிருக்கு டொக்டர்.

டொக்டர்: அது நம்ம கடமயில்லயா.

ரிஸ்வி: உங்களப்பொறுத்தமட்டில் கடமயா இருக்கலாம்.. எங்களப் பொறுத்த மட்டில் பெரிய உபகாரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொ.டா: (சிரிப்பு) கொழந்தயே கிடைக்காதுன்னு பயப்பட்டீங்க.
ரிஸ்வி: மிஸிஸ் தான் பயந்தா...உங்களிட்ட வரணுமென்னு ஒரே பிடியா நின்னா.
டொ.டா: பெண்களைப்பொறுத்தமட்டில அதுநியாயமான பயந்தான்.
ரிஸ்வி: (சிரிப்பு) நீங்களும் ஒரு பெண்ணாக இருக்கிறதால அத என்னால மறுக்க முடியாது டொக்டர்.
டொ.டா: கேட்கக் கூடாத கேள்வி.. கேட்கவேண்டியிருக்கு...
ரிஸ்வி: கேளுங்க டொக்டர்
டொ.டா: இன்னும் எத்தின கொழந்தைகள எதிர்பார்க்கிறீங்க?
ரிஸ்வி: அவனுடைய நாட்டப்படிதான்
டொ.டா: ரொம்ப புத்திசாலித்தனமா பதில் சொல்லீட்டிங்க. அதோ.. இன்னொரு விஷயம் உங்களோட சொல்ல வேண்டியிருக்கு....
ரிஸ்வி: சொல்லுங்க டொக்டர்... இதுக்குப் பிறகு எப்ப உங்கள சந்திக்கப்போறம்.
டொ.டா: எதையும் தாங்கும் இதயம் இருக்கணுமில்லையா மிஸ்டர் ரிஸ்வி
ரிஸ்வி: (பதட்டமாக) ஆமா டொக்டர்.. ஏன் அப்பிடிச் சொல்றீங்க?
டொ.டா: வந்து... மிஸிஸ் நஸ்ரீனாவுக்கு நடந்த ஒபரேஷனிருக்கே அது கொஞ்சம் வித்தியாசமானது பாருங்க.
ரிஸ்வி: அப்படீன்னா...
டொ.டா: அத உடனடியா செய்யாமலிருந்தா உயிருக்கே ஆபத்து.
ரிஸ்வி: மை கோட்
டொ.டா: அதே நேரத்தில... இனிமேல கொழந்த கிடைக்கக் கூடிய வாய்ப்பையும் அவங்க இழந்திட்டாங்க... (அதிர்ச்சி இசை)
ரிஸ்வி: (பிரலாபித்து) ஐயோ... ஒரேயடியா என்தலையில இடியப் போட்டிட்டீங்களே டொக்டர்... அத எப்படி நான் அவங்க ளிட்ட சொல்ல முடியும் டாக்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டொ.டா: ஆத்திரப் பட வேண்டியதில்ல... சொல்றதும் சொல்லாமலி ருப்பதும் உங்களப் பொறுத்தது.......... மனப் பக்குவத்தப் பொறுத்தது...

**நினைவு நிறைவு**

நஸ்ரி: (ஆவேசத்தோடு) இவ்வளவு நாளும் ஏன் மறச்சீங்க... எனக்குச் சொல்லாம ஏன் மறச்சீங்க... நீங்க எனக்குத் துரோகம் செய்திட்டீங்க... ஆமா (இளைத்தல்)

ரிஸ்வி: (இதமாக) நஸ்ரினா நீங்க என்ன சொல்றீங்க... உங்க மனம் நோகக்கூடாதென்னு தான் இவ்வளவு நாளும் சொல்லாமலிருந்தன்.

நஸ்ரி: இப்பமட்டும் சந்தோசமடையிறனாக்கும்... அதனால தான் சொல்லிட்டீங்க....

ரிஸ்வி: (இதமாக) இதுக்குப் பிறகும் அத மறைத்துவைக்கிறதில எந்தவிதமான அர்த்தமுமில்ல.... ஆமா...

நஸ்ரி: (அழுது) ஐயோ.... இனிமேல கொழுந்த கிடைக்காது...... இருக்கிற கொழுந்தயின்ற நிலமயும் இப்பிடி...ஐயோ யாரிட் டப் போய்ச் சொல்றதென்னு தெரியல்லியே....

**காட்சி 4**

**இடம்:**

மருத்துவமனை

**பாத்திரங்கள்:**

டாக்டர், நஸ்ரினா, ரிஸ்வி

டாக்ட: ஆ... வாங்க

நஸ்ரி: எப்பிடி டொக்டர் கொழுந்தைக்கு?

டாக்: ஸ்பெஷலிஸ்ட் தன்ற ரிபோட்ட தந்திருக்கிறார்...அதன்படி கொழுந்தைக்கு பயங்கரமான நோயொன்று ஏற்பட்டிருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஸ்வி: (அதிர்ந்து) பயங்கரமான நோயா?

நஸ்ரி: அதென்ன நோய் டொக்டர்.

டாக்ட: சுவாசப்பையில... ம்... கென்ஸர் ஏற்பட்டிருக்கு... (அதிர்ச்சி இசை)

நஸ்ரி: (அதிர்ந்து) இந்தப் பாலகனுக்கா டொக்டர் கென்ஸர்?

ரிஸ்வி: (தாழ்ந்த குரலில்)என்ன காரணமென்னு தெரிஞ்சுக்கலாமா டொக்டர்?

டாக்: பல காரணங்கள் இருக்கு... பெரும்பாலும் இதுக்கு சிகரட் புகைதான்....

ரிஸ்வி: என்ன சொன்னீங்க... ரெண்டு வயஸுக் கொழுந்தைக்கும் சிகரட்டுக்கும் எந்த சம்பந்தமுமில்லையே டொக்டர்!

நஸ்ரி: அப்படியென்னா... இருபது வருஷமா புகைத்துத் தள்ளிற இவருக்கல்லவா ஏற்பட்டிருக்கணும்.

ரிஸ்வி: ஆமா டொக்டர்... எனக்குத் தான் ஏற்பட்டிருக்கணும்

டாக்: அங்க தான் தவறிருக்கு.... சிகரட் புகைக்கிறவங்களுக்கு மாத்திரந்தான் அதன் பாதிப்பு ஏற்படுமெங்கிறதில அர்த்தமில்ல.

ரிஸ்வி: அப்பாடீன்னா...

டாக்: சிகரட் புகைக்கிறவங்கள சுற்றிவர இருக்கிறவங்க சுவாசிக்கிறப்போ... அவங்க உடலுக்குள்ளயும் அந்தப்புகை போக முடியுந்தானே...

ரிஸ்வி: (அதிர்ந்து) அப்படியா... அப்ப நான் புகைத்த புகைதான் என் குழந்தையின்ற உடலுக்குள் புகுந்து....

நஸ்ரினா: (கோபத்தோடு) பாத்தீங்களா.. பாத்தீங்களா... இதப்பத்தி எதுவுமே எனக்குத்தெரியாது... இருந்தாலும் எத்தின முற உங்கள கெஞ்சிக் கேட்டிருக்கன்... அந்தப் பழக்கத்த விடுங்கோன்னு சொன்னன் கேட்டேங்களா....? இப்ப அந்தப் புகையே பேயாக வந்து உங்க கொழுந்தயின்ற கழுத்த நெரிச்சுக்கிட்டிருக்கே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிஸ்வி: (அழுது) டொக்டர்... சத்தியமாகச் சொல்றன் இனிமேல நான் சிகரட்டத் தொடவே மாட்டன்..... தொடவே மாட்டன் டொக்டர்... ஆமா நஸ்ரினா இனித் தொடவே மாட்டன்.

டாக்: மிஸ்டர் ரிஸ்வி...இது காலம் கடந்த ஞானம்... இனிமேல நீங்க தொட்டாலும் தொடாவிட்டாலும்... (மெல்ல) உங்க கொழுந்த உயிர் தப்புமெங்கிறத்துக்கு எந்தவிதமான உத்தரவாதமும் கிடையாது (சோக இசை)

இருவ: ஐயோ டொக்டர்... எங்க கொழுந்த... எங்க கொழுந்த... அது தானா கடைசி முடிவு.... டொக்டர்.... டொக்டர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்மானம்

*சமூக நாடகம்*

பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்**

மாஸ்டர்வீடு மற்றும் நஸீமா வீடு

**பாத்திரங்கள்**

மாஸ்டர், கரீமா, நஸிமா

கரீமா: ம்...என்ன இது அப்படியே உக்காந்து எவ்வளவு நேரமா யோசிச்சுக்கட்டிருக்கீங்க.... ம்..நானுந்தான் பார்த்துக்கிட்டி ருக்கன்.

மாஸ்டர்: வேறென்ன கரீமா.. நம்ம ஸ்கூல் விஷயமாத் தான்.

கரீமா: (சினத்தோடு) முப்பது வருஷமா ஸ்கூல் ஸ்கூலென்னு தானே காலத்த கடத்தனீங்க.... கண்ட பயன் ஒன்னுமில்ல... இப்ப பென்ஷன் எடுத்த பிறகாவது....

மாஸ்டர்: அதுதானே பாருங்க.... எல்லாருமாச் சேர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில முக்கியஸ்தராப் போட்டிட்டா ங்க.... இன்னொரு வகையில பாத்தா..... விஷயந் தெரிந்த நாம விட்டிட்டு பின் வாங்கவும் கூடாதில்லையா?

கரீமா: என்னவும் செய்யுங்க... அதப்பத்தி எனக்கொன்னுமில்ல... ஆனா நம்ம விஷயமும் முன்னால இருக்கு அதுக்கும் வழியப் பாருங்க.

மாஸ்டர்: (யோசித்தபடி) நம்ம விஷயமென்னா....

கரீமா: (கடுகடுப்பாக) மகள்ற கல்யாணத்தத்தை சொல்றன்.

மாஸ்டர்: (இதமாக) அத ஒன்னும் நான் மறக்கல்ல கரீமா.

கரீமா: மறக்காமலிருந்தால் மாத்திரம் காணுமா... அதுக்கான ஏற்பாடுகளையும்...

மாஸ்டர்: செய்துகிட்டிருக்கன்... பென்ஷன் பைல் கிளியரானா ஒரு ஐம்பதுக்குக் கிட்டக் கிடைக்கும்.

கரீமா: (எரிச்சலோடு) திரும்ப திரும்ப இதத்தானே சொல்றீங்க... எல்லாம் கூட்டிக் கழிச்சுப் பாத்தா.. இன்னுமொரு இருபது

இருபத்தஞ்சு கிடச்சாத்தான் கல்யாணத்த ஒப்பேத்தலாம்... சொன்னது விளங்குதா....?

மாஸ்டர்: (சமாளித்து) அதுதானே...கரீமா...ம்.. ஏதாவதொரு வழி திறக்கத்தானே செய்யும்.

கரீமா: இப்படிச் சொல்லிக்கிட்டிருந்து சரிவருமா... நீங்க தானே அடிக்கடி சொல்வீங்க... உங்களிட்ட படிச்ச நெறையப்பேர் நல்ல வசதியோடு இருக்காங்களென்னு...

மாஸ்டர்: அதுக்காக அவங்களிட்டப் போய் கையேந்தவா சொல் நீங்க... (இழுத்து) விரும்பித் தந்தாங்களென்னா எடுக்கிறது பிரச்சனயில்ல.

கரீமா: நீங்க என்னதான் சொல்றீங்களோ தெரியல்ல. விரும்பித் தா்ரதுக்கும் அவங்களுக்கு விஷயம் தெரியணுமே... குறைஞ்சது வெளியில.... வந்து அக்கம் பக்க ஊர்களில இருக்கிறவங்களுக்கென்றாலும் போய்ச் சொல்லணுமே.

மாஸ்ட: இங்க பாருங்க கரீமா... எனக்குப் பெரிய சங்கடமா இருக்கே... யாரிட்டயும் போய்க் கையேந்திர பழக்கம் இன்னவரைக்கும்...

கரீமா: அதுக்காக வானத்தால வந்து கொட்டப் போறதுமில்ல... நான் சொல்றன் ஒரேயொரு இடம் முதல்ல அங்கபோய்ப் பாருங்க.

மாஸ்ட: ஆ... என்ன சொன்னீங்க?

கரீமா: (மென்மையாக) நஸிமா டீச்சர் இப்ப ரொம்ப வசதியோட இருக்கா..... அவ மாப்பிள்ள பெரிய மாணிக்கயாவாரி... ரொம்பப் பேருக்கு உதவி பண்ணியிருக்கா... உங்கள ஒரு நாளும் கைவிட மாட்டா...

மாஸ்ட: அப்படியா... அவ நன்றியுள்ள பிள்ளதான்

கரீமா: பிறகென்ன இரண்டு மணித்தியாலப்பயணம்...போய் வாரது தானே.... ம்(திரும்பி) உங்களோட கதைக்கு விழுந்ததில அடுப்பில வைத்த கறியயும் மறந்து போனன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ட: (பெருமூச்சு) முப்பது வருஷமா நம்ம பிள்ளைங்க... நம்ம சமுதாயமென்றெல்லாம் கஷ்டப்பட்டன்.... 'இப்ப மகள்ற கலியாணத்தக்கூட ஒப்பேற்ற முடியாமத் தவிக்க வேண்டியிருக்கு... ம்.... கரீமா சொன்னது போல நஸிமா டீச்சர்.... ஓ.. அவள் டீச்சரா வர்ரத்துக்கே நான்தானே காரணம். இப்பவும் எனக்கு நன்றாக ஞாபகமிருக்கு.

**முன் நினைவுக் காட்சி**

(கதவில் தட்டல்)

நஸிமா: (உள்ளேயிருந்து) யாரு...?

மாஸ்ட: ஆ... நான்தான் பெரியஸேர் வந்திருக்கன்.

நஸிமா: (கதவு திறத்தல்) ஆ... வாங்க ஸேர்..என்ன ஸேர் இந்த நேரத்தில....?

மாஸ்ட: முக்கியமான விஷயமாத்தான் வந்தன். எங்க வாப்பா இருக்காரா?

நஸிமா: இப்ப தான் வெளியே போனார்.... வந்திருவாங்க....

மாஸ்ட: பரவால்ல... நஸிமாதான் முக்கியம்.

நஸிமா: அப்பிடி என்ன ஸேர்...

மாஸ்ட: என்னென்று வெளங்கியிருக்கணுமே...

நஸிமா: (தயங்கி) ஸ்கூலுக்கு...

மாஸ்ட: ஆமா... இந்த ஒரு கிழமயா ஏன் ஸ்கூலுக்கு வரல்லேன்னு கேக்கத்தான்....

நஸிமா: வாப்பா தான் ஸேர் வேணான்னு...

மாஸ்ட: சொல்லியிருப்பார் விஷயம் வெளங்காத மனிசன்.

நஸிமா: அப்படியில்ல ஸேர்... அவர் சொல்றதிலயும் ஞாயமிருக்கு.. எனக்காக அவர் கஷ்டப்படுறத....

மாஸ்ட: விரும்பியிருக்க மாட்டீங்க...அதனால ஸ்கூலுக்கு முழுக்குப் போட்டிட்டீங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸிமா: (தடுமாற்றம்) ஆ... இல்ல...அப்பிடி..

மாஸ்ட: புத்தகம்... கொப்பி... உடுப்பு இப்படியெல்லாம் செலவளிக் கிறத விட வீட்டில் இருத்திக் கொள்றது நல்லது... இப்பிடி நினைக்கிற வாப்பாமார் நம்ம ஊரில நிறைய நிறைய இருக்காங்க... ஆனா உங்களப் போல பிள்ளைகளப் பொறுத்தமட்டில அது தவறு நஸிமா..உங்களுக்கெல்லாம் நிச்சயமா நல்ல எதிர்காலமிருக்கு.

நஸிமா: (தாழ்மையாக) எதுக்கும் ஸேர்...வாப்பாவிட்டயும் ஒருக்காக் கண்டு சொல்லிட்டீங்கென்னா.....

மாஸ்டர்: நிச்சயமா சொல்லத்தான் போறன்... அதோட பொதுநல சேவா இயக்கமும் வசதிகுறைந்த மாணவர்களுக்கு உதவ முன்வந்திருக்கு. அந்த உதவி உங்களுக்கும் கிடைக்க வழி செய்திருக்கன்.... இப்ப சரி தானே...

நஸிமா: அப்படியா ஸேர்(மகிழ்ச்சி) இன்னம் ஒரேயொரு வருஷந் தானே....ம்...எல்லாக் கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு...

மாஸ்ட: (உற்சாகமாக) அப்படிச் சொல்லுங்க..... நானும் மேலதிக வகுப்பெல்லாம் வைக்கஒழுங்கு செய்திருக்கன். எல்லாம் உங்க நன்மைக்காகத் தான்... ஸில்மியா வீட்டுக்கும் போயிட்டுத் தான் வந்தன்.... ம்.. இனி ரெஜினாவையும் கண்டு சொல்லிட்டாச் சரி... ம்.... என்ன சொல்றீங்க...?

நஸிமா: சரி ஸேர்... எங்களுக்காக நீங்க ரொம்பக் கஷ்டப்படுறீங்க ஸேர்....

மாஸ்ட: கஷ்டமில்ல நஸிமா... இது எங்களப் போன்றவங்கட சமுதாயக் கடம.... சரி நான் வாரன் பிள்ள...

**நினைவுக் காட்சி நிறைவு**

கரீமா: ம்... நான் சமையலெல்லாம் முடிச்சிட்டு வாரன். நீங்க என்னென்னா.... இன்னுமே குந்தியிருந்தபடி யோசிச்சுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே இருக்கீங்க (பெருமூச்சு) எப்பதான் உங்க யோசின முடியுமோ தெரியல்ல.

மாஸ்ட: நானொரு முடிவுக்கு வந்திட்டன் கரீமா.

கரீமா: (மகிழ்ந்து) ரொம்ப சந்தோஷம்... ம்... சொல்லுங்களேன்.

மாஸ்ட: நஸிமா டீச்சர் வீட்டுக்குப் போகப்போறன்.

கரீமா: அப்பிடிச் சொல்லுங்க...

**காட்சி 2**

**இடம்:**

மாஸ்டர் வீடு

**பாத்திரங்கள்:**

கரீமா, மாஸ்டர்

கரீமா: ம்.... இன்னக்கி வீட்டில இருக்க வேண்டிய நாளில இல்லயா புறப்பட்டிட்டீங்க.

மாஸ்ட: (யோசிச்சபடி) அப்பிடி என்ன விசேடமென்னு எனக்குப் படல்லியே...

கரீமா: பென்ஷன் சம்பள நாளில்லயா...? அப்புறம் வரவேண்டிய வங்கெல்லாம் வந்து வாசல்ல நிப்பாங்களே.

மாஸ்ட: இதத்தானா சொல்றீங்க...கந்தோருக்கு போயிட்டு..அப்படியே பஸ்ஸெடுக்கலான்னு யோசிக்கிறன்.

கரீமா: பரவால்ல... யாரிட்டயும் கொஞ்ச காசு அனுப்பிவிட்டுப் போனீங்கென்னா உதவியா இருக்கும்....ஏன்னா ஒரு நாள் கூட பொறுக்க முடியாதவங்களும் இருக்கத்தான் செய்றாங்க.

மாஸ்ட: சரி வசதிப்பட்டா யாரிட்டயும் அனுப்பப் பார்க்கிறன்..ம்.... இரவோடிரவா வந்துசேரத்தானே போறன்.

கரீமா: சரிசரி நல்ல காரியத்துக்குப் போற உங்கள தாமதப் படுத்திட்டன்.... ஆ... உங்க கண்ணாடிய எடுத்தீங்களா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ட: நல்ல நேரம் ஞாபகப்படுத்தினீங்க பாருங்க... வயது போகப் போக நெடுக மறதியாத்தானிருக்கு.

கரீமா: ஆ... இங்க...நஸிமா டீச்சர் நானும் ஞாபகமூட்டினதாகச் சொல்லுங்க....

மாஸ்ட: (திரும்பி) சொல்றன் சொல்றன்

**காட்சி 3**

**இடம்:**

நஸிமாவின் வீடு. பாடசாலை.

**பாத்திரங்கள்:**

நஸிமா. மாஸ்டர். ரியாஸ்

மாஸ்ட: (தனக்குள்) ரெண்டு மணித்தியாலப்பயணம். நல்ல காலம் ஸீட் கிடச்சிது.... ம்.... யாரிட்டயும் காசு கொடுக்கவும் முடியல்ல..... சேச்சே.... நாலாயிரம் ரூவா பென்ஷனில என்ன தான் செய்ய முடியும்!... இக்கட்டான கட்டத்தில தான் கல்யாணமும் வந்து சேர்ந்திருக்கு..... ஆ.... அதுதான் வீடு போலிருக்கே.... நஸிமா மன்ஸில்.... இனியென்ன சந்தேகம்.... வீடா இது மாளிகை இல்லயா (கதவு தட்டல்)

நஸிமா: யாரு... ஆ... வாங்க வாங்க....உங்களக் கண்டது ரொம்ப சந்தோஷமா இருக்கு ஸேர்.....

மாஸ்ட: ம்.... உங்கள சந்திக்கணுமென்னு தான் தேடிக்கிட்டு வந்தன்..... எங்க மிஸ்டர் ரியாஸ்?

நஸிமா: டவுனுக்குப் போனவர் இப்ப வந்திடுவார் சேர்... பிறகென்ன ஊர்ப்புதினங்கள்?

மாஸ்ட: குறிப்பிடக்கூடியதா ஒன்னுமில்ல...நானென்னா பென்ஷன் எடுத்திட்டன்.

நஸிமா: எக்ஸ்டென்ஷன் எடுத்திருக்கலாமே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்ட: எடுக்கலாம் தான்... ம்... குடும்ப விஷயங்களிருக்கு... அவற்றயும் பார்க்கத்தானே வேணும்.....

நஸிமா: ஆமா... மகளுக்கு கலயாணமென்னு கதச்சாங்களே..

மாஸ்ட: அப்ப கேள்விப்பட்டிருப்பீங்க.... (பெருமூச்சு) இந்தக் காலத்தில கல்யாணமொன்னு செய்றென்னா நினைச்சிப் பார்க்கவே முடியல்ல... (காரொன்று வந்து நிற்றல்)

நஸிமா: ஆ.. அங்க அவர் வந்திட்டார்.

மாஸ்ட: ஓ.. வாங்க மிஸ்டர் ரியாஸ்... உங்களக் காணக்கிடச்சதே பாக்கியந்தான்.

நஸிமா: அப்படியா... அடிக்கடி நஸிமா உங்கள ஞாபகமூட்டிக் கொண்டே இருப்பா... இன்னக்கித்தான் நேரில காண சந்தர்ப்பம் கிட்டியிருக்கு.

மாஸ்ட: நம்மிட்ட படிச்சபிள்ள....அதோட எனக்குக்கீழயே வேல செய்தவ... ஒருக்கா பார்த்திட்டுப் போகலான்னு வந்தன்.

ரியாஸ்: பாத்திட்டு மாத்திரம் போகாம... கண்டிப்பா பகலைக்கு சாப்பிட்டுட்டுப் போங்க.

நஸிமா: ஆமா ஸேர் நம்ம வீட்டுக்குப் முதல் முறையாக வந்திருக் கீங்க.

மாஸ்ட: ரொம்ப நன்றி..ஆனா நான் அவசரமா போகவேண்டியிருக்கே.

ரியாஸ்: நானுந்தான் பிஸ்னஸ் விஷயமா கொழும்பு செல்ல வேண்டியிருக்கு... என்ன மன்னிச்சிருங்க ஸேர்.

மாஸ்ட: அதெல்லாம் சரி தான்.... நீங்க உங்க பிஸ்னஸப் பாருங்க மிஸ்டர் ரியாஸ்.

ரியாஸ்: கொஞ்சம் இங்க வாரீங்களா நஸிமா.

நஸிமா: வந்திடுறன்.... கொஞ்சம் பொறுங்க ஸேர்.

மாஸ்ட: (தனக்குள்) நான் வாய்திறக்காமலேயே விஷயத்த விளங்கிட்டாங்க.... அது தானே ரெண்டுபேருமா கதைக்கி றாங்க.... ஒரு ஐயாயிரமாவது கிடைக்குமென்னா பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷ்யம்... படித்த பெண் என்றதால தானே ஒரு செப்புக் காசு கூட வழி பார்க்காம அவள கட்டிக்கிட்டார்... அந்தப் படிப்புக்கு வழிபண்ணியவன் நானில்லயா... பின்ன என்னக் கவனிக்காமலா விடப் போறார். (வியப்பாக) ஆ... ஆ... என்ன இது... உள்ள ஏதோ தாறு மாறாக் கதைக்கிறாப் போல இருக்கு.... ம்..... காதக் கொடுப்போமே...

ரியாஸ்:(உள்ளே) நேற்றுக் கூட ஒரு பொம்பிள வந்திருந்தா... ஏதோ கொமரு காரியம் சரீன்னு கொடுத்தன்... இன்னக்கி இப்படி ஒருத்தர் வந்து நின்னா... ம்... என்ன உங்க ஊர்க்காரரெல்லாம் பிச்சக்காரங்க போலிருக்கே.

நஸிமா:ஐயோ அப்பிடிச் சொல்லாதேங்க... அவர் யாரிட்டயும் வாய் திறக்கிற மனிசனில்ல... கொஞ்சம் மெல்லக் கதையுங்க.

ரியாஸ்:(மெதுவாக) கஷ்டப் படுறவங்களுக்கு உதவத்தான் வேணும்... அதுக்காக எல்லாருமே இப்பிடி வந்துநின்னா... நாம எங்க போறதென்னு கேக்கிறன்.

நஸிமா: (கெஞ்சி) இங்க நான் சொல்றத கேக்க மாட்டீங்களா? இவர வேறொரு நாளக்கி வரச் சொல்லுவோம். நமக்குப் புரிச்சதக் கொடுப்பம்.

ரியாஸ்:(கோபமாக) வாரத்துக்கும் ஒருநேரம் காலம் இருக்கென்னு இந்த மனிசருக்குத் தெரியல்ல.... இன்னக்கொரு முக்கிமான ஒக்ஷனிருக்கு.... அதுக்கிடையில தரித்திரம் மாதிரி வந்து வாசல்ல நின்னா....

நஸிமா:நமக்குக் கிடைக்கிறது எப்படியும் கிடைக்கும்.... சும்மா ஆத்திரப்பட்டு இப்படியெல்லாம் கதைக்கிறது நல்லா இருக்கா...

மாஸ்ட:(தனக்குள்) யாஅல்லாஹ்... என்ற அந்தஸ்துக்கு மேல மாப்பிள தேடினதும்... இன்னொருவரிட்ட கையேந்த வந்ததும் தவறு தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரியாஸ்:சரி இப்ப நீங்க என்னதான் சொல்றீங்க?

நஸிமா:(நிதானமாக) நீங்க எவ்வளவோ பேருக்கு உதவியிருக்கி றீங்க... உண்மதான்.... அவங்க எல்லாரையும் விட இவர் ரொம்ப வேண்டியவர்.

ரியாஸ்:ம்.... அப்பிடியா...

நஸிமா:ஆமா.... ஒரு வகையில நம்ம பெரிய ஸேர் இல்லேன்னா நான் உங்களுக்கு மனைவியா இருக்கவும் முடியாது பாருங்க...

ரியாஸ்:(வியந்து) ஏன் ஏன் அப்பிடிச் சொல்றீங்க?

நஸிமா:ஏன் அப்படிச் சொல்லக்கூடாதென்னு கேக்கிறன். நான்தான் ஒன்பதாம் வகுப்போட ஸ்கூலுக்கு முழுக்குப் போட்டிட்டு வீட்டோட இருந்திட்டவள்...

ரியாஸ்:அப்புறம்...

நஸிமா:பெரிய ஸேர் வீடுதேடி வந்து.... வாப்பாவயும் விருப்பப் படுத்தி ஸ்கூல்ல சேர்த்தார்.... அதுக்குப் பின்னால தான் சோதின பாஸ்பண்ணி உத்தியோகம் கிடைத்து....

ரியாஸ்:ம்... உத்தியோகமும் படிப்பும் இருந்ததால தான் உங்கள கட்டிக்கிட்டேன்னு சொல்லப்போறீங்க....

நஸிமா:நீங்க தானே அப்பிடி அடிக்கடி சொல்றீங்க....

ரியாஸ்:உண்மைதான்... அவரின்ற கடமைய அவர் செய்திருக் கிறார்.... அதுக்குப் பிராயச்சித்தமா இப்படி ஒவ்வொரு வரையும் தேடிப்போறதென்றா...

நஸிமா:இல்லயில்ல... அவர் அப்பிடிப் போகமாட்டார்..இங்க கூட எதுக்கு வந்தாரென்று எனக்குத் தெரியல்ல... நான்தான் இப்பிடி ஊகித்தன்....

ரியாஸ்:சரி என்னவும் செய்யுங்க.... இந்தாங்க இதில ஐநூறு இருக்கு... நான் வெளிக்கிடுறன்.

நஸிமா:இங்க... இங்க., போயிட்டாரே... (தனக்குள்) ஒரு ஐயாயிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவது கொடுக்கணும்.. இப்படி ஐநூறு எப்பிடி நீட்டிறது! ம்... என்னிடமும் ஒருசதக் காசில்ல... சே என்ன பண்றது...

(கார் புறப்படல்)

மாஸ்ட:(தனக்குள்) ம்.... இதென்ன முகத்தக் கூடப் பார்க்காம போயிட்டாரே.... மிஸ்டர் ரியாஸ் இப்படிப்பட்டவரென்னு தெரிந்திருந்தால்..... ம்... சின்னமனிசனாப் போயிட்டன்... சே.... நஸிமா டீச்சரின்ற நல்ல குணத்தில நம்பிக்க வெச்சுத்தான் வந்தன்.... பாவம் அவளென்ன செய்ய முடியும்.... ஓ.... வருஷங்களுக்கு முன்னால....

**முன் நினைவுக் காட்சி**

(பாடசாலை)

(சிறார்களின் கலகலப்பு)

மாஸ்ட:என்ன டீச்சர் டைம்டேபல் கிடச்சிதா...

நஸிமா:கிடச்சிது ஸோர்.

மாஸ்ட:ஏதும் பிரச்சினைகள்...

நஸிமா:அ... அப்பிடியொன்னுமில்ல... திருப்பதியா இருக்கு....

மாஸ்ட:பின்ன என்ன விஷயம்?

நஸிமா:(கவலையோடு) உங்க மகளுக்கு சுகமில்லயென்னு..

மாஸ்ட:ஆமா... கழுத்தில ஒரு சதவளர்ச்சி... அவசரமா ஒபரேஷன் செய்ய வேண்டியிருந்ததால... பிரைவெட்டாத் தான்...

நஸிமா:அப்படீன்னா

மாஸ்ட:ஒரு ஐயாயிரம் போயிட்டுது. என்ன செய்றது? வாழ்க்கையென்னா எல்லாப் பிரச்சனைக்கும் முகம் கொடுக்கத் தயாரா இருக்கணும்.

நஸிமா:(மெல்ல) ஸோர்... உங்களுக்கு நான் ரொம்பக் கடமப்பட்டிருக்கன் ஸோர்.

மாஸ்ட:(தடுமாறி) நஸிமா நீங்க என்ன சொல்றீங்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஸிமா: ஒரு சின்ன உதவி... தயவுசெய்து மறுக்காதீங்க... இந்தாங்க...

மாஸ்ட: (வியப்புடன்) இதென்ன நஸிமா...

நஸிமா: ஆக ஆயிரம் ரூபா காசுதானே...

மாஸ்ட: தேவப்பட்டா கேட்டிருப்பனே...

நஸிமா: நீங்களா ஸேர்... தேவப்பட்டாலும் வாய்திறக்க மாட்டீங்கென்னு எனக்குத் தெரியாதா...

மாஸ்ட: ம்... என்ன சங்கடத்துக்குள்ளாக்கிட்டீங்களே...

நஸிமா: என்ன ஸேர் என்ற உதவிய நீங்க விரும்பல்லயா ஸேர்...

மாஸ்ட: சரி ஒரு நிபந்தன...

நஸீமா: சொல்லுங்க...

மாஸ்ட: எனக்கு இப்போதைக்கு காசு தேவதான்.. அதனால இதக் கடனா எடுத்துக்கிறன்... வசதிப்படும் போது திருப்பித் தந்திடுறன்...

நஸிமா: நல்து ஸேர்... (தனக்குள்) இப்படிச் சொல்லாட்டா எடுத்துக்க மாட்டாரே...

**நினைவுக் காட்சி நிறைவு**

நஸிமா: என்ன ஸேர் யோசிக்கிறீங்க?

மாஸ்ட: ஒன்னுமில்ல நஸீமா... போகலான்னு பாக்கிறன்.

நஸிமா: (இரங்கி) இன்னக்கி அவர்ட மூடே சரியில்ல ஸேர்.

மாஸ்ட: அ... அதுக்கென்ன..

நஸிமா: எப்ப ஸேர் மகளின்ற கல்யாணம்...

மாஸ்ட: (விரக்தியோட) ஒரு பிச்சைக்காரனின்ற மகளின் கல்யாணம்... அது எப்படி நடந்தால் தான் என்ன?.. எப்பிடி நடந்தால் தான் என்ன?

நஸிமா: (தாழ்மையாக) ஸேர்... மன்னிச்சிருங்க ஸேர்.... ஏதும்....

மாஸ்ட: அப்பிடி ஒன்னுமில்ல நஸிமா... எனக்கு நேரமாகுது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ... வந்த விஷயத்த இதுவரையில சொல்லலியே நான்...

நஸிமா:(தனக்குள்) ம்...வேறேதோ விஷயமாகத்தான் வந்திருக்கார் போல.... கையில ஒருகடிதமும் கிடக்கு...அப்படீன்னா இந்த ஐநூறயும் கொடுக்க வேண்டியதில்ல.

மாஸ்ட: நஸிமா...

நஸிமா: சொல்லுங்க ஸேர்.

மாஸ்ட:(தனக்குள்) ம்.... நாலாயிரத்து எண்பது ரூபா ஒன்பது சதம்.... காலயில எடுத்த பென்ஷன் சம்பளம்....ம்... அதில.... (சத்தமாக) ஒரு முக்கியமான விஷயம் நஸிமா... இந்தக் கடிதத்த ஆறுதலா படிச்சுப்பாருங்க.... நல்லது நான் வர்ரன்....

நஸிமா:(தனக்குள்) மனிசன் போயிட்டார்... ம்... இதென்ன கடிதம்... பள்ளிவாசல், பாடசாலை கட்டிட நிதியுதவி ம்... அப்பிடி யிப்பிடி ஏதாவது இருக்கும்.... பென்ஷன் எடுத்தாலும் குடும்பப் பிரச்சின இருந்தாலும்..... பொது விஷயத்தில் தான் ஓடித்திரியிறார் போல... (கடிதத்தைப்பிரித்தல்) (அதிர்ந்து) ம்... இதென்ன.... ஆயிரம் ரூபா... ஆமா ஆயிரம் ரூபா....மூன்று வருடத்துக்கு முன்பு உங்களிடம் கடனாகப் பெற்ற ஆயிரம் ரூபா இத்துடன் உள்ளது....

நஸிமா:(அழுது) ஆ... என்ற நெஞ்சில ஓங்கிக் குத்திட்டுப் போயிட்டீங்களே ஸேர்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் பாடி

*சமூக நாடகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்:**

நிரோஷாவின் வீடு

**பாத்திரங்கள்:**

நிரோஷா. ஜெஸ்மினா. ஸெய்யத். ஜமால்

வானொலி செய்தி அறிக்கை:

(இறுதிப்பகுதி) இவ்வாண்டு சாகித்திய விழா கொண்டாடப்படவுள்ளது. பொது நிர்வாக சேவைக்கு இலிகிதர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.இத்துடன் செய்தி அறிக்கை முடிவடைந்தது. (வானொலியை நிறுத்தல்).

நிரோ: சே... குளிக்கப் போனதில செய்தியக் கூடஒழுங்கா கேக்க முடியாமப் போச்சு.... ம்.... ரிஸல்ட் வெளியாகிச்சாமே.... நிச்சயமா நான் செலக்டடா இருப்பன்...

ஜெஸ்: (உள்ளேயிருந்து) நிரோஷா... நிரோஷா...குளிச்சிட்டு வாரது கண்டு சுடச்சுட தேத்தண்ணி போட்டு வெச்சன். ஆறிப் போகமுந்தி வந்து குடியம்மா.

நிரோ: வாரேம்மா...

ஸெய்: ம்.... தேத்தண்ணி குடிக்க நேரமில்ல.... என்ன அவ்வளவு பெரிய வேல... இந்தக் குளிருச்சு குளிக்க வேணான்னு சொன்னா அதையும் கேக்கிதில்ல.... அப்புறம் சளிப்பிடிப்பு.. தலைவலின்னு தொணதொணப்பு... ம்... ஈரம் காயமுன்னால கூடா ஏதாவது குடிதாத்தானே உடலுக்கு தெம்பாக இருக்கும்.

நிரோ: சரிசரி வந்திட்டன்(கோப்பைச் சத்தம்)(தனக்குள்) இன்னக்கி நேரமே போறாப் போல இல்ல (கொட்டாவி).. ம்... ஒன்பது மணியாச்சு (சைக்கிள் மணி) போஸ்ட்மன் தான்... அடடா பொது நிர்வாக அமைச்சிலிருந்து தான் வந்திருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(குதூகலமாக) நான் பாஸ் பண்ணிட்டன் பாஸ் பண்ணிட்டன்... மாவட்ட நிலை ஒன்னு.... தேசிய நிலை ஆறு... இந்த மகிழ்ச்சிய யாரோட முதல்ல பகிர்ந்து கொள்றது... (நிதானமாக) ஆ...ஜமால் முகம்மது ஸேர் அடிக்கடி சொல்வாரே...

ஜமால்: (குரல் எதிரொலியாக) வானம்பாடி... அது எவ்வளவு தான் உயர உயரப் பறந்தாலும் மண்ணில் தான் தனது கூடுகளை அமைத்துக் கொள்ளும்...அதேபோல எங்களது அந்தஸ்து... தகுதி... தராதரம் எவ்வளவு தான் உயர்ந்தாலும் நாங்களும் எங்களது மண்ணையும் அந்த மண்ணின் சகோதர மக்களையும் மறந்துவிடக்கூடாது...

நிரோ: (தனக்குள்) மறக்கல்ல... மறக்கல்ல... உங்க வார்த்தைகள நான் என்னக்குமே மறக்க மாட்டன் ஸேர்...மறக்க மாட்டன்.

ஜெஸ்: (வந்தபடி) என்ன மகள் கடிதமும் கையுமாக ரூமுக்குள்ள போனது போனதுதான்.

நிரோ: (அன்புடன்) உங்களத்தாம்மா தேடிக்கிட்டிருந்தன்.

ஜெஸ்: (வியப்புடன்) அப்பிடி என்ன விஷயம்?

நிரோ: நான் நான் கிளறிகல் எக்ஸாம்ல பாஸ் பண்ணிடேம்மா.....

ஜெஸ்: ஆமா.... பதிமூனு வருஷம் படிச்சதுக்கு அல்லாஹ் வெற்றியத் தந்திட்டான் பாரு.

**காட்சி 2**

**இடம்:**

காரியாலயம்

**பாத்திரங்கள்:**

நிரோஷா, தாரிக், ஜமால்

(டைப்பிங் சத்தம்)

தாரிக்: (தனக்குள்) சே... வீட்டுக்குப் போய் சந்தித்திருக்கலாம்... அதவிட ஒஃபீஸுக்கு வந்து வாழ்த்திறது தான் நல்லது போலப் பட்டுது. ம்.... இங்கவந்தா நிரோஷாவ சுற்றி....

நிரோ: (தனக்குள்) ம்...டீ குடிக்கிற நேரம்....போகக்கூட முடியல்ல. என்ன செய்றது... நம்ம டீயவிட இவங்க வேலைகள் முக்கியம் தானே!

தாரிக்: (தனக்குள்) ம்....இன்னும் ரெண்டே ரெண்டுபேர்... வாழ்த்துச் சொல்லத் தானே வந்திருக்கன்... முண்டியடித்துக் கொண்டு போகவேண்டியதில்லயே.

நிரோ: (தனக்குள்)அப்பாடா பதினொருமணி இப்பதான் கொஞ்சம் கழுத்த உயர்த்த முடிந்தது.

தாரிக்: (வந்தபடி) குட் மோனிங் மிஸ்

நிரோ: (சிரிப்பு) வாங்க வாங்க... என்ன இந்தப் பக்கம்.

தாரிக: எல்லாம் உங்கள நேரிலயே வாழ்த்திறதுக்காகத்தான்.

நிரோ: அப்படியா ரொம்ப நன்றி... எபொய்மெண்ட் கிடச்சு ஒரு கிழமதான் தாரிக்.

தாரிக: கேள்விப்பட்டன்..... நிறையப்பேர் வந்திருப்பாங்க..... வாழ்த்தியிருப்பாங்க..... ஒரே பிஸியாக இருந்திருக்குமே.

நிரோ: (சிரித்து) பகிடி விடுறீங்களாக்கும்

தாரிக்: எப்பிடி வேல சந்தோஷமா இருக்கா?

நிரோ: ஒவ்வொரு நாளும் சந்தோஷமாத்தான் வீட்டுக்கப் போறன்.

தாரிக: தொழில் கிடச்சிட்டுதே என்று திருப்திப் படாம இன்னுமின்னும் முன்னேற முயற்சிக்கணும்.

நிரோ: நிச்சயமாக...

தாரிக்: ரொம்ப நல்லது.... நாம தான் இப்படியே இருந்தாலும் எங்களோட படித்தவங்க நல்ல அந்தஸ்தில இருந்தாங் கன்னா அதுகூட எங்களுக்கு பெருமதானே.

நிரோ: நீங்க தான் படிப்ப இடையில விட்டிட்டீங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாரிக்: சரி எங்களப் போல சின்னச்சின்ன யாவாரிகளும் நாட்டில இருக்கத்தானே வேணும்.

நிரோ: கேட்கவே மறந்திட்டன். உங்க ஸ்மோல் இண்டஸ்ட்ரி எல்லாம் எப்படி?

தாரிக்: பரவாயில்ல... ரெஜிஸ்டர் பண்ணியிருக்கன். கடன் வசதி களும் செய்து கொள்ளலாம்போலிருக்கு. அந்தத் துறையில முன்னேறலாமென்னு நினைக்கிறன். சரி.. உங்க டியூடி நேரத்த நான் குழப்பக் கூடாதில்ல... வந்து...ம்...

நிரோ: என்ன ஏதோ சொல்ல வெளிக்கிட்டீங்க போல...

தாரிக்: (சிரிப்பு) ஒன்னுமில்ல... நம்மஜமால் முகம்மது ஷேர் அடிக்கடி சொல்வாரே..

நிரோ: ஆமா... நான் கூட அடிக்கடி அதநினைத்துக் கொள்றன்.

ஜமால்: (குரல்எதிரொலியாக)வானம் பாடி எவ்வளவு தான் உயர உயரப் பறந்தாலும் அதுதன் கூட்டை மண்ணிலேயே தான் அமைத்துக் கொள்ளும்.

## காட்சி 3

**இடம்:**

நிரோஷாவின் வீடு

**பாத்திரங்கள்:**

ஜெஸ்மினா, ஸெய்யத்

ஜெஸ்: ம்... படிப்பு படிப்பென்னு படித்து பாஸ் பண்ணிட்டா...

ஸெய்: தொழில் தொழிலென்னு அதுவும் கிடச்சிட்டுது

ஜெஸ்: இனி நாம செய்ய வேண்டிய ஒரு வேல இருக்கே

ஸெய்: ம்... அதென்ன?

ஜெஸ்: (கோபத்தோடு) என்ன இது... குமருப பிள்ளயொன்ன வெச்சிருக்கிற வாப்பா கேக்கிற கேள்வியா இது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்: (அலட்சியமாக) அவளுக்கென்ன... வயதா ஆகிப் போச்சு... இப்பதானே இருபது நெருங்கிது.

ஜெஸ்: இங்க பாருங்க.. இதெல்லாம் இழுத்தடிக்கிற விஷயமில்ல...

செய்: நீங்க இப்படிச் சொல்றீங்க.... நிரோஷாவக் கேட்டா...

ஜெஸ்: எனக்கு மாப்பிள வேணும் அப்படீன்னு நிச்சயமா சொல்ல மாட்டாள்.

செய்: (சிரிப்பு) இன்னும் படிக்கணுமென்டில்லயா செர்றா.

ஜெஸ்: என்னவும் படிக்கட்டும்..அதுக்கெல்லாம் நாம தடையில்ல.

செய்: நீண்ட லட்சியத்தோட அவளிருக்கிறப்போ.... இடையில குடும்பக் காரியாக்கி விட்டா... அதவிட பெரிய தடை வேறென்ன இருக்கு.

ஜெஸ்: (கோபத்தோடு) நீங்க இதையும் சொல்லுவீங்க இன்னமும் சொல்வீங்க.... எனக்கென்னா ஒவ்வொரு நிமிஷமும் இந்த யோசின தான்.

செய்: உண்ம தான் பெற்றதாய்க்கு அந்த யோசின இருக்கத் தான் செய்யும்... நான் சொல்றது என்னென்டா.... அவள் வந்த பாதையில பாதித்தூரத்தையாவது கடக்கட்டுமே...

ஜெஸ்: (நிதானமாக) இதில இன்னொரு விஷயமிருக்கு பாருங்க.

செய்: ம் அதென்ன?

ஜெஸ்: வீட்டுக்குள் இருக்கிற ஒரு பெண்ண கட்டிக் கொடுக்கிறதுக்கும்.... தொழில் பார்க்கிற பெண்ணக்கட்டிக் கொடுக்கிறதுக்கும்.... நெறைய வித்தியாசமிருக்கு...

செய்: ஆமா கல்யாணமென்னு வர்ரப்போ... தொழில் அந்தஸ்து இதெல்லாம் பாக்கிறது சகஜம் தானே...

ஜெஸ்: ம்... நமக்கிட்ட என்ன இருக்கு...? இப்போதே வானத்தப் பார்த்துக்கிட்டிருக்கோம்.

செய்: அவள் இன்னுமின்னும் உயரப்போனா கஷ்டம் நமக்குத் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 4**

**இடம்:**

நிரோஷாவின் வீடு

**பாத்திரங்கள்:**

நிரோஷா, ஜலீல், ஜமால்

நிரோ: (உணர்ச்சிவசமாக) ரிஸால்ட்... ம்.... யூனிவசிடி போகாம டிகிரி பாஸ் பண்ணிட்டன். இனி எனக்கு நிச்சயமா புரொமோசன் கிடைக்கும்.... ஆமா நானிப்ப நிரோஷா பீஏ (நிதானமாக) ஆ... அதென்ன இது... என்ன அறியாமலேயே கத்திவிட்டன். இந்த ஆரவாரமும் பெருமயும்.. கூடவே கூடாது. (தாழ்ந்த குரலில்) ஸேர் உங்க வார்த்தைகள நான் இன்னக்கும் மறக்கல்ல ஸேர்....

ஜமால்: (குரல் எதிரொலியாக) வானம்பாடி எவ்வளவு தான் உயர உயரப் பறந்தாலும், அது தன் கூட்டை இந்த மண்ணிலேயே அமைத்துக் கொள்ளும். அதே போல இந்த மண்ணையும் மண்ணின் சகோதர மக்களையும் மறக்கவே கூடாது.

ஜலீல்: (வந்தபடி) நிரோஷா... இன்னக்கி ஒ.:.பீஸ் போகல்ல...

நிரோ: இன்னக்கி ஒரு அரைநாள் லீவு நானா.

ஜலீல்: ம்.... சும்மா லீவு போடுற வழக்கமில்லயே.

நிரோ: ரொம்ப சந்தோஷமா இருக்கன்... இந்த நிலையில வேலைக்குப் போனா... தப்புத் தவறு நடந்திருமில்ல.

ஜலீல்: அந்த சந்தோஷத்த நமக்கும் சொல்லக்கூடாதா?

நிரோ: ஒண்ணுமில்ல நான் பீஏ பாஸ்பண்ணிட்டன்(சிரிப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜலீல்: (ஆரவாரமாக) உம்மா ஓடிவாங்க.... தங்கச்சி பீஏ பாஸ்பண்ணிட்டா...

நிரோ: என்ன இது சின்னப்பிள்ள மாதிரி துள்ளிக் குதிக்கிறீங்க... ம்.... உம்மாதான் வீட்டில இல்லயே!

ஜலீல்: டொக்டர் வீட்டுக்குப் போனத மறந்தே போயிட்டன்.

நிரோ: (சிரிப்பு)

ஜலீல்: தெரியாமத்தான கேக்கிறன்... இந்த எக்ஸாம் பாஸ் பண்ணினதால...

நிரோ: புரமோஷனுக்கு உதவியா இருக்கும்.

ஜலீல்: (மகிழ்ந்து) குட்.... இன்னக்கி உலகத்தில பணமுள்ளவனா இருக்கணும்... இல்ல பெரிய பதவியுள்ளவனா இருக்க ணும்... நாமதான் பணத்த சம்பாதிக்கல்ல... ம்... உன்ற பதவியால நம்ம குடும்பத்துக்கே கௌரவம் தான்.

நிரோ: இதோட விடுறதில்ல நானா. இன்னிலிருந்தே எஸ்.எல்.ஏ.எஸ் பரீட்சைக்கு தயாராகப் போறன்.

ஜலீல்: அப்படீன்னா... (வியப்புடன்)

நிரோ: நிர்வாக சேவை.... அதுதான் என்ற அடுத்த இலக்கு.

ஜலீல்: நிச்சயமா உனக்கு வெற்றிகிட்டும் நிரோஷா.

நிரோ: சரி நேரமாச்சில்ல.

ஜலீல்: (தனக்குள்) சந்தோஷமாகத் தானிருக்கு.... ம்... இன்னொரு வகையில கவலப்படவும் வேண்டியிருக்கு... ஏன்னா படிப்பும் பதவியும் உயரஉயர... நம்ம தலையில இருக்கிற பிரச்சினையும் பூதாகாரமாகிக் கொண்டில்லயா போகுது.

**காட்சி 5**

**இடம்:**

நிரோஷாவின் வீடு

**பாத்திரங்கள்:**

ஸெய்யத். ஜெஸ்மினா.ஜலீல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்: அந்தா ஜலீல் வந்துகிட்டிருக்கான்.

ஜெஸ்: வர்ர வருத்தப் பார்த்தா நல்ல முடிவுபோல இருக்கு.

ஜலீல்: (வந்தபடி) வாப்பா

ஜெஸ்: வா மகன்

செய்: எப்பிடி போன விஷயமெல்லாம்....?

ஜலீல்: நல்ல பையன்

ஜெஸ்: வீடு வாசலெல்லாம்....

ஜலீல்: சாதாரணமா இருக்கு.

செய்: தொழிலெல்லாம்...

ஜலீல்: அவங்க சொன்னபடி மாஸ்டர் தான்

ஜெஸ்: கொடுக்கல் வாங்கலெல்லாம்...

ஜலீல்: நியாயமா கதச்சி முடிவு பண்ணலாம்.

ஜெஸ்: அப்பிடீன்னா.... அவசரமா விஷயத்த முடிக்கிறது தானே.

ஜலீல்: ஆனா ஒன்னு!

இருவ: (ஆவலோடு) அதென்ன?

ஜலீல்: ஒரு டிரெயினிங் மாஸ்டர் பாருங்க.

செய்: இதிலென்ன பிரச்சின?

ஜலீல்: இது தான் பிரச்சின வாப்பா. நிரோஷா வந்து ஒரு பீ.ஏ க்காரி... அதோட புரமோஷன்கூட கிடைக்க இருக்கு.

ஜெஸ்: இதெல்லாம் பார்த்துக்கிட்டிருக்கேலாது மகன்... கைக்குள்ள வந்த விஷயத்த கைநழுவ விடுகிறது...

ஜலீல்: அதே நேரத்தில ஏதோ கடமைக்காக செய்திட்டோமென்னு நிரோஷா குறை சொல்லாமலும் பார்த்துக்கணும்.

செய்: அதென்னா உண்மதான்.

ஜெஸ்: (கோபமாக) இந்த வாப்பாவுக்கும் மகனுக்கும் ஊருலகம் வெளங்காது... இதுக்கு மேலயும் சுணங்கிக் கொண்டிருக் காதையுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜலீல்: உம்மா... ஆத்திரப்படவேணாம்... அவளுக்கொரு அந்தஸ்திருக்கு...அதுக்குத் தக்கதாகத்தான் நாங்களும் பார்க்கணும்.

ஸெய்: ஜலீல் சொல்றது சரிதான்.

ஜெஸ்: சரிசரி எல்லாம் சரி. வயஸும் கண்ணுக்குத் தெரியாம இருவத்தஞ்சாகிரிச்சி.

ஜலீல்: சரிம்மா... இந்த விஷயம் ஆறேழு மாதமா அடிபடடுக்கிருந்திச்சி... சரிவார நேரமாப் பார்த்து அவள் பீஏ பாஸ் பண்ணிட்டாளே...

ஸெய்: அதுதான் இங்க வந்த சிக்கல். சரி வேறொரு விஷயத்தப் பாக்கிறதுதானே.

ஜெஸ்: (பெருமூச்சு) அல்லாஹ் தான் பார்த்து லேசாக்கணும்.

**காட்சி 6**

**இடம்:**

**நிரோஷாவின் வீடு**

**பாத்திரங்கள்:**

**ஸெய்யத். ஜலீல். நிரோஷா. ஜெஸ்மினா.**

நிரோ: (ஓடிவந்து) உம்மா...

ஜெஸ்: (திடுக்கிட்டு) நிரோஷா.. என்ன இது வந்ததும் வராததுமா... கட்டிப்பிடிச்சுக் கொண்டு...

நிரோ: (தடுமாற்றம்) உ...ம்மா... நான்... நா..ன்

ஸெய்: (வியந்து) நிரோஷா... என்னம்மா நடந்திச்சு?

நிரோ: வா..ப்பா

ஜெஸ்: (பயந்து) எனக்கென்னவோ பயமாஇருக்கு.

ஜலீல்: (வந்தபடி) பயப்படுதுக்கு ஒன்னுமில்ல..நிரோஷா ஆனந்தக் கண்ணீர் விடுறா...

ஸெய்: புதிர் போடாம சொல்லப்பா

ஜலீல்: (சிரிப்பு) சொல்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெஸ்மி: எல்லாம் ஒரே குழப்பமா இருக்கே.

ஜலீல்: குழம்பினதுக்கப்புறம் தானே தெளிவு வரும்.

ஸெய்: நீயாவது சொல்லம்மா

நிரோ: நானா நீங்களே சொல்லுங்க.

ஜலீல்: தங்கச்சி எஸ்எல்ஏஎஸ் பரீட்சையில் பாஸ் பண்ணிட்டா... இன்னக்கித்தான் முடிவு வந்திருக்கு.

இருவ்: (மகிழ்ந்து) அடடா... அப்புறம்

ஜலீல்: இதுக்குமேல பாஸ்பண்ணுறதுக்கு ஒன்னுமில்ல.. ஆமா.

ஜெஸ்: இனிமேல உதவி அரசாங்க அதிபர் வேல கூடக் கிடைக்கலாம்.

ஸெய்: இதெல்லாம் உண்மயா நிரோஷா.

நிரோ: (மெல்லிய குரலில்) உண்மதான் வாப்பா.

ஜலீல்: இந்தமுற பாஸ்பண்ணியிருக்கிற ஒரேயொரு முஸ்லிம் பெண் நிரோஷா தானாம்.

ஜெஸ்: எதுக்கும் கண்ணூறு கழிய ஏழு தேசிக்கா வெட்டிப் போடணும்.

ஜலீல்: (கோபமாக) சும்மா இருங்கம்மா.

நிரோ: உம்மா அப்பிடித் தான் பேசுவாங்க நானா.

ஜலீல்: அப்பிடியா... இனிமேல நாங்க யாரும் பஸ்ஸிலயும் வேனிலயும் தொங்கிகிட்டுப் போக வேண்டியதில்ல... ம்..... நிரோஷாட பஜரோவில பயணம் செய்யலாம்.

நிரோ: (சிரிப்பு) அது அரசாங்க வேலைக்கும் அரசாங்க அதிகாரிக்கும் மட்டுந்தான்.

**காட்சி 7**

**இடம்:**

**அலுவலகம்**

**பாத்திரங்கள்:**

**நிரோஷா. தாரிக். ஜமால்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரோ: ஆ.. வாங்க வாங்க மிஸ்டர் தாரிக

தாரிக்: எப்பிடி சுகமா இருக்கிறீங்களா?

நிரோ: ஒன்னும் குறைச்சலில்ல

தாரிக்: அப்பிடினா எல்லாம்கூடிக்கிட்டு போகுதென்னு சொல்றீங்க.

நிரோ: (சிரிப்பு) வரவேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்திட்டன்

தாரிக்: நமக்கெல்லாம் பெருமதானே.

நிரோ: அநேகமா பிரதேச செயலகமொன்னுக்கு செயலாளராப் போடுவாங்க போலிருக்கு. தாரிக் இனியென்ன எல்லா வசதிகளும் தருவாங்களே.

நிரோ: ஆமா...(டெலி∴போன் ஒலி) ஹலோ...ஆ..மிஸடர் காதரா... நிரோஷா தான் பேசுறன்.. அப்பிடியா.. தேங்ஸ் (சிரிப்பு) வசதிப்படுறப்போ வாங்க (வைத்தல்).

தாரிக்: எல்லோரும் ∴போனிலயே வாழ்த்துச் சொல்றாங்க... ம்... நமக்கு அந்த வசதி இல்லாததால நேரில வரவேண்டியிருக்கு.

நிரோ: நீங்க ஏன் அப்பிடிச் சொல்றீங்க... ம்... வசதிகள் அமைறதால மாத்திரம் யாரும் பெரியாக்கலாப் போறதில்லயே (மேசைமணி) இந்த ∴பைல ஜீஏட்டேல்ல வைங்க.

தாரிக்: நம்ம ஸ்கூல்மெட்ஸ்ஸெல்லாம் சேர்ந்து உங்களுக்கொரு பாராட்டு விழா எடுக்க யோசிக்கிறாங்க.

நிரோ: அதெல்லாம் என்னத்துக்கு?

தாரிக்: நமக்கும் நம்ம ஊருக்கும் நீங்க பெரும தேடித் தந்திருக்கிறீங்க.

நிரோ: (சிரிப்பு) இன்று வரைக்கும் என்கால்கள் இந்த மண்ணில தான் பதிந்திருக்கு.... இப்படியான வேலைகளால...

தாரிக்: ம்..... ஜமால் முகம்மது ஸேர ஞாபகமூட்டுறீங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமால் :(குரல் எதிரொலியாக) வானம்பாடி எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும்..அதுதன் கூடுகள இந்தமண்ணிலேயே அமைத்துக்கொள்ளும்...அதேபோல எங்களது அந்தஸ்து.... தகுதி..... தராதரம் எவ்வளவு தான் உயர்ந்தாலும் இந்த மண்ணையும் மண்ணின் சகோதர மக்களையும் மறந்து விடக்கூடாது.

**காட்சி8**

**இடம்:**
**நிரோஷாவின் வீடு**

**பாத்திரங்கள்:**
**ஜலீல். ஜெஸ்மினா. ஸெய்யத்**

ஜலீல்: (கோபத்தோடு) நிரோஷா எங்க?

ஜெஸ்: என்ன என்ன?

ஜலீல்: (கோபத்தோடு) நிரோஷா எங்கென்னு கேக்கிறன்.

ஜெஸ்: என்ன இப்பிடிச் சத்தம் போடுற? அவள் ஒ.்.பிஸுக்கு போயிருக்காள்.

ஜலீல்: ஓ.்.பிஸ் போறாவாம் ஓ.்.பிஸ்

ஜெஸ்: (தனக்குள்) என்ன ஜலீல் இப்பிடிக் கத்திறான்..... இங்க என்ன நடந்திட்டுது?

ஜலீல்: நேற்று ஒ.்.பிஸ் விட்டுவந்து எங்கே போனாவாம்?

ஜெஸ்: ஏதோ பாட்டியாமென்னு சொன்னாள்.

ஜலீல்: பாட்டியும் மண்ணாங்கட்டியும் தலைக்கு மேல வெள்ளம் போய்க்கிட்டிருக்கு.

ஸெய்: (வந்தபடி) என்ன என்ன விஷயம்? ஒரே கூச்சலாயிருக்கு.

ஜலீல்: இதெல்லாம் உங்களுக்கு நல்லா இருக்கா. பதவி பட்ட மென்னு வந்திட்டா உம்மா. வாப்பாக்கு கட்டுப்படாம நடக்கத்தான் வேணுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்: (தடுமாறி) அப்பிடி... அப்பிடியொன்னும் நடக்கல்லியே... ஏதோ தெரிந்தவங்க... நண்பர்கள் சேர்ந்து சந்தோஷமாக செய்திருக்காங்க.

ஜெஸ்: வாப்பாவயும் கூட்டிட்டுப் போகத்தான் பாத்திருந்தவள்... அவர் வரச் சுணங்கிட்டுது.

செய்: ஒ.'.பிஸிலிருந்து பெரியபெரியவங்கெல்லாம் வந்திருந்தாங்களாம்.

ஜலீல்: வருவாங்க.. வருவாங்க... அடுத்தவங்களும் கண் வச்சிட்டாங்க அத மறந்திறக்கூடாது.

ஜெஸ்: நீ சொல்றதிலயும் உண்ம இருக்கத்தான் செய்யிது.அவள் சின்னப்பிள்ளையில்ல... நாங்க கட்டுப்பாடு போடவும் முடியாது. ம்... ஒரேயொரு மருந்துதானிருக்கு.

ஜலீல்: வாங்க வழிக்கு.

ஜெஸ்: உடனடியா கல்யாணத்துக்கு வழியப் பார்ப்பம்.... அதுக்கப்புறம் கணவன் விருப்பம் போல நடந்துக்கட்டும்.

செய்: ஆமா ஜலீல்...இனி ஒரேமூச்சா அந்த விஷயத்தப் பார்ப்பம்.

ஜெஸ்: அன்னேலிருந்து நானும் சொல்லிக்கிட்டேஇருக்கன்... இப்பதான் உங்க கண் திறந்திருக்கு.

**காட்சி 9**

**இடம்:**

**நிரோஷாவின் வீடு**

**பாத்திரங்கள்:**

**ஜலீல். செய்யத். ஜெஸ்மினா**

ஜலீல்: உம்மா அப்பிடி இருங்க.... தீர்க்கமான ஒரு முடிவுக்கு இன்னக்கி வந்தேயாகணும்.

செய்: நிச்சயமா... இதுக்கு மேல தாமதிக்கக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெஸ்: சரி செல்லப்பா விஷயத்த

ஜலீல்: புரோக்கர் இன்னக்கும் வந்திட்டுப் போறார்.

ஜெஸ்: அந்தக் கண்டி விஷயந்தானே?

ஜலீல்: ஒரு எஸ்டேட் சுப்ரின்டன்.... பங்களா... டவுன்ல தனியான வீடு... கார்....இப்பிடி சொல்லிக்கிட்டே போகலாம்.

ஜெஸ்: நல்லது சீக்கிரமா ஒரு முடிவுக்கு வருவோம்.

ஸெய்: இன்னொரு விஷயம் வந்திருக்கு.

ஜலீல்: (வியப்போடு) சொல்லுங்க வாப்பா.

ஸெய்: இவர் கல்வித்திணைக்களத்தில ஒருடிரக்டராம்... படிப்புக்கு படிப்பு... பதவிக்கு பதவி.

ஜலீல்: கொடுக்கல் வாங்கலெல்லாம்

ஸெய்: தராதரத்துக்கேற்ப கொடுக்கத் தானே வேணும்.

ஜெஸ்: அப்பிடீன்னா...

ஸெய்: ஒரு வீடும் வாகனமும் எதிர்பார்க்கிறாராம்.

ஜெஸ்: (வியந்து) அப்பிடியெல்லாம் கொடுக்க நமக்கிட்ட என்ன இருக்கென்னு கேக்கிறன்.

ஸெய்: இருந்தாலும் இல்லாட்டியும் செய்யத் தானே வேணும். தராதரத்துக்கேற்ற மாதிரி தேடினால்தான் அவளும் சந்தோஷப்படுவாள்.

ஜலீல்: நம்ம வசதி அதவிட முக்கியம் பாருங்க.

ஜெஸ்: சரி... முடிவெடுக்கிறத அவளோட விட்டுவிடுவம்.

ஜலீல்: (கோபமாக) இதுக்காக நான் எவ்வளவோ செலவு செய்திட்டன். ஏதொ ஒரு முடிவு அவசரமாச் சொல்லுங்க.

ஸெய்: (இரக்கமாக) இப்பிடிச் கோபப்படாதேப்பா... எல்லார்டயும் நோக்கம் நல்ல காரியம் நடக்கணுமெங்கிறது தான்.

ஜலீல்: (நிதானமாக) சரிசரி நானொன்னும் கோபப்படல்ல... இன்னக்கே கேட்டுச் சொல்லுங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி 10

**இடம்:**

**அலுவலகம். நிரோஷாவின் வீடு**

**பாத்திரங்கள்:**

**ஜலீல். ஜெஸ்மினா. ஸெய்யத். நிரோஷா**

(டெலி·்.போன் ஒலி)

நிரோ: ஹலோ... ஆ... மன்னிக்கணும்.... இன்னக்கி முக்கியமான வேல பாருங்க... வேறொரு சந்தர்ப்பத்தில கட்டாயம் கலந்து கொள்றன். (வைத்தல்) (தனக்குள்) இன்னக்கி என்னால ஒன்னுமே செய்ய முடியல்ல...ஏதோ ஒரு முடிவு காணவேணும்... ம்.... எனக்கும் இருபத்தாறு வயசாச்சி... உம்மா வாப்பாவுக்கும் ஒரு பொறுப்புத்தானே... நேற்று உம்மா சொன்னா....

ஜெஸ்: (இதமாக) உங்க சந்தோஷத்த நாங்க பார்க்கணும்... நானா கண்டியில ஒரு விஷயம் கொண்டு வந்திருக்கிறார்.... எஸ்டேட் சுப்ரின்டனாம்....

நிரோ: (தனக்குள்) உம்மாவின்ற ஆசையில அர்த்தமிருக்கு. அதுக்கிடையில வாப்பா...

ஸெய்: அவர் ஒரு டிரக்டர் மகள்... படிப்புக்கு படிப்பு பொருந்தும்... கடன் பட்டாவது செய்ய யோசிக்கிறன்.

நிரோ: (தனக்குள்) இவங்க மட்டுமில்ல... இன்னும் எத்தனையோ பேர் எத்தனையோ விஷயங்களைக் கொண்டு வாறாங்க.... ம்.... எல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தா... வானலோத்தில சஞ்சரித்து விடலாம் போலிருக்கு... ம்..... அதோ ஜமால் முகம்மது ஸேரின்ற முகம்தான.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமால்: (குரல் எதிரொலியாக) எவ்வளவுதான் உயரஉயரப் பறந்தாலும் வானம்பாடி அதன் கூடுகளை மண்ணிலேயே அமைத்துக் கொள்ளும்.

நிரோ: இதுக்கு மேலும் தாமதிக்கக்கூடாது. இன்னக்கி ஒரு முடிவுக்கு வரணும்... டொக்... டொக் (செருப்பொலி) (வாகனம் சென்று நிற்றல்.... செருப்பொலி)

ஜெஸ்: நிரோஷாதான் வாரா.

ஸெய்: இதென்ன இந்த நேரத்தில?

ஜலீல்: ஏதும் சுகவீனமா?

நிரோ: ரொம்ப நல்ல நேரம்... மூணு பேருமே இருக்கிறீங்க.

ஸெய்: இப்பவும் உங்க விஷயமாத் தான் கதச்சுக்கிட்டிருந்தோம்.

நிரோ: கல்யாண விஷயமா நானொரு முடிவுக்கு வந்திட்டன்.

மூவரு: (மகிழ்ந்து) சொல்லுங்க சொல்லுங்க

நிரோ: சந்தோஷமா செய்து வைக்கிறது உங்க பொறுப்பு.

ஜெஸ்: மகள் என்ன சொல்றீங்க?

நிரோ: (நிதானமாக) உங்களுக்கு தாரிக்க தெரியுந்தானே?

மூவரு: ஆமா தாரிக் (எதிரொலியாக) தாரிக்...தாரிக்... தாரிக்...

நிரோ: அவர திருமணம் செய்து கொள்ள நான் முடிவு பண்ணிட்டன். (அதிர்ச்சி இசை)

ஜலீல்: (ஆவேசமாக) தாரிக்... படிப்பில்ல... பதவியுமில்ல... கௌரவமான தொழில்கூட இல்ல.

நிரோ: நிதானத்தோடு) நல்ல மனிதப் பண்புகள் இருக்கு. அது எனக்குப் போதும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியம்

*சமூக நாடகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்:**

தெளஃபீக்கின் வீடு

**பாத்திரங்கள்:**

தெளஃபீக், ஹம்ஸியா

தெளஃ: (வந்தபடி) ஹம்ஸியா... ஹம்ஸியா...

ஹம்: ஆ.. வாங்க வாங்க... என்ன இன்னக்கி ஆறுமணியாக முன்னால வந்திட்டீங்க?

தெளஃ: ம்... உங்கட ஞாபகம் வந்திட்டென்னா அதுக்கு மேல இருக்க முடியுமா? வந்திட்டன்.

ஹம்: அப்ப என்மேல அவ்வளவு அன்பெண்று சொல்லுங்க. (பெருமூச்சு) நான் நெனச்சன் நோயாளியான பின்னால வரவர அன்பு குறையுதென்றல்ல...

தெளஃ: (சிரிப்பு) உங்க மேல வெச்சிருக்கிற அன்பிருக்கே.. அது என்னக்குமே குறையாது ஹம்ஸி.

ஹம்: இந்த வார்த்தைகளே எனக்குப் போதும்.. உங்களிட்டிருந்து அந்த அன்பு ஒன்னத்தவிர நான் வேற எதையுமே எதிர் பார்க்கிறது கிடையாது.

தெளஃ: (அன்போடு) அதுசரி இன்னக்கி ஒழுங்கா மருந்து சாப்பிட்டீங்களா?

ஹம்: (தயங்கி) காலயில சாப்பிட்டன்...அப்புறம் ஆமா பகல் கூட சாப்பிட்டன்... ம்...

தெளஃ: அப்ப மாலையில...

ஹம்: இன்னும்நேரமிருக்கல்ல...

தெளஃ: ஆமா..ஆமா நேரம் எப்பவும் இருக்குத்தான்... ஆறுமணியாச் சென்னா இரவில்லயா.. அ... இங்க தண்ணியும் இருக்கு இந்தாங்க

ஹம்: (சிணுக்கம்) ம்......முதல்ல நீங்க போய் முகத்தக் கழுவிட்டு வாங்களன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தௌ.:.... இந்தாங்க இந்த டெப்லட்ஸ விழுங்குங்க..

ஹம்: ஐயோ விடமாட்டீங்க போலிருக்கே... இதெல்லாம் விழுங்கி விழுங்கி..

தௌ.: என்ன ஹம்ஸி சின்னப்பிள்ள மாதிரி அடம் பிடிக்கிறீங்க? ஆ... நோய் குணமாகணுமென்னா மருந்து சாப்பிட்டுத் தானே ஆகணும்.

ஹம்: ஆ..ஆ... விழுங்கிட்டன் விழுங்கிட்டன்.

தௌ.: இந்ததாங்க தண்ணி...

ஹம்: (வருத்தத்துடன்) அப்பாடா... நெஞ்செல்லாம் எரியுது...ம்... இப்பிடி பக்கத்தில நின்னுகொண்டு மருந்து தரத்தான் ஓடோடி வந்தீங்களாக்கும்.

தௌ.: இப்பதான் என்ற மனசு சந்தோஷமா இருக்கு ஹம்ஸி.

ஹம்: நீங்க இப்பிடி உக்காந்திருக்கிறதப் பாக்க எனக்கு மூனு வருஷத்துக்கு முன்னால ஞாபகம் வருது...

தௌ.: (யோசித்தபடி) ஓ... மூனு வருஷத்துக்கு முன்னால தானே நமக்கு கல்யாணம் நடந்திச்சி... அதத் தானா சொல்றீங்க? (சிரிப்பு)

ஹம்: ம்... நீங்க இன்னக்கும் ஒரு மாற்றமுமில்ல.. ஆனா நான் தான்...

தௌ.: (சற்று கோபமாக) ஒரு நோயாளிக்கு பெரிய நோய்... தான் நோயாளியென்னு நெனக்கிறது தான்...... அந்த எண்ணத்த உங்க மனசிலிருந்து இல்லாமச் செய்யத் தான் நான் ஒவ்வொரு நாளும் பாக்கிறன்... ஆனா நீங்க...

ஹம்: பாருங்க... .'.பெக்டரிலிருந்து வந்து எவ்வளவு நேரமாச்சு.. கொஞ்சம் தேநீராவது குடிச்சீங்களா?என்னோட மாரடிச் சிட்டே இருக்கீங்க.... போய் முகம்கால் கழுவிட்டு வாங்க.

தௌ.: (திரும்பி) சரிசரி ஓடிவந்திடுறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 2**

**இடம்:**

மன்சூர் நானாவீடு

**பாத்திரங்கள்:**

தௌஃபீக், ஜெஸிமா.

(கார் வரல்...ஹோன் சத்தம்)

ஜெஸி: (மனதுள்) காரோன்று வந்திருக்கே... வீட்டில வாப்பாவும் இல்லாத நேரம்... யாரோ இறங்கி வாறாங்க.

தௌ.: ஆ... மன்சூர் நானாட வீடு இதுதானா?

ஜெஸி: ஆமா இது தான் உள்ள வாங்க.

தௌ.: அவர சந்திக்கிறதுக்குத்தான் வந்தநான்

ஜெஸி: ஆ.. அப்பிடியா.. வாப்பா இப்பதான் வெளிய போனாங்க... எங்கயும் தூரம் போயிருக்க மாட்டார்... அதுசரி நீங்க யாரென்று...?

தௌ.: நீங்க மகளென்னு தெரிஞ்சுக் கிட்டன்.... அவர் நம்ம ஃபெக்டரில தான்...

ஜெஸி: ஓஹோ... அப்ப நீங்க தான் தௌஃபீக் தொர இல்லயா?

தௌ.: ஒரேயடியாகச் சொல்லிட்டீங்கில்ல

ஜெஸி: ம்...வாப்பா அடிக்கடி சொல்வாரே

தௌ.: அப்பிடி என்னதான் சொல்ல இருக்கு?

ஜெஸி: (இதமாக) அதயெல்லாம் நான் சொன்னா... உங்கள முகத்துக்கு முன்னால புகழ்றதா முடியும்.

தௌ.: (சிரிப்பு)

ஜெஸி: என்ன நின்னுக்கிட்டே இருக்கீங்க... நம்ம வீட்டில கொஞ்சம் உக்காரக்கூடாதா?

தௌ.: சேச்சே அப்பிடி ஒன்னுமில்ல... சரி உக்கார்ரன்... இனி என்ன தரப்போறீங்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெஸி: ஆக ஒரு டீ தருவோம்... அவ்வளவு தான்

தௌ.: பிளேன்ரீதான் எதிர்பார்த்தன்... டீ தரப் போறீங்க (சிரிப்பு) சரி... வாப்பா வரக்காணமே... எங்காவது..

ஜெஸி: சந்திப்பக்கமாத் தான் போயிருப்பார்.

தௌ.: ... கொஞ்ச நேரம் பாக்கலாம்... ம்.... தெரியாமத்தான் கேக்கிறன்.. பார்த்த கண்ணுக்கு படித்த பெண் போல இருக்கிறீங்க... ஏதாவது உத்தியோகம்...

ஜெஸி: (சிரிப்பு) இந்தக் காலத்தில உத்தியோகமெங்கிறது சின்ன விஷயமா என்ன?

தௌ.: ம்.... உங்கவாப்பா இதப் பற்றி ஒரு வார்த்த கூட சொல்லலியே...

ஜெஸி: எங்க வாப்பாவின்ற குணமே அது தானே!

தௌ.: சரி எதுவரையில படிச்சிருக்கிறீங்க?

ஜெஸி: ஜீ.ஸீ.ஈ பாஸ்பண்ணியிருக்கன்

தௌ.: அதுக்குமேல...

ஜெஸி: ஆசப்பட்டன்... வாய்ப்பு இருக்கணுமே

தௌ.: நம்ம ஃபெக்டரீல கிளறிகல் வேல நிறைய இருக்கு ஆளெடுக்க முடிவு பண்ணியாச்சு உங்க விருப்பம்..

ஜெஸி: பெரிய உதவியா இருக்கும்... வாப்பாவும் நிச்சயமா விரும்புவார்.

தௌ.: சரி நேரமாச்சு... வாப்பாவ உடனடியா வந்து சந்திக்கச் சொல்லுங்க.

ஜெஸி: சொல்றன்... ஆ... புறப்பட்டிட்டீங்கில்ல...இனி நான் சொல்லி நிற்கவா போறீங்க.

தௌ.: பரவால்ல... இனி அடிக்கடி வரலாந்தானே...(கார் புறப்படல்) துடுக்கான பெண்... ரொம்ப இங்கிதமாக கதைக்கிறாளே... பாவம்... தொழிலுமில்லாம... கல்யாணம் செய்ய வாய்ப்புமில்லாம (ஹோர்ன்) ஓ... என்மனம் ஏன் இன்னும் அவளப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றியே நெனச்சுக்கிட்டிருக்கு...? எதிர்பாராத சந்திப்பு. சிலபேர இப்படித்தான் கொஞ்ச நேரம் பழகினாலும்...

**காட்சி 3**

**இடம்:**

**ஹம்ஸியாவின் வீடு**

**பாத்திரங்கள்:**

ராஸிக், ஹம்ஸி

ராஸி: (பலமாக) தௌ.ஃபீக்.... தௌ.ஃபீக்...

ஹம்: (உள்ளே இருந்து) ஆ...மாமாவா வாங்க வாங்க.

ராஸி: (கோபமாக) எங்க தௌ.ஃபீக்?

ஹம்: (பயந்து) அவர்... அவர்... வெளிய போயிருக்கார்.

ராஸி: உள்ளே இல்லேன்னா வெளிய தானே போயிருக்கணும்.... எங்க போயிருக்கான்னு தானே கேக்கிறன்.

ஹம்: (தயங்கி) எங்காவது அவசரமா போயிருக்கணும் மாமா.

ராஸி: வழக்கமா சொல்லாமத் தான் போறதா... இல்ல

ஹம்: இன்னக்கித் தான்....

ராஸி: என்னக்குமே இப்படித் தான். விஷயம் தெரிந்து தான் வந்திருக்கன்...

ஹம்: எனக்கென்னா ஒன்னுமே புரியல்லியே.... (மனதுள்) ம்... காலயில போனவர் சாப்பிடக் கூட வரயில்ல கொஞ்ச நாளா அவர் போக்கு இப்படித்தான்... என் காதில விழுந்த கதைகள்... இதயெல்லாம் மாமாவிடம் சொல்லக் கூடாது. என்ன இருந்மாலும் அவர் என் கணவராயிற்றே...

ராஸி: என்ன யோசிக்கிறீங்க? இன்னக்கி லீவுநாள்... ஃபெக்டரியும் மூடியிருக்கு... வீட்லயும் இல்லயென்னா... சரி வீட்டிலிருந்து வெளிக்கிட்டு எவ்வளவு நேரமாச்சென்னாவது சொல்லுங் களன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹம்: (தடுமாற்றம்) ஆ... போய்... ரெண்டு...இல்ல

ராஸி: சரிசரி எங்க போயிருப்பான்னு எனக்குத் தெரியும்... நானே போய்ப் பார்க்கிறன்.

ஹம்: (கொஞ்சம் பொறுங்க மாமா.

ராஸி: பதட்டமாக) இல்ல நான் போகணும்... உங்க கணவனா இருந்தாலும் என்மகன்... அவனப்பத்தி ஊரெல்லாம் கதைக்கத் தொடங்கிட்டாங்க.

ஹம்: (வியப்போடு) ஆ... அப்பிடி அப்பிடி... என்ன என்ன..

ராஸி: கொஞ்சம் கண்டிப்பா இருக்கிறது நல்லது.

ஹம்: ம்..(மனதுள்) எப்பிடியாவது மறச்சுக்கப்பாத்தன். மாமா எல்லாம் தெரிந்து கொண்டு தான் வந்திருக்கிறார்.சே... இதென்ன வெட்கக்கேடு.... நான் நோயாளியா இருக்கிறது தான் இதுக்கெல்லாம் காரணமோ... இனி... இனி என்ற வருத்தங்கள் காட்டிக் கொள்ளக் கூடாது. (பெருமூச்சு) யாஅல்லாஹ் நீதான் என்ற வருத்தத்த லேசாக்கணும்.

ராஸி: (திரும்பி) சரி நான் வாரன்.

**காட்சி 4**

**இடம்:**

ஃபெக்டரி

**பாத்திரங்கள்:**

ராஸிக். மன்சூர். தௌஃபீக்

(பின்னணியில் தொழிற்சாலைக் கெடுபிடிகள்)

ராஸி: ஆ... என்ன மன்சூர் இங்க? ம்... ஓ..ஃபீஸோட...

மன்சூ: கேட்கீப்பரா வேற ஆள் போட்டிருக்காங்க மொதலாளி.

தௌஃ: (அன்போடு) வாப்பா வாங்க வாங்க

ராஸி: ம்... புது முகங்களெல்லாம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தௌ.: அது மிஸ் ஜெஸிமான்னு..

ராஸி: அப்பிடியா.... (ஏளனச்சிரிப்பு) வாப்பாக்கு புரொமோஷன்... மகளுக்கு எபாய்மெண்ட் இல்லயா?

தௌ.: அ... அ.... (தடுமாற்றம்)

ராஸிக்: (கோபமாக) இப்பதான் தெரியுது.... ஒரு குரங்கிட கையில ..பெக்டரிய ஒப்படச்சிருக்கலாம்.

தௌ.: அப்பிடியொரு விபரீதமும்...

ராஸி: ஆமா... ஒருவிபரீதமும் நடக்கல்ல.. ஒன்பது நடந்துக்கிட்டிருக்கு... மனிதனையும் வாங்களாம் ஆனா மரியாதைய வாங்கமுடியாது தௌபீக்.

தௌ.: (கடுமையாக) அப்பிடி மரியாதக் குறைவா என்ன தான் இங்க நடந்திட்டுது?

ராஸி: என்ன நடந்திட்டுதென்னு உனக்குத் தெரியாதா? ஊர் சொல்லுது ஊர்

தௌ.: யாரும் எதையும் சொல்வாங்க.... அதுக்காக...

ராஸி: (கோபத்தோடு) யாரோ சொல்றாங்க எங்கிறதுக்காக நான் இங்க வரயில்ல.... அதில உண்ம இருக்கிறத தெரிந்து கொண்டதால தான் வந்திருக்கன்.... உத்தியோகமும் கொடுத்து போறநேரமும் வாரநேரமும் காரில காவிக் கிட்டுத் திரியவும் தொடங்கிட்டாய் என்ன? யார.... எங்க... எப்பிடி வைக்கணுமென்னு உனக்குத் தெரியல்ல.... ம்.... கட்டிய மனைவியொருத்தி இருக்காங்கிறது கூட மறந்து போச்சில்ல... (திரும்பி) டேய்... உன் முகத்துக்கு முன்னால நிற்கவே வெட்கமாயிருக்கு.

தௌ.: வாப்பா வாப்பா... (நேரஇடை) போய்விட்டார். திரும்பிப் பாராமலே போய்விட்டார் (கோபமாக) புரியுது புரியுது இது அந்தக் ஹம்ஸியோட வேலதான்.... படுத்த படுக்கயா இருந்துக்கிட்டு வாப்பாட காதில ஊதியிருக்காள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிருக்கிற லட்சணத்தில இவ்வளவு காலமும் பொறுத்துக் கிட்டிருந்தேனே... ம்... அவளுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டிய காலம் வந்திட்டுது.... ம்....

**காட்சி 5**

**இடம்:**

**ஹம்ஸியாவின் வீடு**

**பாத்திரங்கள்:**

**ஹம்ஸியா. தௌஃபிக்**

(இரவின் ஒலிக்குறிப்புக்கள்)

ஹம்: (மெதுவாக) ஆ... நெஞ்சு வலிக்குதே.... இரண்டு கிழம ஒருவாறு அடக்கிக்கிட்டிருந்தன்.... இன்னக்கி பழையபடி... ஆ.... வரவரக் கூடுறாப் போலிருக்கே.... ஆ...

தௌ.: (ஆழ்ந்த தூக்கம்) (குறட்டைஒலி)

ஹம்: அவர்ற நிம்மதியான தூக்கத்த குழப்பக் கூடாது. நாளெல் லாம் ஃபெக்டரியில கஷ்டப்பட்டுட்டு தூங்கிறவர்.... பாவம்... அவருக்கு என்னால எந்த உபசரிப்புமில்ல... உபத்திரங் களுக்கு குறைச்சலுமில்ல...வரவர என்ற உடல் தேறிவர்ற தாத்தான் நினைச்சிருக்கார்.... ஆ.... ஐயோ...

தௌ.: (குறட்டை ஒலி)

ஹம்: (வேதனையுடன்) டியூப் மருந்தில கொஞ்சம் தடவி... பில்ஸ் ஒன்னும் போட்டால் வலி விடுமாக்கும்.. கபேட்டுக்கு மேலதான் வெச்சிருக்கன்... ஆ... ஐயோ... லைற்றையும் போடக்கூடாது... ஆ...ஆ.... வந்திட்டன்... ஆ...(ஏதோ விழும் சத்தம்) ஆ.. ஐயோ பெட்டி விழுந்த சத்தத்துக்கு தூக்கம் கலைந்திட்டுதோ தெரியல்ல..... பாவம் அவர் என்னோடு படுற பாடு... இவ்வளவு சம்பாதித்தும் குழந்தையில்லாம குடும்ப சுகமுமில்லாம.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தௌ.: (மெதுவாக) திரும்பவும் நெஞ்சுவலி போலிருக்கே... மருந்து தேய்க்கிறா.... தெரியாதது போலிருப்பம்...

ஹம்: (வேதனையுடன்) ஆ.. ம்மா... இப்ப அவர் முழிச்சிட்டா ரென்னா.... இவ்வளவு நாளா மூடிமறைச்சதெல்லாம்... ஆ.... அதுக்கென்ன செய்றது... வரவர வலி ஆ...

தௌ.: (கொட்டாவி) ஆ.... என்ன திரும்பவும்...

ஹம்: நீங்க நீங்க முழிச்சிட்டீங்களா?

தௌ.: (வெறுப்போடு) ம்... எல்லோருக்கும் தூக்கம் தான் நிம்மதி.. ஆனா எனக்கென்னா தூங்கிறதுக்குக் கூட நிம்மதி இல்லயே!

ஹம்: ஆ... ஒன்னுமில்ல நீங்க நீங்க தூங்குங்க.

தௌ.: (சற்றுபலமாக) ஒன்னக் கட்டிக்கிட்டுச் சாகிறனே.... இது என்தல நஸீபு... அவ்வளவு தான்.

ஹம்: யாஅல்லஹ்...என்ன ஏன் இப்படிச்சோதிக்கிறாய்?... இலைதவிட ஆ...

தௌ.: (வெறுபபோடு) ம்.... இந்தாங்க பில்ஸ்

ஹம்: ஆ... விழுங்கிட்டன் (நேரஇடை) இப்பபரவாயில்ல .. நாளக்கி பாப்பம்... போய்த் தூங்குங்க.

தௌ.: (தனக்குள்) ம்.... தூங்கிட்டார் போலிருக்கு... எல்லாம் என்ற தலைவிதி.... நோயாளிய கட்டிக்கிட்டுப் படுற பாடு நான்... அவளுக்கு நான் வேல செய்ய வேண்டியிருக்கு.. ம்.... நோயாளியா இருந்தாலும் வாப்பாவ தூண்டிவிட்டு கூத்துப் பாக்கிறதில ஒன்னும் குறைச்சலில்ல.

ஹம்: (தனக்குள்) ம்.... தூங்கிட்டார் போலிருக்கு...பாவம் என்னக் கட்டிக்கிட்டு அவர் படுறபாடு சொத்து சுகங்கள அனுபவிக்கக் கூட கொடுத்து வைக்கல... என்னாலயும் அவருக்கொரு சுகமுமில்ல.. ஒரு நாளா ரெண்டுநாளா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 6**

**இடம்:**

ஹம்ஸியாவின் வீடு. ஜெஸிமா வீடு

**பாத்திரங்கள்:**

மன்சூர்.ஜெஸிமா. தௌஃபீக். ஹம்ஸி

(கார் வரும் சத்தம்)

மன்சூ: (பதட்டமாக) ஜெஸிமா..ஜெஸிமா.அதுநம்ம தௌஃபிக் மொதலாளியின்ற...

ஜெஸி: (மெதுவாக) சிவப்பு டொயாடோ இல்லயா... ஆமா அவர்ட கார்தான் வாப்பா.

மன்சூ: நீ ஒன்னும் குழம்பக்கூடாது சரிதானே.

ஜெஸி: அவர் ஏதும் தப்பா நினைச்சிட்டாரென்னா...

மன்சூ: பயப்படாத.. நீ நெனைக்கிறாப்போல ஒன்னும் நடக்காது. நமக்கு அவரத் தேவதான்.... அதைவிட அவருக்கு நம்மத் தேவ... எதுக்கும் கொஞ்சம் உள்ள போய் நில்லு மகள்.

ஜெஸி: (திரும்பி) நல்லது வாப்பா. (கார் நிற்கும் சத்தம்)

தௌ.: (அழுத்தமாக) மன்சூர் நானா...

மன்சூ: ஆ... வாங்க தொர

தௌ.: (செருக்கோடு) நீங்க எதுக்கும் பயப்பட வேண்டியதில்ல... எல்லாம் நான் பார்த்துக்கிறன்.

மன்சூ: நீங்க இப்படிச் சொல்லலாமா முதலாளி. ஆனா நாங்க எப்பிடித் தாங்கிக்க முடியும்! உங்க வாப்பா வீட்டுக்கே வந்து சத்தம்போட்டிட்டுப் போனபிறகு...

தௌ.: இதெல்லாம் என் மனைவி... அந்த நோயாளி... அதுவும் நான் கொழும்புக்குப்போனநேரமாய்ப் பார்த்து செய்துள்ள வேலதான். வாப்பாவையும் மற்றவர்களையும் தூண்டிவிட்டு எதுவும் தெரியாத பூன மாதிரி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்சூ: அது உங்க குடும்ப விஷயமில்லயா.

ஜெஸி: (வந்தபடி) ஆ... நீங்களா உங்க காலில விழுந்ததா நினைச்சுக்குங்க... நாங்க நிம்மதியா வாழணும் பொஸ்... இனிமேல எங்க வீட்டுப் பக்கம் நீங்க...

தௌஃ.: (கோபமாக) என்ன சொல்றீங்க.... நான் எவ்வளவு எண்ணங்கள வளர்த்துக்கிட்டிருக்கன். யார்யாரோ கத்திறாங்க. அதுக்காக நீங்கெல்லாம் இப்படித் துடிக்கிறது உங்களுக்கே நல்லா இருக்கா?

மன்சூ: (இரங்கி) கோபத்துக்காகச் சொல்லல..

தௌஃ.: நீங்க என்னதான்சொன்னாலும் நான் இன்னக்கே வருவன்.. தீர்க்கமான முடிவோட இன்னக்கே வரப்போறன் (திரும்பி) தயாரா இருங்க...தைரியமா இருங்க... (திரும்பி) சரி வாரன்:

மன்சூர்: இங்க கார்த்திறப்ப மறந்திட்டீங்க (கார் செல்லல்)

தௌஃ.: (தனக்குள்) நான் எல்லாம் துப்பரவா விசாரிச்சுப் பார்த்திட்டன்... போதிய வசதி என்கிட்ட இருக்கு.... மனைவி தீராத நோயாளி... குழந்தைப் பாக்கியம் கூட இன்னும் இல்ல... இதானால எனக்கு இன்னொரு கல்யாணம் செய்துக்க முடியுமென்னு பள்ளிவாசல் ஹஸ்ரத் சொல்லிட்டார். இனியென்ன.... அனுபவிக்க வேண்டிய வயதில எல்லாம் அனுபவிக்கத்தானே வேணும். (கார் வந்து நிற்றல்)

தௌஃ.: (தனக்குள்) ம்... என்ன இது வீட்டில சன நடமாட்டமா இருக்கே.

ராஸி: கோல் கிடச்சுதா தௌஃபிக்?

தௌஃ.: இல்லயே. அப்பிடி என்ன விஷயம் வாப்பா?

ராஸி: (தாழ்ந்த குரலில்) மனைவிக்கு கொஞ்சம் கஷ்டமா இருக்கு... டொக்டர் வந்து ஊசி போட்டிட்டுத்தான் போனவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெள.: (வியப்பு) அப்படியா?

ஹம்: (வேதனையோடு) ஆ... வந்திட்டாரா.. ஆ...வாங்க உங்க கையத்தாங்க.

தெள.: (இளைத்தபடி) நீங்க... வரும் வரையில தான் காத்திருந்தன்.... உங்க... முகத்த... கண்டிட்டன். இனி... எனக்கு... நிம்மதி (பெருமூச்சு)

தெள.: (கம்மிய குரலில்) புலம்பாதீங்க ஹம்ஸி... கொஞ்சம் அமைதியா இருங்க.

ஹம்: உங்களப் பத்தி ஊரெல்லாம் கதைக்கிது...வாப்பா கூட.

தெள.: (இரக்கத்தோடு) ஹம்ஸி.... நீங்க என்மேல உயிரையே வெச்சிருக்கிறது எனக்குத் தெரியும்....

ஹம்: பரவால்ல... நீங்க என்மேல வெச்சிருக்கிற அன்பு குறையிறதுக்கும்.... என்மேல வெறுப்பு வளர்ரதுக்கும் நான் தான் காரணம். நான் நோயாளி.... ஆ... அதனால நான் தான் குற்றவாளி..... ஆ... ஐயோ...

தெள.: அப்பிடியெல்லாம் சொல்லாதீங்க ஹம்ஸி. நான்... நான்...

ஹம்: (அழுது) நீங்க நீங்க... இனிமேல கத கேக்கக் கூடாது. அத...அத... என்னால... பொறுக்க முடியலியே... பொறுக்கவே.... முடியலியே...

தெள.: கொஞ்சம் அமைதியா இருங்களேன்...

ஹம்: (அழுது) நீங்க வீணா கத கேக்காதீங்க... யாரையாவது கலியாணம் செய்யுங்க..இதுதான. என்ற கடைசி ஆச... எனக்கு இனி ஒரே நிம்மதி இதுதான்...

தெள.: (அழுது) என்ன சொன்னீங்க... நான் நான் தலைகால் புரியாம நடந்திட்டன் ஹம்ஸி.. அதப்பத்தி எப்ப கேப்பீங்க... கண்டிப்பீங்கென்னுதான் எதிர்பார்த்துக்கிட்டிருந்தன் ஆனா எனக்கு இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி உங்க வாயாலேயே சொல்றீங்களே.. இப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மனம் கொண்ட மனைவி உலகத்தில் எனக்கு மட்டும் தான் கிடச்சிருக்கும் ஹம்ஸி... உங்க உயர்ந்த உள்ளத்த உடைத்த பாவி நான்.. ஆமா..

ஹம்: இல்ல இல்ல நான் நோயாளி.... வாழ்வதற்கே தகுதியில்லா தவள்.... இனிமேல நான் பிழைத்தாலும் பிழைக்காட்டியும் ஊர்ப் பேச்சுக் கேக்காம.... இன்னொரு கல்யாணம் செய்து கொள்றதா.... சத்தியம் செய்ங்க.. இது ஒன்னுதான் இனி எனக்கு மருந்து...ஆ.

தௌ.: (அழுது) சத்தியமா... நான்... சத்தியமா...

ஹம்: கதகேக்காம கல்யாணம் செய்துகொள்றதா... சொல்லுங்க.

தௌ.: சத்தியமா... சத்தியமா... முதலும் கடைசியுமா.... நீங்கதா என் மனைவி ஹம்ஸி... இது சத்தியம்.

ஹம்: ஆ..ஆ... தண்.... தண்ணி(சோகராகம்)

தௌ.: (அழுது) அப்போதே டாக்டர் சொன்னார்.... மருந்தால மாத்திரம் உங்க மனைவிய குணமாக்க முடியாது. மனதையும் சந்தோஷமா வைங்கன்னு தெரிந்து தெரிந்தே உங்கள நோயாளியாக்கின பாவிநான்......

ஹம்: ஆ... ஆ... ஊர்ப் பேச்சு... கல்...யாணம்... நோயாளி... நீங்க.. கல்யா... ஆ... ஆ... (அசாதரண ஒலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று வரை...

சமூக நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இடம்:**

லா∴பிர் வீடு.

**பாத்திரங்கள்:**

லா∴பிர், **ஆமினா,நிஸா, அஸ்மியா**

அஸ்மி: (சத்தமாக) நிஸா... நிஸா...

நிஸா: (உள்ளேயிருந்து) ஆ... என்ன இது..ஏதோ அவசரம் போல இருக்கே...

அஸ்மி: ஆமா நிஸா.. இப்பதான் தந்தி வந்தது... நாளைக்கு ∴ பிளய்ட்...

நிஸா: (பெருமூச்சு) ம்.... நேற்று மெடிகல் நாளைக்கு பிளய்ட்... இவ்வளவு காலமும் ஒன்னா இருந்தோம்... இனி எப்பதான் சந்திப்போமோ... ம்.. உக்காரன் கொஞ்சம் கதைப்பம்.

அஸ்மி: இல்ல நிஸா.... அவசர அவசரமா ரெடியாக வேண்டியிருக்கு.... எல்லாரிட்டயும் சொல்ல வேண்டியிருக்கு.

நிஸா: அதனாலதான் வற்புறுத்தல்ல...சரி நான் வீட்டுக்கு வாரன்.

அஸ்மி: (திரும்பி) உம்மாட்டயும் சொல்லு (நேரஇடை)

ஆமி: ம்.. என்னமகள் நான் பின்னால வந்து ஏறுறன்... அஸ்மியா முன்னால இறங்கி ஓடுறாள்.

நிஸா: (சிரிப்பு) தெரியாதா.... அவளுக்கு ஸவூதி போக டிக்கட் வந்திருக்கு... அதத்தான் அவசரமா சொல்லிட்டு ஓடுறாள்.

ஆமி: எங்க பார்த்தாலும் ஸவூதிக்கும் டுபாய்க்கும் போற கதயாத்தானிருக்கு.

நிஸா: வேறென்ன செய்யிறது.... வாழ்க்கைக்கு அதொரு வழியா இன்னக்கி அமஞ்சிருக்கு... மானம் மரியாத பேசிறவங்க சந்தர்பத்தில வந்து உதவவா போறாங்க

லா∴பி: (செருமல்) என்ன.. உம்மாவும் மகளும் பெரிய கதையா இருக்கு....ம்.

ஆமி: ஒன்னுமில்ல... அடுத்த வீட்டு அஸ்மியா ஸவூதி போறா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லா.: (அலட்சியமாக) இதுதானா.... ம்.... இப்பிடியொரு காலம்... வீட்டவிட்டு வெளியேறாம இருந்ததுகளெல்லாம் இப்ப என்னென்டா நாட்டவிட்டு நாடுபோக துணிஞ்சிட்டாங்க... ம்... இப்பிடியொரு காலம்.

நிஸா: ஒரு காலத்தில அப்பிடிப் போறவங்கள தப்பும் தவறு மாத்தான் பாத்தாங்க... இன்னக்கி போகாதவங்களத்தான் அப்பிடிப் பாக்கிறாங்க வாப்பா.

லா.: ம் (நையாண்டியாக) நிஸா சொல்றதப் பார்த்தா உனக்கும் அந்த ஆச வந்திட்டுபோலிருக்கு.

ஆமி: காலம் மாறிக்கிட்டுப் போகுது... அதுக்கேத்தாப் போல நாங்களும்....

லா.: (கோபமாக) மூடு வாய... பெற்ற பிள்ளைங்களயும் மனைவிமாரயும் கண்தெரியாத துாரத்துக்கனுப்பி... அந்தப் பிழைப்பால சோறு தின்ன நான் ஒன்னும் மானம் கெட்டவனில்ல... என்ற கால்கைல உயிரிருக்கும் வரை யில விடமாட்டன்... ஆமா.

ஆமி: (ஆறுதலாக) சரிசரி இதுக்கு என்னத்துக்கு இந்த மாதிரி கோபப்படுறீங்க... நீங்க சொன்னா அத்துமீறி நாங்க நடக் கவா போறம்.... சரிமகள் வாப்பாவுக்கு கொஞ்சம் கோப்பி போட்டிட்டு வாங்க.

நிஸா: (திரும்பி) சரிம்மா

லா.: (இதமாக) ஆமினா இப்படியான ஆசகள் உங்களுக் கெல்லாம் வரவே கூடாது... நான் யாருக்கும் எந்தக் குறையும் வைக்கல்ல... என்ற உம்மா வாப்பா தேடி வைத்தது இன்னக்கி என்ற புள்ளகுட்டிகளுக்கும் உதவுது.

ஆமி: நீங்க சொல்றது சரிதான் பாருங்க... உங்கள விட வசதி படச்சவங்கட மனைவி பிள்ளைங்களே இன்னக்கி வெளி நாட்டுக்குப் பறக்கிறாங்க....அதனால எவ்வளவோ வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமச்சிக் கொண்டாங்க.... எனக்குக் கூட இன்னும் நாற்ப தாகல்ல.... மகள் போகாட்டியும் பரவால்ல...

லா.ஃ: (கோபமாக) இங்க இங்க என்ற தலையில இப்லீஸ ஏத்தாதீங்க....

ஆமி: பதட்டப்படாம நான் சொல்றதக் கேளுங்க..... மகள்ட விஷயமா.... ஏதும் நகநட்டு பணம் கினமென்னு கேட்டுப் பிடிச்சிட்டாங்கென்னா என்ன செய்றதென்னு கேக்கிறன்.

லா.ஃ: இங்க பாரு பொடியன் நம்ம சொந்தக்காரன்.... அதோட அவனும் நிஸாவும் பழக்கம்... இதனால நீங்க நினைக் கிறாப்போல...

ஆமி: அப்பிடினா சும்மா வாய்ப்பேச்சோட இருக்காம... நாலு பேர் கூடி ஒழுங்கான முறைக்கு ஒரு பேச்சு முடித்து வைத்தால் தான் மனசுக்கு நிம்மதியா இருக்கும் பாருங்க.... இந்தக் காலப் பொடியன்கள் இன்னக்கி ஒன்னு சொல் வான் நாளக்கி இன்னொன்று சொல்வான்.

லா.ஃ: அப்படியா சரி... நாளக்கே போய் விஷயத்தப் போடுறன்.

**காட்சி 2**

**இடம்:**

**லா.ஃபிர் வீடு**

**பாத்திரங்கள்:**

**நிஸா. மக்கீன். ஆமினா**

நிஸா: ஆ.. வாங்க வாங்க... என்ன இந்த நேரத்தில....

மக்கீ: நீங்க எந்த நேரத்தில எதிர்பார்க்கிறீங்கென்னு தெரியல்ல... அதனால தான்.

நிஸா: நாள் குறித்து... நேரம் குறித்து... உங்கள எதிர் பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம் விரைவில வரத்தானே போகுது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கீ: (சிரிப்பு)ஆ.. அதச் சொல்றிங்களா?அதுக்கென்ன அவசரம்... ம்.... மாமாவும் அடிக்கடி வந்து அவசரப்படுத்திறார்.

நிஸா: ஓ...உங்களுக்கென்ன... நீங்க ஆம்புள.... ம்... ஆம்பிளைங்க அவசரப்பட மாட்டாங்களே...

மக்கீ: அதுசரி எங்க மாமியக் காணல்லியே...

நிஸா: ஏதாவது வேலையில மூழ்கிப்போயிருப்பா.... (உள்ளே) உம்மா... உம்மா... வாப்பாங்கெல்லாம் சோகமா இருக்காங் களா...

மக்கீ: ஆமா சோகமா இருக்காங்க... மாமா நேற்றும் வந்ததா உம்மா சொன்னாங்க.

ஆமி: (பெருமூச்சு) அவரும் எப்படியாவது சீக்கிரமா செய்து வைக்கப் பார்க்கிறார்.

மக்கீ: (சிரிப்பு) உம்மாவும் மகளும் என்ன விடமாட்டீங்க போலிருக்கு.

நிஸா: ஆமா நாம பிடிச்சா ஒரே பிடிதான்...அப்புறம் விட மாட்டம்.

மக்கீ: (சிரிப்பு)

**காட்சி 3**

**இடம்:**

லா:.பிர் வீடு

**பாத்திரங்கள்:**

லா:.பிர், ஆமினா

(துள்ளிசை காற்றோடு கலத்தல்)

லா:.பி: (வியப்புடன்) ம்... என்ன இது...ஜன்னலுக்கு கைகொடுத்து அப்படியே மெய்மறந்து நிக்கிறீங்க.... ம்.... நான் வந்தது கூட விளங்கல்லியே... (சத்தமாக) இது உங்களத்தான்.

ஆமி: (பதட்டமாக) ஆ... நீங்க... ம்.. இப்ப தான் வந்தீங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(மீண்டும் பலமாக துள்ளிசை)

லா.'.பி: என்ன அது ஏதோ பாட்டுச் சத்தம் போலிருக்கு..

ஆமி: ஆமா..அன்னக்கி அதென்ன வெளிச்சமென்னு கேட்டீங்க... ம்.... அஸ்மியா வீட்டுக்கு ரெண்டு தூண் போட்டு கரண்ட் எடுத்திருக்காங்கவென்னு சொன்னன்

லா.'.பி: கேட்டன்... கேக்கத்தானே வேணும்.

ஆமி: இன்னக்கி வந்து அதென்ன சத்தமென்னு கேக்கிறீங்க.... சொல்லத்தானே வேணும்.

லா.'.பி: ம்... சொல்லுங்க..

ஆமி: (கிண்டலாக) ஸவூதியிலிருந்து பெரிய ஸெட்டொன்னு அனுப்பியிருக்கா... பார்க்க அழகா இருக்கு... அததான் பாடுது (மீண்டும் துள்ளிசை)

லா.'.பி: ம்... வேறென்ன... இந்தக் கூத்துகளுக்குத்தானே போறாங்க.

ஆமி: ம்... அஸ்மியா போய் ஒன்றரை வருஷந்தான் அவளனுப்பிய பணத்தால தானே இவ்வளவும் செய்திருக்காங்க.

லா.'.பி: (கிண்டல்) என்னத்த செஞ்சி கிழிச்சுப் போட்டிருக்காங்க... ம்... கரண்ட் எடுத்திருக்காங்க... ம்.... அவ்வளவு தானே..

ஆமி: (அழுத்தமாக) அவ்வளவு தான்... உங்க கண்ணுக்கு தெரியிறது அவ்வளவு தான்... கொஞ்சம் கேளுங்க. தம்பிக்கி பிஸ்னஸ் பண்ண இருவத்தஞ்சி... அவளுக்கு ஒன்று விடாம நகநட்டு.... காணுமா இல்ல இன்னும் சொல்லட்டா...

லா.'.பி: (அலட்சியமாக) எத்தின லட்சத்தத்தான் கொண்டு வந்து கொட்டினாலும் அதுவுமொரு பிழைப்பான்னு கேக்கிறன்...

ஆமி: சரி அத விடுங்க... நீங்க போன விஷயம்?

லா.'.பி: போன விஷயம் சரிதான்.

ஆமி: எப்பவும் அப்பிடித்தானே சொல்வீங்க... எப்ப பேச்சு முடிக்கிறன்னு கதச்சீங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லா.ஃ.பி: அதுதானே ஆமினா...நாங்க வாக்குமாறுவமா என்டில்லயா கேக்கிறாங்க.

ஆமி: அப்பிடியா (பெருமூச்சு) எனக்கென்னா எதுவுமே விளங்கல்ல... ஊர் வழக்கமென்னு ஒன்னிருக்கில்லயா...

லா.ஃ.பி: அதெல்லாவற்றையும் விட ஒரு மனிதனின்ற வாக்கு இருக்கில்லயா... அத மதிக்கணும் பாருங்க.

ஆமி: எல்லாரும் உங்களைப் போல கொடுத்தவாக்க காப்பாத்துறவங்களா... ம்... சும்மா தான் கேக்கிறன்.

லா.ஃ.பி: அப்பிடியெல்லாம் ஏன் சந்தேகப்படுறீங்க...? பழகாத தெரியாத ஆக்களா?

ஆமி: ஏதோ ஒருவகையில சொந்தக்காரங்க தான்... அந்த நம்பிக்கையிலதானே இருக்கிறம்.

**காட்சி 4**

**இடம்:**

**அஸ்மியா வீடு**

**பாத்திரங்கள்:**

**அஸ்மியா, நிஸா**

(துள்ளிசை எழுந்து குறைதல்)

அஸ்மி: ஆ... நிஸா வாவா... பக்கத்து வீடு இப்பதான் வாராயில்ல.

நிஸா: பிரயாணக் களைப்பு தீர முன்னால வரமுடியுமா என்ன... ம்... அஸ்மியாவ அறிமுகம் பிடிக்கிறதே கஷ்டமாயிருக்கே.

அஸ்மி: அப்பிடீன்னா... ரெண்டு வருடத்தில் நான் நல்லா ஊதிப் போயிட்டமென்னு சொல்றியாக்கும்.

நிஸா: வேறென்ன.... ஸவூதிச் சுவாத்தியம் ரொம்பவும் ஒத்துவந்திருக்கு போலிருக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்: (சிரிப்பு) ஒரு வகையில இந்த வாய்ப்புக் கிடச்சதே அதிர்ஷ்டம்தான்.... அப்பிடியொன்னும் கஷ்டமில்ல நிஸா... நாம வீட்டில செய்ற அதே வேல தான். தாராளமா ஊதியம் வேற கிடைக்குது.

நிஸா: அந்த வகையில நாங்ககொடுத்து வைக்கல்ல அஸ்மியா.

அஸ்: இதெல்லாம் நான் கொண்டுவந்த சாமான்கள் தான்.. அங்க பாடிக்கிட்டிருக்கே அது கூட கையோட கொண்டு வந்தது தான்.

நிஸா: ஏதோ போனோம் வந்தோமென்றில்லாம ஏதாவது பிரயோசனமா செய்து போடணும்... உன்னப் பொறுத்த வரையில் புத்திவேல செய்திருக்கு... வேறென்ன விசேஷம் அஸ்மியா.

அஸ்: (இழுத்து) குறிப்பாகச் சொல்றென்னாரிடன் டிக்கட்டோட வந்திருக்கன்.

நிஸா: (வியந்து) அப்பிடீன்னா?

அஸ்மி: ஒரு மாதம் லீவு... அப்புறம் திரும்பவும் போறது தான்.

நிஸா: அதனால...

அஸ்மி: என்னடீ... ஒன்னுமே தெரியாதது போல கண்ணுரெண்டும் உருளுது.... எனக்கு... கல்யாணம் ஏற்பாடாயிருக்கு... அப்புறம் அவரயும் கூட்டிக்கிட்டு பறந்திடுவன்.

நிஸா: மன்னிச்சுக்கோ... உண்மையில எனக்கு ஒன்றுமே தெரியல்ல... இனிமேல தெரிஞ்சுக்குவன்... கேட்டாலும் யாரென்று சொல்லமாட்டாயில்ல. (சிரிப்பு)

அஸ்மி: போகப் போறியா.... இதில் ஒரு மெக்ஸியும் முக்கோண முந்தானையும் இருக்கு.... இது என்ற பிரஸன்ட்... அதோட இரவைக்கு டீவி பார்க்க மறக்காம வா சரி தானே....

நிஸா: (திரும்பி) சரி வார்றன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காட்சி 5**

**இடம்:**

லா.ஃபிர் வீடு

**பாத்திரங்கள்:**

லா.ஃபிர், ஆமினா, நிஸா, மக்கீன்

நிஸா: ஆ... வாங்க.... அந்தப் பையனவிட்டு கூப்பிட்டாட்டி வந்திருக்க மாட்டீங்கில்ல.

மக்கீ: (விருப்பமில்லாமல்) அவசரமா போய்க்கிட்டிருந்தன் அதனால தான்.

நிஸா: என்ன அவசரமிருந்தாலும் வீட்டகடந்து போகிறப்போ...

மக்கீ: சரி என்ன விஷயமென்னு சொல்லுங்க.

நிஸா: அப்பிடி குறிப்பிடத்தக்கதா ஒன்னுமில்ல... உங்கள இந்தப் பக்கம் காணவே இல்லயே...

மக்கீ: சரி கண்டிட்டீங்கில்ல.... அப்ப நான்...

நிஸா: ஏதோ டிரைவிங், எல்லாம் பழகிறதா கண்டவங்க சொன்னாங்க.

மக்கீ: ஆமா பழகிட்டிருக்கன்... நாலு தொழிலும் தெரிந்திருக்கிறது நல்லது தானே.

நிஸா: அப்ப பிஸ்னஸ்

மக்கீ: அத இன்னும் விரிவுபடுத்திற யோசன இருக்கு... அதுக்கு சொந்தமா ஒர வாகனமிருந்தா...

நிஸா: நல்லது தான்... நிறையப் பணமும் தேவப்படுமே

மக்கீ: ஆமா...தேவயொண்ணு ஏற்பட்டா வழியொண்ணும் பிறக்கும் தானே.

நிஸா: இப்போதே இந்தப் பக்கத்த மறந்திட்டீங்கென்னா எங்க ஞாபகம் வருமோ தெரியல்ல.

மக்கீ: எதிர்காலம் நிச்சயமில்லாதது தானே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஸா: (அதிர்ந்து) ஆ... என்ன சொன்னீங்க

மக்கீ: (சமாளித்து) வந்து... நம்ம தலைவிதி எப்பிடி இருக்கோ அப்பிடி நடக்குமென்னு சொன்னன்.

நிஸா: அந்த அல்லாஹ்தான் எல்லாம் லேசாக்கி வைக்கனும்.

மக்கி: அப்ப நான் வர்ரன்... நிறைய வேலைகள் இருக்கு.

நிஸா: ஒன்னும் குடிக்கக் கூட இல்லியே...

மக்கீ: (திரும்பி) பரவால்ல...

நிஸா: (தனக்குள்)ம்... பேச்செல்லாம் ரொம்ப வித்தியாசமா இருக்கே. முன்பெல்லாம் சிரித்துச்சிரித்து அன்பாக கதைப்பாரே... ம்... உம்மாவக் கூட கேக்கல்ல... எதிர் காலம்... பிஸ்னஸ் ஏதேதோ பிதற்றினார்... என்னால எதையுமே நம்ப முடியாமலிருக்கு.

ஆமி: (வந்தபடி) நிஸா... என்ன இது ஒரு மாதிரி.

நிஸா: ஒன்னுமில்ல.. இப்பதான் மக்கீன் மச்சான் வந்திட்டுப் போறார்.

ஆமி: ரொம்ப நாளக்கிப் பிறகு வந்திருக்காரில்ல..

நிஸா: வரல்லும்மா நான்தான் கூப்பிட்டன்

ஆமி: அப்புறம் என்ன சொன்னார்.

நிஸா: (வெறுப்புடன்) ஏதோ விருப்பமில்லாத இடத்துக்கு வந்தது போல தான்

ஆமி: ஆ.. அப்ப கேள்விப்பட்டதெல்லாம் உண்ம தான் போல...

நிஸா: (பதட்டமாக)கேள்விப்பட்டதா..விளக்கமா சொல்லுங்கம்மா... எனக்கென்னா ஒன்னுமே புரியல்ல.

ஆமி: இப்ப நான் எத்தின இடத்துக்குப் போய்வாறன் தெரியுமா... போன இடமெல்லாம் இதே கததான்

நிஸா: இதே கதயென்னா... என்ன கதயும்மா

ஆமி: இருட்டுப் படுதென்னு ஓடி வந்திட்டான் .....இல்லேன்னா எல்லா விபரத்தையும் எப்படியாவது அறிஞ்சிக்காம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கவே மாட்டான் ...ம்...எத்தின வருஷமா மனதில வெச்சிருந்த விஷயம் மண்ணாப்போயிட்டு

நிஸா: (கலங்கி) உம்மா.... உம்மா.... புலம்பாம...

ஆமி: புலம்பல்ல மகள் ...பொய்காரங்கள நம்பி ஏமாந்து போயிட்டம் ... உங்க வாப்பா இருக்காரே அவர அவர... எல்லாம் அவர்ட குத்தம்தான்

லா.ஃ.பி: (வந்தபடி) ஆ... ஆ... என்ன உம்மாவும் மகளும் ஒரே சத்தமாயிருக்கு ....

ஆமி: வாங்க உங்களத்தான் தேடிக்கிட்டிருந்தம்.

லா.ஃ.பி: அன்னக்கி கொடுத்த சாமானுக்கு காசெடுக்கப்போனதில நேரம் போனதே தெரியல்ல

ஆமி: உங்கட சாமான்கள ஒருபக்கம் வெச்சிட்டு நடந்திருக்கிற கதையப் பாருங்க

லா.ஃ.பி: அப்படி என்னதான் நடந்திட்டுது?

ஆமி: என்ன நடந்திட்டுதா (கோபமாக) நடக்கக் கூடாதது நடந்திருக்கு.... சொந்தம் பந்தம்.... நல்லவங்க... வாக்கு மாறாதவங்க என்டெல்லாம் சொல்லிச் சொல்லி காலத்த கடத்திக் கொண்டிருந்தீங்க.... ம் அந்த .......மக்கீனுக்கு கல்யாணம் தீர்ப்பாயிற்று

லா.ஃ.பி: (வியந்து) உண்மதானா ... நம்பமுடியலயே.....

நிஸா: (வேதனையோடு) நீங்க சொல்றதெல்லாம் உண்மயாத்தான் இருக்கும் ..... இன்னிக்கி அவர்டகத ... முகபாவம் ... பதட்டமெல்லாம் ஏதோ கள்ளத்தனந்தத்தான் காட்டிருச்சு

லா.ஃ.பி: (கோபமாக) ஆமினா இத இன்னும்கொஞ்சம் விசாரிக் கணும்.... இடத்தையும் சொன்னா ....

ஆமி: அடுத்த வீடுதான்.... போனகிழம ஸவுதியிலிருந்து வந்தாளே அஸ்மியா.... அவளுக்குத்தான் நாளன்னைக்கி ரெஜிஸ்டேஷனாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஸா: (தனக்குள்) கல்யாணமென்னு சொன்னாலே... ஹவுஸ் டிரைவரா அவரயும் கூட்டிக்கிட்டுப் போறதாச் சொன்னா ளே..... அவரும் டிரைவர் வேல வேற பழகிட்டிருக்கார்.... இப்பத்தான் உண்ம விளங்குது

லா.ஃ.பி: (ஆவேசம்) விடமாட்டன்... விடமாட்டன்.... இத நான் விட மாட்டன்... அப்போதே சொல்லியிருக்கலாம்..... இவ்வளவு காலமும் இழுத்தடிச்சிட்டு இப்படிச் செய்திட்டாங்களே..... ம்.... நாலு வார்த்த சுடச்சுடச் சொல்லி ரெண்டு கன்னத்து க்கும்....

ஆமி: (இதமாக) இங்க இங்க சொல்றதக் கேளுங்க....

லா.ஃ.பி: இவ்வளவு நாளும் அவங்க சொல்றதக் கேட்டுக்கிட்டுத்தா னிருந்தன்... இதுக்குமேல பொறுக்கமாட்டன்.. விடுங்க.... (சத்தமாக)என்ன விடுங்க...

நிஸா: (கெஞ்சி) வாப்பா... வாப்பா... போகவேணாம் வாப்பா...

ஆமி: பூட்டுங்க... கதவப்பூட்டித் திறப்ப எடுங்க....

லா.ஃ.பி: (சத்தமாக) மரியாதையா ரெண்டுபேருக்கும் சொல்றன்... என்ன விடுங்க.. (இளைத்தல்) நான் யார் ரெங்கிறத அவங்களுக்கு இன்னக்கித்தான் காட்டப்போறன்.... ஏமாத்து செய்யிறவங்கள எனக்குப்பிடிக்காது...விடுங்க..விடுங்க....

நிஸா: வாப்பா... வெட்கம் வாப்பா வெட்கம்..இந்த ராவில ஊர் சிரிக்கும் அங்க அது மழையும்பெய்யத் தொடங்கிரிச்சி (மழையும் இடியும்)

லா.ஃ.பி: பெரிய இடிநம்ம தலையில விழுந்த பிறகு.. இந்த இடியும் மழையும் நமக்கு பெரிசில்ல..... விடுங்க...

ஆமி: நான் சொல்றதக் கேளுங்க.....

லா.ஃ.பி: (தனித்து)சரி என்ன சொல்லப்போறிங்க?

ஆமி: எல்லாம் நாளைக்கி ஆறுதலா கேட்டுக்கலாம்..... ஏதோ நடக்கிறது நடந்திட்டு..... இனிவேற வழியப்பார்க்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே...... ஸவுதிச் சல்லியக் காட்டி வலைல போட்டி ட்டாங்க

லாஃபி: சரிசரி இப்போதைக்கு நிக்கிறேன்..... ஆனா விடமாட்டன்

**காட்சி 6**

**இடம்:**

லாஃபிர் வீடு

**பாத்திரங்கள்:**

**ஆமினா, நிஸா, லாஃபிர்**

(அதிகாலை ஒலிக்குறிப்பு)

ஆமி: (மெதுவாக) நிஸா.... சீக்கிரம் எழும்புங்க நிஸா....

நிஸா: (தூக்கத்தோடு) ஆ.... என்ன உம்மா... என்னது..?

ஆமி: பாங்கு சொன்ன உடனே வாப்பா எழும்பிட்டார்..... ஒரு நாளும் இவ்வளவு நேரத்தோட எழும்புறதில்ல.... ஏதோ ரெடியாகிற மாதிரியும் இருக்கு....

நிஸா: அ... அப்ப அங்கபோய் ஏதும் குழப்பம் செய்யப் போறாரோ தெரியல்ல.... ஊருக்கு அம்பலமானா....

ஆமி: அதுதானே சொல்றன.... கோபம் தலைக்கேறிட்டென்னா ஒன்னையும் யோசிக்கமாட்டார்..... எனக்கென்னா பயமா இருக்கு.... எதுக்கும் வந்துகேளுமகள்.... (நேரஇடைவெளி) ஆ.... இந்தாங்க கோப்பி....

நிஸா: வாப்பா இன்னிக்கி நேரகாலத்தோடயே....

லாஃபி: போகப்போறன்.... ஆமா அதுக்குத்தான் ரெடியாகிறன்.

ஆமி: (கெஞ்சி) நிங்க எங்கயும் போகவேண்டாம்..... நடந்தது நடந்துபோச்சி..... இனி நடக்க இருக்கிறத பாப்பம்.....

நிஸா: வாப்பா பொறுமசாலிகளுக்குத்தான் வெற்றி. அதனால தயவுசெஞ்சி எந்தக் குழப்பத்தயும் போட்டுக்காதயுங்க வாப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லா.்.பி: (சிரிப்பு) ஆ.... பயப்படாதிங்க.... நீங்க நினைக்கிறாப்போல எந்தக் குழப்பத்துக்கும் நான் போகல்ல... கொழும்புக்குத் தான் போகப்போறன்.... ஸவுதிக்கு ஆளனுப்புற நல்ல தொரு ஏஜென்ஸியத்தான் தேடிப்போறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திக்குவல்லை கமால், இவருடைய முகவரி இலக்கிய உலகில் எங்கும் பிரசித்தம். இவரைப் புதிதாக அறிமுகம் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. கவிஞனாய் கதைஞனாய் எமது மண்ணை துல்லியமாகவும் தைரியமாகவும் வெளிக்கொணரும் வெற்றிப் படைப்பாளி.

இவரது வானொலிப் பங்களிப்பு காற்றோடு கலந்து விடக்கூடாது. அவையும் பதிவாக வேண்டுமென்று என்றோ சொன்னதை இன்று செயல்வடிவாக்கியதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இதில் வகை மாதிரியான பிரதிகளை தேர்ந்தெடுத்துள்ளார். புதிய நாடக கர்த்தாக்களுக்கு இவை நிச்சயம் ஆதர்சமாக அமையும்.

மக்களுக்காகவே இலக்கியம் என்ற அவரது உன்னத கோட்பாட்டின் இன்னொரு வெளிச்சக் கோபுரம் இந்த 'புகையில் கருகிய பூ'.

கமாலை ஒரு வித்தாகப் பார்த்தேன். இன்று விருட்சமாகப் பார்க்கிறேன். நாளை....

கவிஞர் யோனகபுர ஹம்ஸா
தலைவர்
திக்குவல்லை எழுத்தாளர் சங்கம்

ISBN: 955-95926-5-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org